

கல்கி
KALKI
17.5.87
ரூ. 1.50
அந்த 10 பேரின் எதிர்காலம்...?
அன்பழகன் பேட்டி

இதர எல்லா ஹேர் டைகளையும் சேர்த்தாலும் அவற்றைவிட ஏராளமான மக்கள் உபயோகிப்பது கோத்ரெஜின் தானே-பரவும் ஹேர் டை

அவற்றிற்கான 3 சிறந்த காரணங்கள்



இரண்டு நேச்சுரல் சாயல்களில் கிடைக்கிறது: பிளாக் மற்றும் டார்க் பிரவுன்

1 கோத்ரெஜின் தானே-பரவும் ஹேர்டை கேசத்திற்கு இயல்பான வண்ணத்தையும், தோற்றத்தையும் தருகிறது. இதிலே ஒரு உள்ளிணைந்த கண்டிஷனர் உள்ளது: இது கேசத்தை மென்மையோடும் படிமானத்தோடும் வைத்துக்கொள்ள உதவுகிறது. உண்மையிலேயே, நீங்களே சொன்னால் ஒழிய ஒருவரும் அறிந்துகொள்ள முடியாது.

2 இதர ஹேர் டைகளைப் போல் அல்லாமல், கோத்ரெஜின் தானே-பரவும் ஹேர்டை உபயோகிக்க எளிதானது, வசதியானது. ஆம், இது உங்கள் கேசத்தை ஷாம்பூ செய்வதுபோல் சுலபமானது.

3 கோத்ரெஜின் தானே-பரவும் ஹேர்டையின் தரத்தைப் பற்றி நீங்கள் உறுதிப்படுத்திக்கொள்ள முடியும், காரணம், இது உங்கள் கேசத்தை பாதுகாக்கும் வண்ணம் விசேடமாகத் தயாரிக்கப்பட்டது. முழுமையான பாதுகாப்பு— இதுவே, கோத்ரெஜின் உறுதியளிப்பு.

கோத்ரெஜ்® வழங்கும் தானே-பரவும் பெர்மனெண்ட் ஹேர் டை.





தனிப்பட்ட முறையில் பேட்டி கொடுப்பது என்பது அன்பழகனைப் பொறுத்தமட்டில் அரிதான ஒன்று. மேடைகளில் பேசும் போதும் சரி, எழுதும் போதும் சரி, சொல்லும் கருத்துக்களை, தெளிவோடு அழுத்தம் திருத்தமாகச் சொல்லும் அன்பழகன் இந்தப் பேட்டியில் சமீபத்திய பல நிகழ்ச்சிகளின் விளைவாகத் தி.மு.க.வின் போக்கு குறித்து ஏற்பட்டுள்ள சந்தேகங்களைத் தீர்த்து வைப்பதுடன் சில வதந்திகளையும் ஆணித்தரமாக மறுத்துரைக்கிறார்.

"ஈழத் தமிழினத்தைக் காக்க நாடகமாடினால் போதாது!"

நிருபர்கள்: இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் ஒரு பகுதியாக அரசியல் சட்ட வரிகளை எழுதி எரித்தபோது, அது இத்தனை பெரிய பின் விளைவுகளை ஏற்படுத்தும் எனத் தி.மு. கழகம் எதிர்பார்த்ததா?

பேராசிரியர் க. அன்பழகன்: நாங்கள் எதிர்பார்க்கவில்லை. அரசியல் சட்டத்தை அவமதித்ததாகவே நாங்கள் எண்ணவில்லை. நாட்டினுடைய மொத்த இறையாண்மையையோ, ஒற்றுமையையோ, சட்டம் செயல்படுவதையோ தடுக்கும் நோக்கத்தில் இந்த அறப் போராட்டம் துவக்கப்படவில்லை. அவ்வப்போது, மாநில சுயாட்சியின் அடிப்படையில் சில திருத்தங்களைக் கேட்டு வந்தாலும் தி.மு.க. அரசியல் சட்டத்தை மதிக்கிற கட்சிதான். ஆனால் அரசியல் சட்டத்தின் மூலம், எல்லா குடிமக்களுக்கும் சம உரிமை இருந்தும், இந்தி மொழி பேசாத மக்கள் மீது, அம்மொழி திணிக்கப்படுவதைத் தடுத்து நிறுத்த

வெறும் தீர்மானங்கள், வேண்டுகோள்கள், கண்டனங்கள், ஆர்ப்பாட்டங்கள் ஆகியவை மத்திய அரசின் கவனத்தைத் திருப்பாத காரணத்தால், இப்பிரச்னையின் முக்கியத்துவத்தை மத்திய அரசுக்கு உணர்த்தும் பொருட்டு, இந்திய அரசியல் சட்டத்தின் ஆட்சி மொழிப் பகுதியின் இரு வரிகளை மட்டும் தனியே அச்சிட்டு அதுவே கொளுத்தப்பட்டது. இது தேசிய அவமதிப்பு ஆகாது என்பதே எங்கள் அழுத்தமான நம்பிக்கை. பழி வாங்கும் மனப்பான்மையுடன் அதிகாரவர்க்கம் செயல்பட்டால் அண்ணா வழியில் 'எதையும் தாங்கும் இதயத்'தோடு சந்திப்போம்.

திரு: யார் ஆட்சியில் இருந்தாலும், எதிர்க்கட்சி இப்படியொரு போராட்டம் நடத்தினால், இதுபோன்ற தண்டனையைத்தானே கொடுத்திருப்பார்கள்.....?

பேராசிரியர்: அதை நான் ஒப்புக்கொள்ள மாட்டேன். குற்றம் சாட்டப்பட்ட 18,000க்கும் அதிகமானவர்களும் ஒரே விதமான அறப்போராட்டத்தில் ஈடுபட்டு, ஒரே வகையான தாளையே கொளுத்தியிருந்தும், அப்படியே அவர்கள் நீதிமன்றங்களில் வாக்குமூலங்கள் கொடுத்திருந்தும், சுமார் 9,000 பேர் தேசிய அவமதிப்பு குற்றம் புரியவில்லை என்று விடுவிக்கப்பட்டுள்ளனர். ஒரேவிதமான செயல்; ஒரேவிதமான குற்றச்சாட்டு; ஒரேவிதமான சட்டம்; ஒரேவிதமான அரசு; ஒரேவகை தகுதி கொண்ட நீதிபதிகள்; ஆனால் பாதிப் பேர் குற்றவாளிகள் என்றும் மீதிப் பேர் குற்றமற்றவர்கள் என்றும் தீர்ப்பு. தி.மு.க.வின் இந்தப் போராட்டம், அரசியல் சட்டத்தை அவமதிக்கும் நோக்கத்தில் செய்யப்பட்டதல்ல என்பதை ஆட்சியிலிருப்பவர்கள் புரிந்து கொள்ளவில்லை. இங்கே உண்மையான ஜனநாயகம் நிலவுமானால் இங்கு ஆட்சியிலிருப்பவர்கள், தி.மு.க.வின் அறப் போராட்டத்தை ஒரு குற்றமாய்க் கருதியிருக்கமாட்டார்கள்.

திரு: சமீபகாலமாக, நீதித் துறையின் தூய்மை கெட்டுப் போய்விட்டது போல, பேசியும் எழுதியும் வரும் தி.மு.க., எம்.எல்.ஏ.க்கள் நீக்கத்தை எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டுக்குப் போவானேன்?

பேராசிரியர்: நீதித் துறை முற்றிலுமாய்க் கெட்டுவிட்டதாகவோ ஆதிக்கத்துக்கு அடிபணிந்துவிட்டதாகவோ தி.மு. கழகம் கருதவில்லை. ஒருசில சூழ்நிலைகளில், அரசு தலையீடு காரணமாக நீதி தடுமாறுகிறது என்பது மட்டும் மறுக்க முடியாதது. ஆனால் மேல் முறையீட்டின் மூலமாய் நீதியை நிலைநாட்ட முடியும் என்பதில் கழகம் நம்பிக்கை இழந்துவிடவில்லை.

திரு: நீக்கப்பட்ட எம்.எல்.ஏ.க்கள் மறுபடி தேர்தலில் நிற்கத் தடை சொல்லப்படவில்லையே! ஜனநாயகத்தில் நீதிமன்றத்தைவிட மக்கள்தானே முக்கியமானவர்கள்? பதவி இழந்தவர்கள் மறுபடி தேர்தலில் போட்டியிட்டு, உறுப்பினராகலாமே! நீதிமன்றம் செல்ல வேண்டிய அவசியமேயில்லையே?

பேராசிரியர்: மக்கள் எல்லாரும் அரசியல் தெளிவு படைத்தவர்கள் இல்லை. ஓரளவு அரசியல் புரிந்தவர்களுக்கும், பல தரப்பு ஏடுகளையும் படிப்பவர்களுக்கும் மட்டுமே மக்களுக்காக நடத்தப்பட்ட இப்போராட்டத்தின் நியாயம் விளங்கும். நாங்கள் மாறுபட்ட கருத்து கொண்டவர்களிடம் எவ்வளவுதான் எடுத்துச் சொன்னாலும் அது ஓரளவுக்குத்தான் மக்களைத் தெளிவடையச் செய்யுமேயொழிய, அனைத்து மக்களையும் தெளிவடையச் செய்யாது. இடைத் தேர்தல்களில் ஆளும் கட்சியின் பண பலம், அதிகார பலம் ஆகியவற்றோடு மோதும்போது தி.மு.க. தோற்க நேருமேயானால் இந்தி வெறியர்களுக்கு அதுவே சாதகமாகவும் போய்விடலாம். மேலும் இந்தி போன்ற முக்கியமான பிரச்னைகள் விஷயத்தில், மத்திய அரசின் முழு ஆதிக்கத்திலுள்ள வானொலி, தொலைக்காட்சி போன்றவற்றின் ஒரு பக்கச் சார்பான பிரசாரங்களை ஈடுகட்டும் வகையில் வேறு எந்த ஒரு தனிக் கட்சியாலும் பிரசாரம் நடத்த முடியாது. அதுமட்டும் இன்றி, மக்களின் தீர்ப்பை எதிர்பார்த்து, மறுபடி தேர்தலில் போட்டியிடலாமென்பது உண்மையாயினும், சட்டப் பேரவைக்கு, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளை, சபையில் பெரும்பான்மை பலம் பொருந்திய கட்சி, அந்தப் பெரும்பான்மையைப் பயன்படுத்தி நீக்குவது என்னும் முறைகேட்டைத் தடுத்து நிறுத்த அது பயன்படாது. மக்களின் உரிமையைப் பாதுகாக்கவும் சட்டப் பேரவையின் அதிகார வரம்பைத் தெளிவு படுத்தவும் மேல் முறையீடு அவசியமாகிறது.

திரு: சமீப காலமாய்த் தமிழகத்தில் வெடிகுண்டு சம்பவங்கள் அதிகரித்துள்ளன. அவற்றில் தி.மு.க.வினர் சம்பந்தப்பட்டுள்ளதாய்க் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. தி.மு.க. வன்முறைப் பாதையில் நடைபோடுகிற கட்சியாக மாறி வருகிறதா?

பேராசிரியர்: வன்முறையைத் தி.மு.க. என்றுமே ஆதரித்ததில்லை. வன்முறையால் நிலையான பலன் ஏதும் கிடைக்காது என்கிற அடிப்படையில் அறப் போராட்டங்களின் மூலமே கழகம் எதையும் சாதிக்க விரும்பும். 'வேட்டு முறையை நம்பவில்லை; வோட்டு முறையில்தான் நம்பிக்கை' என்னும் அண்ணா வழியில் தி.மு.க. நடைபோடுகிறது. சமீபத்திய இந்தி எதிர்ப்புப் போராட்டம் தொடங்கும் முன்பும், தொடங்கிய பின்பும், பின்னர் கலைஞரைக் கைது செய்தபோதும் பல இடங்களில் நடந்த வெடிகுண்டு சம்பவங்களுடன் தொடர்புபடுத்திக் கழக முன்னணித் தோழர்கள், தொண்டர்கள் இளைஞர் அணியினர் பலர் மீது வழக்குகள் போடப்பட்டுள்ளன. கழகத் தலைவர் கலைஞரும், நானும் பேசிய கடற்கரைக் கூட்டத்தில் ஒரு பலமான குண்டு வெடித்தது. இன்னும் குற்றவாளி யாரென்று கண்டுபிடிக்கப்படவில்லை.

சென்னை அண்ணாசாலை அரசினர் தோட்டத்திலேயே காலை சுமார் ஏழு மணியளவில் குண்டு வெடித்து இரண்டு மூன்று பேர் இறந்தனர். அதிலும் குண்டு வைத்தவரை இன்னும் கண்டுபிடிக்கவில்லை. மதுரை பஸ் ஸ்டாண்டிலும் குண்டு வெடித்து ஒருவர் இறந்தார். இப்படிப் பல நிகழ்ச்சிகள். ஆனால் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை ஒரு வன்முறைப் போராட்டமாய்த் திரித்துக் காட்டப் பல பொய் வழக்குகள் புனையப்பட்டுள்ளன. இரண்டு நாட்களுக்குமுன், ஈரோட்டிற்குப் பக்கத்தில் ரயில் பாதையில் குண்டு வைத்த தாகக் கழக இளைஞர்கள் மீது தொடுக்கப் பட்ட வழக்கில் அவர்கள் குற்றவாளிகள் இல்லை எனத் தீர்ப்பாகியுள்ளது. இதைப் போலத்தான் பல வழக்குகளும்.

நிரு: மற்றெந்த கட்சிகளையும்விட இலங்கைத் தமிழர் பிரச்னையில் அதிக தீவிரம் காட்டிய தி.மு. கழகம் இப்போது இது விஷயத்தில் மௌனம் சாதிப்பதேன்?

பேராசிரியர்: கழகம் வாய் மூடியிருக்கிறது என்பது உண்மையில்லை. ஒவ்வொரு கட்டத்திலும் அவசியத்துக்கேற்ப அலசி ஆராய்ந்து, மத்திய மாநில அரசுகளை வற்புறுத்த வேண்டிய முறையில் வற்புறுத்திக் கொண்டுதான் இருக்கிறது. இலங்கைத் தமிழர் பிரச்னையில் தங்கள் வசதிக்கு ஏற்பச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன மத்திய மாநில அரசுகள்.... இந்திரா இருந்தவரை ஜெயவர்த்தனாவுக்குப் பயம் இருந்தது. ஜி.பி. பிரச்னையைச் சரியான முறையில் அணுகத் துணையாய் இருந்தார். ஆனால் பின்னர் நிலைமை மாறிவிட்டது. அண்மையில் மாநில அரசு, ஈழத் தமிழர் மறுவாழ்வுக்கு அளித்திட்ட நான்கு கோடி ரூபாய் நிதியை வரவேற்று, அதே சமயம், மத்திய மாநில அரசுகள் தம் மீது சுமத்தப்படும் பலவிதக் குற்றச்சாட்டுகளிலிருந்து மக்களைத் திசை திருப்ப, இப்படி ஒரு நாடகத்தை அரங்கேற்ற முனையாமல், ஈழத் தமிழினத்தைக் காத்திட இதய சுத்தியோடு முன்வருமா என்று கேள்வி எழுப்பியுள்ளார் கலைஞர். ஈழத் தமிழர் விஷயத்தில் மத்திய அரசு ஒரு திட்டவட்டமான நோக்கோடு செயல்படாமல் தமிழினத்தை ஏமாற்றி வருகிறது. மாநிலத்தில் எம்.ஜி. ஆர். அரசும் மத்திய அரசின் இந்தப் போக்கிற்கு ஒத்துப் போகிறது. இந்நிலையில் அரசாங்கங்களின் பொறுப்பற்ற தன்மையைச் சுட்டிக்காட்டுவதே கழகத்தின் தலையாய கடமை. அதைத்தான் கழகமும் செய்து வருகிறது. மேலும், பயன்படக் கூடிய சூழ்நிலை உருவாகுமானால், எப்படிப்பட்ட அறப் போராட்டத்தையும் நடத்தக் கழகம் தயாராய் இருக்கிறது.

நிரு: உள்ளாட்சி மன்றத் தேர்தலில் கணிசமாகத் தி.மு.க. வெற்றி பெற்ற பின், இது நாள்வரை பெரிதாய் ஒன்றும் சாதிக்கவில்லையே?

பேராசிரியர்: அவர்கள் தன்னிச்சையாய் செயல்பட இந்த அரசு விடவில்லையே! என்ன செய்ய? அ.தி.மு.க. அரசின் அதிகாரப் பறிப்புகளைப் பற்றி ஒரு பெரிய புத்தகமே எழுதிடலாம். அதிகாரங்களைப் பறித்துக் கொண்டபின், பதவியிலிருந்து கொண்டு என்ன சாதிக்க முடியும்? எதைச் செய்தாலும், அரசு இயந்திரம் மூலம்தானே செய்ய வேண்டும்! அதுவும் அ.தி.மு.க.வின் கையில் இருந்து கொண்டு முட்டுக் கட்டை போடும்போது இவர்கள் என்ன செய்வார்கள்? தி.மு.க. தலைவர்களால் தீட்டப்படும் திட்டங்களுக்குப் பணம் அனுமதிக்கப்படுவதில்லை; ஆனால் அ.தி.மு.க. தலைவர்கள் திட்டங்களை நிறைவேற்றக் கேட்டபடி பணம் அனுமதிக்கப்படுகிறது.



நிரு: திருப்தியில்லாத முறையில் நடந்து கொள்ளும்போது, மக்களுக்குத் தங்கள் பிரதிநிதியைத் திருப்பி அழைக்கிற உரிமை தரப்பட வேண்டும் என்பது பற்றி உங்கள் கருத்தென்ன?

பேராசிரியர்: வரவேற்கப்பட வேண்டிய ஒன்று.

நிரு: அப்படியெனில் உள்ளாட்சி மன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களைத் திருப்பி அழைக்கும் உரிமை மக்களுக்குத் தரப்பட வேண்டும் என்று சட்டப் பேரவையில் பேசப்பட்டபோது, தி.மு.க. 'அதைச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் கொண்டு வருவீர்களா?' என்று பதில் கேள்வி எழுப்பி,



• ஆபிரகாம் • சின்னசாமி • செல்வராசன் • பரிதிஇளம்வழுதி • எஸ்.பாலன்

பதவி இழந்த(?) பத்து எம்.எல்.ஏக்கள்

ஆபிரகாம்:

ஆலந்தூர் ஆபிரகாம் பரங்கிமலைப் பகுதியில் தி.மு.க. வளர்வதற்கு ஒரு முக்கிய காரணமாக இருந்தவர். தி.மு.க. ஒன்றாக இருந்தபோது எம்.ஜி. ஆருக்கும் நெருக்கமாக இருந்தவர்.

சின்னசாமி:

தர்மபுரி சின்னசாமிக்கு வியாபாரம்தான் தொழில். ஏற்கெனவே 1971—76—ல் எம்.எல்.ஏ. வாக இருந்தவர். தி.மு.க.வின் பல போராட்டங்களில் சிறை சென்றவர்.

செல்வராசன்:

பத்தாவது வரை படித்த துறைமுகப் பகுதி எம்.எல்.ஏ. வான செல்வராசன், சிறு வயதிலிருந்தே தி.மு.க.வில் ஈடுபாடு கொண்டவர். கவுன்சிலராகவும், பின்னர் துணை மேயராகவும் சிறிது காலம் சென்னை மேயராகவும் பணியாற்றியிருக்கிறார்.

பரிதி இளம் வழுதி:

பெரம்பூர் தொகுதி எம்.எல்.ஏ.வான இவர், தேர்தலில் வெற்றி பெற்ற பிறகு திருமணம் செய்து கொண்டார். விவேகானந்தர் இல்லம் பகுதியில் ஒரு குடிசையில் வசித்து வந்த இவர் திருமணத்திற்குப் பிறகே வீடு மாறினார். இவரது தந்தை இளம்பரிதி தி.மு.க.வின் மிகச் சிறந்த பேச்சாளர்களில் ஒருவர். கலைஞர் மகனான ஸ்டாலினும் ஜூனியர் பரிதியும் ரொம்ப தோஸ்த்.

எஸ். பாலன்:

எழும்பூர் தொகுதி உறுப்பினரான இவர் ஏற்கெனவே இரண்டு முறை எம்.எல்.ஏ. வாக இருந்தவர். 1959—ல் கவுன்சிலராகவும் இருந்திருக்கிறார். மெட்ரிகுலேஷன் வரை படித்த இவருக்குக் கால் பந்து விளையாட்டு என்றால் மிகவும் பிடிக்கும்.

பிரச்னையைத் திசை திருப்ப முயன்றதேன்?

பேராசிரியர்: உள்ளாட்சி மன்றங்களில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை அவமதிக்கிற முறையில் பல காரியங்கள் எம்.ஜி. ஆர். அரசால் செய்யப்படுகின்றன. உள்ளாட்சித் தேர்தல் முடிந்ததும், ஒன்றியத் தலைவர், நகர் மன்றத் தலைவர்களுக்குச் சமமாக அந்தந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கூட்டத்தில் கலந்து கொள்ள நாற்காலி போட்டு இடம் தர வேண்டுமென்றும், ஒரு தனி அறையும் தரப்படவேண்டுமென்றும் கூறப்பட்டது. (பல இடங்களில் தலைவருக்கே தனி அறை வசதி இல்லை!) இப்போது சட்ட மன்றத்திலே ஒரு கேள்விக்கு, "விழாக்களுக்கு எம்.எல்.ஏ.க்களை அழைக்கக் கூடாதென்றும் அரசியல் தலையீடு இருக்கக் கூடாது என அ.தி.மு.க. அரசு நினைப்பதே இதற்குக் காரணம்" என்றும் ஓர் அமைச்சர் கூறுகிறார். 'ஒரு சட்டமன்ற உறுப்பினர் பெயர் போடாமல் உள்ளாட்சி மன்ற விழாவே நடத்தக் கூடாது' என்று சபாநாயகர் ஆணையிடுகிறார். இப்படித்தான் ஒரு கொள்கையின்றி உள்ளாட்சி மன்ற நிர்வாகத்தைக் குழப்புகிறது அ.தி.மு.க. அரசு. இந்த நிலையில் போதுமான அதிகாரங்கள் இல்லாமல், இருந்த அதிகாரங்களையும் இழந்து, ஆளுங்கட்சியின் விருப்பங்களை நிறைவேற்றுவதைத் தம் தலையாய கடமையாய்க் கொண்டுள்ள ஆணையர்கள் இருக்கும்போது, செயலாற்ற இடர்பாடுகள் பல கொண்ட உள்ளாட்சி மன்றத் தலைவர்களைத் திருப்பி அழைப்பதற்கான ஒரு சட்டம் கொண்டு வருவது என்பது, அவர்களை மிரட்டிப் பணிய வைக்கிற செயலேயாகும். ஜனநாயகத்தில் முறைகேடாய் நடப்பவர்களைத் திருப்பி அழைக்கிற உரிமை மக்களுக்குத் தரப்பட வேண்டுமானால் அது முதலில் நாடாளுமன்ற, சட்ட மன்ற உறுப்பினர்கள் விஷயத்தில் பரீட்சித்துப் பார்க்கப்பட்டு, பிறகு தக்க திருத்தங்களுடன் உள்ளாட்சி மன்றங்களுக்குக் கொண்டு வரலாம். மக்கள் பிரதிநிதிகள் இடம் பெற வேண்டிய மாநகராட்சிகளுக்கு வெகு நாட்களாகத் தேர்தலையே நடத்தாத மாநில அரசைத் திரும்ப அழைக்கிற உரிமையை மக்களுக்குத் தரும் சட்டம் வருமானால், அது வரவேற்கத் தக்கதுதானே!

திரு: சட்டமன்ற உறுப்பினர்களின் உரிமைகள் திட்டவட்டமாய் வரையறுக்கப்பட வேண்டும் என்று ஏன் சொல்கிறீர்கள்? இது பிற்காலத்தில் பல வேண்டாத விளைவுகளை ஏற்படுத்த வழி வகுக்குமே!

பேராசிரியர்: சட்டமன்ற உரிமைகள் எவை என்பது திட்டவட்டமாய் வரையறுக்கப்பட வேண்டும். அந்த உரிமைகள் எவ்வகையிலாவது பாதிக்கப்பட்டுள்ளனவா என்பதும் விதிகளின்படி ஆராயப்பட வேண்டும். சட்டமன்ற உரிமைகளைப் பயன்படுத்தி யாராவது தண்டிக்கப்படுவதானாலும், அது நீதிமன்ற மேல் முறையீட்டிற்கு உட்பட்டது என்று ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். இங்கிலாந்து பாராளுமன்றத்தில் கூட உறுப்பினர்கள் கொண்டு வந்த பல உரிமைப் பிரச்னைகள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன. பிரச்னைகள் பாராளுமன்றம் செயல்படுவதற்குத் தடையாய் ஆனாலன்றி, உறுப்பினர்கள் செயலாற்றுவதைத் தடுத்து,



பி.பொன்னுரங்கம்



மு. ராமநாதன்



வி. கே. ராசு



ஆறுமுகம்



கா. அன்பழகன்

பி. பொன்னுரங்கம்:

ராயபுரத்தில் பிறந்து வளர்ந்த இவர் மீனவ சமுதாயத்தைச் சேர்ந்தவர். 1949லிருந்தே தி.மு.க.வில் பணியாற்றி வருகிறார். ஆறு குழந்தைகளுக்குத் தந்தையான இவர் எஸ்.எஸ்.எல்.ஸி. வரை படித்தவர்.

மு. ராமநாதன்:

கோவை மு. ராமநாதன் தி.மு.க. மேடைகளில் புயலெனச் சீறுபவர். ஓர் அச்சகத்தை நடத்தி வரும் இவருக்கு இலக்கிய தாகம் அதிகம். எம்.எல்.ஏ. ஹாஸ்டலில் இவர் இருந்தால் இவரது குரல் ஓங்கி ஒலித்துக் கொண்டிருக்கும்.

வி.கே. ராசு:

அரக்கோணம் வட்டாரம் அணை கட்டாபுதூர் கிராமத்தைச் சேர்ந்த ராசு, ஒரு விவசாயி. இரண்டு முறை எம்.எல்.ஏ. வாக இருந்தவர். வட ஆற்காடு மாவட்ட கழகத் தூண்களில் இவரும் ஒருவர்.

ஆறுமுகம்:

மதுராந்தகம் ஆறுமுகம், 1984 தேர்தலில் 89 பேர்களை எதிர்த்து வெற்றி பெற்றவர்! லாரி, பஸ்களுக்குச் சொந்தக்காரர். மிசாவில் 'உள்ளே' இருந்தவர். இவருக்கு மிகவும் பிடித்தமான விஷயம் லாரி பஸ்களை ரிப்பேர் செய்வதுதான்.

கா. அன்பழகன்:

தஞ்சாவூர் மாவட்டம் காட்டூரில் 1922—ல் பிறந்த அன்பழகன் அண்ணாமலையில் படித்தவர். படிக்கும்போதே இவரை அழைத்துக் கூட்டம் போட்டார் கலைஞர். பேராசிரியராக பணியாற்றியவர். நான்கு முறை எம்.எல்.ஏ.வாகவும், ஒருமுறை எம்.பி. யாகவும் ஒருமுறை எம்.எல்.ஸி. ஆகவும் இருந்திருக்கிறார். எழுத்து, பேச்சு இவரது உயிர் மூச்சு. தி.மு.க. ஆட்சியில் மக்கள் நல்வாழ்வு அமைச்சராக இருந்தவர்.

தகவல் தொகுப்பு: **கௌசல்யா**

செயல்பட இடையூறு ஏற்படுத்தினாலன்றி உறுப்பினர் செயலுக்குத் தவறான நோக்கம் கற்பித்துக் குற்றஞ்சாட்டுவதாய் அமைந்தாலன்றி வேறு எந்தப் பேச்சும் எழுத்தும் மன்றத்தின் உரிமையைப் பாதிப்பதாகாது என்று பலமுறை தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. சட்டமன்ற உறுப்பினர்களின் உரிமைகள், சட்டமன்ற விதிகள் ஆகியவற்றை நெறிமுறைப்படுத்த வேண்டும் என்று நான் சொல்வது இந்தக் கண்ணோட்டத்தில்தான். அறிவுத் திறனும், உயர்நோக்கமும், பெருந்தன்மையும் எல்லாச் சபாநாயகர்களிடமும் எதிர்பார்க்க முடியாது என்பதால் சட்டமன்ற உரிமைகள் வரையறுக்கப்பட்டு, அவற்றை நடைமுறைப்படுத்தும் விதிகளும் வரையறுக்கப்பட வேண்டும்.

திரு: தி.மு.க. இ. காங்கிரஸ் கூட்டணிக்கு முயற்சிகள் நடப்பதாய்ப் பேசப்படுகிறது. இப்போதைய அணியின் உறவு முறியுமா? இ. கா. வுடன் உறவு ஏற்படுமா?

பேராசிரியர்: தற்போதைய உறவு முறியவும் அவசியமில்லை. இந்திரா காங்கிரஸுடன் உடன்பாடு பற்றி எந்த ஆலோசனையும் இல்லை. அதற்கு அவசியமும் ஏற்படாது என்றே கருதுகிறேன்.

திரு: எதிர்காலத்தில் அ.தி.மு.க. — தி.மு.க. இணைய வாய்ப்பு உண்டா?

பேராசிரியர்: அதற்கு அவசியமும் இல்லை; அதனால் பயனும் இல்லை.

திரு: கலைஞர் தம் மகன் ஸ்டாலினைத் தம் வாரிசாக உருவாக்குகிறார் என்கிற குற்றச்சாட்டுக்கு உங்கள் பதில் என்ன?

பேராசிரியர்: எந்த ஓர் அரசியல் தலைவரும், ஒருவரைத் தன் வாரிசாகக் கட்சியில் திணிக்க முடியாது. அது ஆரம்பகாலத்தில், ஒரு படியாய் அமையும் என்று வேண்டுமானால் சொல்லலாம். ஆனால் அந்த நபரை ஏற்பதும், ஏற்றுக் கொள்ளாததும் கட்சித் தொண்டர்களிடமும் பொது மக்களிடமும் தான் இருக்கிறது. இயல்பாகவே, கலைஞரின் மற்ற மகன்களைவிட, ஸ்டாலினுக்கு அரசியலில் ஈடுபாடு அதிகம்; அரசியலில் ஈடுபட்டுத் தீவிரமாய்ச் செயல்படும் துடிப்பு இருக்கிறது. அவர் அரசியலில் ஈடுபடுவதை ஏன் குற்றமாய்ச் சொல்ல வேண்டும்?

திரு: கட்சி அளவில் உங்களுக்கு நல்ல மரியாதை இருந்தபோதிலும், மக்கள் மத்தியில் வோட்டு வாங்கும் 'இமேஜ்' இல்லையே! ஏன்?


பேராசிரியர்: தி.மு.க வரலாற்றில் அது பல சமயங்களில் தோல்விகளைச் சந்திக்க நேர்ந்துள்ளது. அப்போதெல்லாம் துளியும் மனம் தளராமல், தொண்டர்களை உற்சாகமூட்டி வழிநடத்திச் செல்லும் திறம் படைத்தவர் தலைவர் கலைஞர். எனக்கும் வயதாகிவிட்டது. தவிர, கட்சியில் நூற்றுக்கும் அதிகமாய் இளைய தலைமுறையைச் சேர்ந்தவர்கள் எழுச்சியுடன் செயல்பட்டு வருகிறார்கள். இந்தச் சூழ்நிலையில் எனக்கு என் இமேஜ் பற்றியெல்லாம் கவலையில்லை; தலைவர் கலைஞருக்குக் கீழே பணியாற்றுவதையே நான் விரும்புகிறேன்; அதையே பெருமையாய்க் கருதுகிறேன்.

பேட்டி: **ப்ரியன்—மௌலி**


படங்கள்: **சுபா—ரவிசங்கர்**

மேலட்டை வண்ணப்படம்: **யோகா**


சிறையிலிருந்து விடுதலையான தங்கவேலு-
சுலபமாகச் சம்பாதிப்பது எப்படி?
கதை: பட்டுக்கோட்டை ராஜா படம்: அரஸ்
டேய்! இன்னொரு தடவை தப்புத் தண்டாவே மாட்டிக் கிட்டே அஞ்சாறு வருஷம் பேட்டியைப் பிச்சுரு வாங்க ஜாக்கி-ரதை....
திருட்டுத் தொழில் வேண்டாம். உழைச்சே சாப்பிடலாம்... வழி என்ன?
தங்கவேலு அந்த யோசனையை ஏற்று...
ஜெயில்லே கல்லுடைச்சதுக்குக் கிடைச்ச கூலியை இந்தத் தொழிலுக்கு மூலதனமாக் கிடறேன்...
ஒரு டீக்கடையில்-
ஊரெல்லாம் சுத்தி பழைய பேப்பர் வாங்கிட்டு வந்தா எடைக்கு ஏத்தபடி குப்பு சாமி கடையில காசு கிடைக்கும்...!
அப்படியா?
தீர்மானத்தை அமுலாக்கி...
பழைய பேப்பர் வாங்கறது... பழைய பேப்பர் வாங்கறது...!




ஒரு நாள் எடைக்கு வந்த பழைய நோட்டுப் புத்தகம் ஒன்றைப் புரட்ட...
ஐடியா...! நன்கொடை நோட்டுப் புத்தகம்! நாமும் நன்கொடை திரட்ட ஆரம்பித்தால் என்ன?
ஆண்டவனையே முதலாக்கி, வெயிலில் அலையாமல், சுலபமாகப் பணம் திரட்ட ஆரம்பித்தான் தங்கவேலு...
சேப்பாக்கம் வெல்ஸ் ரோடு அரசமரத்தடி பிள்ளையாருக்குக் கும்பாபிஷேகம் நடத்தறதா பொறுப் பேற்றுக் கிட்டிருக்கேன்....
ஆத்திக வேஷம் போட-
நல்ல வசூல்! இன்னிக்கு நைட் ஷோ, அதுக்கு முன்னாடி முனியாண்டி விலாஸ் பிரியாணி ....
ஒரு நாள்-
சேப்பாக்கம், திருவல்லிக்கேணி வட்டாரத்தில் மட்டும் வசூல் நடத்தக் கூடாது. அதோ அந்த ஜுவல்லரி ஷாப்பில் நுழைவோம்!
கடை முதலாளி பக்தியுடன் வரவேற்று-
சுவாமிக்கு நான் என்ன செய்யணும்?
மகனே! சேப்பாக்கம் வெல்ஸ் ரோடு அரசமரத்தடி பிள்ளையாருக்குக் கும்பாபிஷேகம் நடத்தும் பெரும் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கேன்....


நல்லது! காஷ் வாங்கிவர பாங்குக்கு ஆள் அனுப்பியிருக் கிறேன். வரட் டும்.. அதுவரை பக்கத்து ஏஸி ரூமில் ஓய்வெ டுங்கள். களை ச்சுப் போயிரு க்கிறீங்க...
ஏஸி அறையின் சுகத்தில் தூங்கவேலு...
சரியான ஏமாளி இந்த ஆள்! என்ன உபசாரம்...!
சற்று நேரத்தில்...
இதோ இந்த ஆள் தான்...
சாது வேஷமா போடறே ராஸ்கல்! டூ நாட் ஒன்! காப்பு மாட்டுய்யா...
தூங்கவேலுக்கு ஒரே ஆச்சர்யம்...
ஸார்! ஜெயில் வாசம் எனக்குப் பழக்கம்தான்... கவலையில்லே. ஆனால் நான் வேஷம் போட்டதை எப்படி கண்டு பிடிச் சீங்க...?
நடை பாதையில இடையூறு இருக் கிறதா கார்ப்பரே ஷனில் ஆட்சேபிக்க சொந்தச் செலவில் வேறு இட த்தில் பிரதிஷ்டை பண்ணி, கோயில் கட்டி, கும்பாபி ஷேகம் பண்ணி னேன்....
நீ குறிப்பிட்ட அந்த பெல்ஸ் ரோடு பிள்ளையார் கோயிலுக்கு நான்தான் டிரஸ்டி!...

இலவசம்!



பாப்பாவுக்கு ஒரு பளிங்குக் கிண்ணம் —பாசத்துடன் அளிப்பது ஃபாரெக்ஸ்.



அழகான பயனுள்ள ஒரு
பளிங்குக் கிண்ணம்—
அதிலே, பாப்பா மிகவும்
விரும்பி உண்ணும். உங்களது
பாப்பாவின் சுவைமிக்க
சத்துணவு ஃபாரெக்ஸ்
வாங்குந்தோறும் இலவசம்
இப் பளிங்குக் கிண்ணம்.

இப்போது கிடைக்கிறது
தேர்ந்தெடுத்த இடங்களில்!

25/203 TML.


அந்த ஃபைல் கொடுங்க பார்ப்போம்!
பிறந்த தின வாழ்த்துக்கு ஸ்வீட் சாப்பிடுங்க!.. உங்களுக்கு எதுக்கு ஃபைல்?
போஃபோர்ஸ்


மொதல்லெ மூக்கை மிதிக்கிற பேர்வழிங்களை வீட்டுக்கு அனுப்புங்க!
ரிபைரோ
போலீஸ் துறையில் தலையீடு


மதுரை காமராஜ் பல்கலைக்கழகத்து டாக்டர்கள் 'அவுட் ஆஃப் ஸ்டாக்கு' ஆகிறார்களாமே?
கவலைப்படாதீர்கள்! இலவச சத்துணவு, இலவச பல்பொடி, இலவச வேஷ்டி, சேலை, இலவச காலணி.. இந்த வரிசையில் இலவச டாக்டர் பட்டம் இனி மாணவச் செல்வங்களுக்கு!..



கல்கி

1987 மே 17
மலர் 45 இதழ் 42
பிரபவ வைகாசி 3



மூடி ம்றைக்காதீர்கள்! பூசி மெழுகாதீர்கள்!

"ராஜீவ் காந்தியையோ அவரது அமைச்சரவையையோ பதவி நீக்கம் செய்கிற எண்ணம் எனக்கு இல்லை; அப்படிப்பட்ட வதந்திகள் பரப்பப்படுவதைக் கண்டு நான் மிகவும் விசனிக்கிறேன்" என்று ஜனாதிபதி அறிக்கை விட்டிருக்கிறார்.

"பிரதமரைப் பதவியிலிருந்து நீக்குவது என்பது நாடாளுமன்றத்தில் அவர் பெரும்பான்மை பலம் இழக்கின்ற போதுதான்; மற்றபடி அவரைப் பதவி நீக்கம் செய்ய ஜனாதிபதிக்கு அதிகாரம் இல்லை" என்று பால்கிவாலா போன்ற அரசியல் சாசன நிபுணர்களும் கூறுகின்றனர்.

அப்படியானால் பிரதமர் பெரிய தவறு செய்ததாக நிரூபணமானால் என்ன செய்வது? அவரே தமது அமைச்சரவையுடன் ராஜினாமா செய்துவிட்டு, மறு தேர்தலுக்கு ஜனாதிபதியிடம் சிபாரிசு செய்யலாம். ஆனால் அத்தகைய பண்பாடு ஒரு பிரதமரிடம் இல்லாது போய்விட்டால்? ஆமாம் சாமிகளின் மெஜாரிட்டி பலத்துடன் ஆட்சியில் அவர் நீடிக்கத் தீர்மானித்தால்? அவருக்குப் பாடம் கற்பிக்க அடுத்த தேர்தல் வரை மக்கள் காத்திருக்க வேண்டியதுதான் போலும்!

'ராஜீவ் காந்தியையோ அவரது அமைச்சரவையையோ டிஸ்மிஸ் செய்யப் போவதில்லை' என்று ஜெயில்சிங் உறுதி கூறிய போதிலும் அரசியல் சாசனம் தொடர்பாக இருவருக்கும் கருத்து வேற்றுமை இருப்பது வெட்டவெளிச்சமாகியிருக்கிறது.

'பிரதம மந்திரியின் தலைமையில் அமைந்துள்ள அமைச்சரவையின் சொற்படி கேட்டு, அதன் யோசனைகளை ஏற்று, ஜனாதிபதி செயல்பட வேண்டும்' என்று அரசியல் சாசனம் கூறுகிறது.

அதே நேரத்தில்,

'ஜனாதிபதி கோருகிற தகவல்களை அவருக்கு வழங்க வேண்டியது பிரதமரின் கடமை' என்றும் அரசியல் சாசனம் சொல்கிறது.

ஆனால் இப்போது ஜெயில்சிங் கேட்கும் பல தகவல்களைத் தர பிரதமர் மறுத்துக் கொண்டிருக்கிறார். அதற்கு அவர் கூறும் காரணம் விசித்திரமானது. 'பிரதமரின் தலைமையில் அமைந்த அமைச்சரவையின் யோசனைகளை ஏற்றுத்தான் ஜனாதிபதி செயல்பட வேண்டும் என்று இருப்பதால், எந்தெந்த விவரங்களை ஜனாதிபதிக்குத் தரவேண்டும், எந்த விவரங்களைத் தரத் தேவையில்லை என்று நிர்ணயிக்கிற உரிமையும் பிரதமருக்கும் அவரது அமைச்சரவைக்கும் உண்டு' என்று வியாக்கியானம் செய்கிறார் பிரதமர்.

இந்த விளக்கத்தை ஏற்கவே முடியாது.

ஜனாதிபதி பதவி என்பது அலங்காரப் பதவிதான். அவருக்கு அதிகாரம் ஏதும் கிடையாது என்பதும் உண்மைதான். ஆனால் அறிவுரை வழங்கும் உரிமை அவருக்கு உண்டு. இந்த உரிமை இருப்பதால்தான் பல சந்தர்ப்பங்களில் நாடாளுமன்றம் நிறைவேற்றும் சட்டங்களை அவர், மறுபரிசீலனைக்கு நாடாளுமன்றத்துக்கே திருப்பி அனுப்புகிறார். எனவே, முக்கியமான விஷயங்களில் பிரதமருக்கும் அமைச்சரவைக்கும், ஏன் நாடாளுமன்றத்துக்குமே கூட, அறிவுரை வழங்கும் உரிமை மட்டுமல்ல, கடமையும் அவருக்கு இருப்பது தெளிவு. ஜனாதிபதியின் அறிவுரைகளைப் பிரதமரும் அவரது அமைச்சரவையும் பரிசீலனை செய்து பார்த்து ஏற்கலாம், அல்லது நிராகரிக்கலாம். இறுதி முடிவெடுக்கலாம். ஆனால் ஜனாதிபதியின் அறிவுரைகளே தேவையில்லை என்றோ, அவர் அறிவுரையே வழங்கக்கூடாது என்றோ பிரதமரும் அமைச்சரவையும் கூற இயலாது. ஜனாதிபதிக்கு அறிவுரை வழங்கும் உரிமை உண்டு என்பதை ஒப்புக் கொள்வோமானால், அவருக்குத் தேவைப்படும் எல்லா விவரங்களையும் தந்தாலன்றி அவர் எப்படிச் சரியான அறிவுரை வழங்க இயலும்?

இப்போது ஃபேர்பேக்ஸ் ஊழல்; நீர்மூழ்கிக் கப்பல் ஊழல்; போஃபோர்ஸ் ஊழல் எல்லாம் விசுவரூபமெடுத்துள்ளன. இவை பற்றி ஜனாதிபதி கேட்கும் தகவல்களைத் தர ஏன் பிரதமர் தயங்க வேண்டும்? இந்தத் தயக்கமே தில்லுமுல்லுகள் நடந்திருப்பதை உறுதிப்படுத்துவது போலில்லையா? இவை ராணுவ ரகசியங்கள் என்பதால் தயக்கம் காட்டுகிறார்கள் எனில், ஜனாதிபதி முப்படைகளுக்கும் தலைவர் என்பதை மத்திய அமைச்சரவை மறந்து போனதா? அல்லது ஜனாதிபதியையே இவர்கள் நம்பவில்லையா?

இன்றைய ஸாடலைட் ஒற்றாடல் யுகத்தில், 'உஷ்! ராணுவ ரகசியம்' என்று உதட்டின் மேல் விரலை வைப்பது அபத்தம். பிரதமர், ஒளிவு மறைவின்றிப் பேசி, நடந்து கொண்டாலன்றி, லஞ்ச ஊழல்களை மூடி மறைக்க, ராணுவ ரகசியம் என்ற முத்திரை, திரையாக உபயோகிக்கப்படுகிறது என்ற முடிவுக்கே மக்கள் வர நேரும்.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்.



கல்கி

விழா மலர் 1987

அமரர் கல்கி

எழுதிய இலங்கைப் பயணக் கட்டுரை — மாலி சித்திரங்களுடன்.

காத்தாடி ராமமூர்த்தி

தயாரிப்பில் உருவான மேடை நாடகம்.

புஷ்பா தங்கதுரை

வழங்கும் மர்ம நாவல்.

வண்ண வண்ணப் பக்கங்களில் மிளிரும்......

மாலே தீவுகள்:

நெஞ்சை அள்ளும் இயற்கைக் காட்சிகள்.

சினிமா நட்சத்திரங்கள்:

சத்யராஜ் — ரேகா.

அரசியல் தலைவர்கள்:

வி. பி. சிங் — ப. சிதம்பரம்.

இசை வல்லுனர்கள்:

கன்னியாகுமரி — ஜாகிர் ஹுசேன்.

விளையாட்டு வீரர்கள்:

ஷைனி ஆபிரகாம் — செஸ் ஆனந்த்.

விண்வெளி சாகசங்கள்:

ராகேஷ் சர்மா; ருஷ்ய — அமெரிக்க சாதனைகள்.

கோகுலம் பக்கங்கள்:

வள்ளியப்பா தயாரிப்பு.

ஆன்மீக அற்புதங்கள்:

ஸ்ரீரங்கம், சிதம்பரம் — தனுசு ஓவியங்கள்.

நகைச்சுவை அம்சங்கள்:

நடனம், செல்லம், அரஸ், உமாபதி வழங்கும் வண்ணச் சிரிப்புக்கள்!

சிறுகதைகள்:

பிரபல எழுத்தாளர்களின் இருபதுக்கும் மேற் பட்ட சிறுகதைகள் — வேதா, அரஸ், மாருதி, ம. செ. முதலிய பிரபல ஓவியர்களின் வண்ணச் சித்திரங்களுடன்.

320 பக்கங்கள் : : விலை ரூ. பத்துதான்!

மே 15 ஆம் தேதி எல்லா கல்கி ஏஜெண்டுகளிடமும் கிடைக்கும். உங்கள் பிரதிக்கு உடனே பதிவு செய்து கொள்ளுங்கள். ரிஜிஸ்தர் தபாலில் பெற ரூ. 15 அனுப்பவும்.



• கே.டி. பால் பாண்டியன்

நீதி நலிகிறது?–அங்கும் ஊழல் மலிகிறது?

"நீதி தேவதைகளின் கண்கள்தான் கட்டப்பட்டிருக்கின்றனவே தவிர கைகள் கட்டப்படவில்லை" என்று கூறியிருக்கிறார் கருணாநிதி. 'நீதித் துறையில் ஊழல் மலிந்துவிட்டது' என்று வெளிப்படையாகவே கூறுகிறார் ஸீனியர் வழக்கறிஞர் கே.டி. பால்பாண்டியன். கோயமுத்தூரில் நடந்த மாநில சட்ட அறிஞர்கள் மாநாட்டில் பால்பாண்டியன் படித்த உரையிலிருந்து சில பகுதிகள்:

அங்கிங்கெனாதபடி எல்லாத்துறையையும் பற்றிக் கொண்டிருக்கும் ஊழல் பேய் இப்பொழுது நீதித்துறையையும் பற்றிக் கொண்டிருக்கிறது. நான்கு பேர் கூடுமிடங்களிலும், வக்கீல்களின் அறைகளிலும், இந்த விஷயங்கள் கிசுகிசுக்கப்படுகின்றன. நீதி வழங்க வேண்டிய நீதித் துறையே இப்படி ஊழல் பட்டுப் போனால் யாரிடம் போய் முட்டிக் கொள்வது? இந்த விஷயங்களைப் பொதுமக்களின் பார்வையிலிருந்து நீண்ட காலத்துக்கு நாம் மறைத்து வைக்க முடியாது. நீதித் துறையிலுள்ள ஊழலைப் பற்றியும் நீதியின் தரம் குறைந்து கொண்டே வருவது பற்றியும் பிரபல வழக்கறிஞரும் மகாராஷ்டிரா 'பார் கவுன்சி'லின் முன்னாள் தலைவருமாகிய வி.ஜி. பல்ஷிகர் ஒரு வழக்கின் போது சுட்டிக் காட்டியிருக்கிறார்.

நீதித் துறையில் ஊழல் என்று சொல்லும் பொழுது, அது சென்னை உயர்நீதிமன்றம், அல்லது பம்பாய் உயர்நீதி மன்றம் என்று

குறிப்பிட்டு எடுத்துக் கொள்ள வேண்டிய அவசியமில்லை. நீதித் துறையில் படர்ந்து வளர்ந்து வரும் இந்த ஊழலை அகற்ற யாரும் தீவிரமான முயற்சி எடுத்ததாகத் தெரியவில்லை. நீதித் துறை புனிதமானது, அது பற்றிக் குறை கூறிப் பேசுவதோ எழுதுவதோ தவறு என்ற ஓர் அச்சம் நிலவுகிறது.

ஊழல் எங்கே உருவாகிறது? செல்வாக்கின் மூலமும், லஞ்சத்தின் மூலமும் நீதியை வளைக்க முயலும்போதுதான் நீதித் துறையில் ஊழல் உருவாகிறது. நீதி வழங்குவோரின் நண்பர்கள், உறவினர்கள் ஆகியோரும் தங்களுக்கு நீதிபதிகளுடன் உள்ள தொடர்பை உணர்த்தியே ஊழலுக்கு வித்திடுகிறார்கள்.

அரசியல் சட்டம் 217—ன் படி மாநிலத் தலைமை நீதிபதியும் மற்ற நீதிபதிகளும் ஜனாதிபதி மூலம் நியமிக்கப்படுகிறார்கள். இவர்கள் ஒரு மாநில அரசியல் தலைமையின் ஆலோசனைப்படி நியமிக்கப்படுகிறார்களே தவிர அவர்களைத் தேர்ந்தெடுப்பதில் ஜனாதிபதியின் பங்கு ஒன்றும் இல்லை. ஆக உண்மையிலேயே, நீதிபதியை நியமிப்பது என்பது மாநிலங்களில் அரசியல் அதிகாரங்களைக் கையில் வைத்திருப்பவர்களிடம் மட்டுமே இருக்கிறது. ஆக, நீதித் துறையில் ஊழலின் பிறப்பிடமே, இந்த மாநில அரசியல் தலைமைதான் என்பது புலனாகிறது. ஒருவர் தான் நீதிபதியாக லஞ்சம் கொடுப்பாரேயானால், அல்லது நீதிபதியாக நியமிக்கப்பட்டதற்காக நன்றிப் பெருக்கு உடையவராக இருப்பாரேயானால், அவர் வழங்கும் நீதியின் தரம் எப்படி இருக்கும் என்பதை நினைத்துப் பாருங்கள்! ஆட்சியில் இருப்பவர்களின் கருத்துகளுக்குமாறுபட்ட தீர்ப்பை அவரால் தைரியமாக வழங்க முடியுமா?

நீதித் துறையில் லஞ்ச ஊழல் என்றால் அதற்குச் சாட்சி உண்டா? என்று கேட்கப்படலாம். இது இருட்டு அறையில், ஒரு குருட்டு மனிதன் கறுப்புப் பூனையைத் தேடும் கதைதான். லஞ்சம் வாங்கும் நீதிபதி சாட்சியங்களை வைத்துக் கொள்வாரா என்ன?

பிரிட்டனில் நீதிபதி ஒருவர் மீது ஏதேனும் குற்றச்சாட்டு வந்தால், மக்கள் சபை ஒரு கமிட்டி அமைத்து அதனை விசாரிக்கும்.

“பாலைவனம் மறையட்டும் சத்தியப் பூக்கள் மலரட்டும்!”



கி. வீரமணி

கி. வீரமணி (தலைவர், திராவிடக் கழகம்)

அமெரிக்காவில் நீதிபதி ஆன ஒருவர் பொது நிகழ்ச்சிகளை அநேகமாகத் தவிர்த்துவிடுகிறார். தமது எல்லையைக் குறுக்கிக் கொண்டு விடுகிறார். ஆனால் நம் நாட்டில் நிலைமை தலைகீழாக இருக்கிறது! கீழ் மட்ட நீதித்துறை நடுவராக இருக்கும்போது மக்களுக்கு அதிக அறிமுகமில்லாதவராக இருப்பவர், உயர்நீதிமன்ற உச்ச நீதிமன்ற நீதிபதி ஆனவுடன் ஏராளமான பொது நிகழ்ச்சிகளுக்கு அழைக்கப்படுவதும் அதை அவர் ஏற்பதும் சகஜமாயிருக்கிறது. இது தவிர்க்கப்பட வேண்டும். அது தவறுதாட்சண்யங்களுக்கு இடமளிக்கும். நீதிபதிகளும் மனிதர்கள்தானே? நீதிபதிகளுக்குச் சம்பளம் இதர வசதிகள் எல்லாம் ஏராளமாகச் செய்து கொடுக்கப்பட்டு அவர்கள் ஆசைகளுக்கு ஆட்படவே இடமில்லாமல் செய்துவிட வேண்டும்.

ராதா ஸ்ரீதர் (செயலாளர், தமிழ்நாடு பெண்கள் கூட்டுச் செயல் இணையம்):



ராதா ஸ்ரீதர்

நீதித் துறையில் சுதந்திரம் இந்தியாவில் சிறப்பாகவே உள்ளது. அரசியல் கட்சிகளின் செல்வாக்குகளுக்கு அப்பாற்பட்டு உயர் நீதிபதிகள் தங்கள் கருத்துக்களை நன்றாகவே எடுத்துக் கூறுகிறார்கள். கீழ்மட்டங்களிலும் இவ்வாறு இருந்தால் நன்றாக இருக்கும். அங்கு நீதித் துறை அரசியல் வாதிகளுக்குப் பயந்தே செயல்படுகிறது.

ஆர். காந்தி (மாநில வழக்கறிஞர் பெருமன்றத்தின் தலைவர்):

நீதித் துறையில் எந்தவிதமான களங்கமும் இருக்கக் கூடாது. அப்படி ஏதேனும் இருக்குமானால் அதைக் களைவது ஒவ்வொரு வழக்கறிஞருக்கும் கடமையாகும். இதை மனத்தில் கொண்டுதான் அண்மையில் சென்னையில் நடைபெற்ற வழக்கறிஞர் பெருமன்ற மாநாட்டில் என் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. இது ஆரம்ப முயற்சி. இதில் வெற்றி கிட்டுமெனில் இந்த அமைப்பு பிற்காலத்தில் விரிவுபடுத்தப்படும் என்று நம்புகிறேன்.

அரசியல்வாதிகள் தங்கள் அரசியல் ஆதாயத்துக்காக நீதித் துறையைக் களங்கப்படுத்த ஆரம்பித்துவிட்டார்கள். மேடைகளிலும் கவரொட்டி

இந்தியாவில் இது நடைமுறையில் இல்லை. நீதிபதிகள் மேல் லஞ்ச ஊழல் புகார் இருந்தால் அதை விசாரிக்கப் போலீசாருக்கும் அதிகாரமில்லை.

நீதித்துறையில் படர்ந்திருக்கும் ஊழலுக்கு ஆதாரமானவர்கள் யார் யார்? முதலாவது வழக்கு தொடுப்பவர். அடுத்தவர் அவருக்காக ஆஜராகும் வக்கீல். மூன்றாவதாக வருபவர்கள், பொது நலச் சேவையில் ஈடுபடுவது போல் தம்மைக் காட்டிக் கொள்பவர்கள். நான்காவது வகையில் பல பிரிவினர் உண்டு:

1. நீதிபதியின் உறவினர்கள், நண்பர்கள்

2. வழக்கறிஞர்களில் சிலர்.

3. பொது மக்களுக்கு நீதிமன்ற உதவி செய்து தருகிறோம் என்று சொல்லிக் கொள்ளும் சில தனிப்பட்ட நிறுவனங்கள்.

இத்தகைய எல்லாருமே இல்லாவிட்டாலும் சிலர் ஊழலின் ஏஜெண்டுகளாகச் செயல்படுகிறார்கள் என்பது நிச்சயம்.

வழக்கறிஞர்கள் நீதித் துறையில் உலவும் இந்த ஊழல் பேயை விரட்ட என்ன செய்ய வேண்டும் என்பதை யோசிக்கலாம். இப்பொழுதே பல வழக்கறிஞர்கள் சில நீதிபதிகளின் கோர்ட்டுகளில் ஆஜராவதில்லை. சில நீதிபதிகள் வருத்தத்தையும் ஆத்திரத்தையும் வழக்கறிஞர்களிடம் காட்டிக் கொள்கிறார்கள். இடைத் தரகர்களையும் நீதித் துறைக்குச் சம்பந்தப்படாதவர்களின் தலையீடுகளையும் களைந்தெறிய வேண்டும்.

உயர் நீதி மன்றத்தில் ஓர் ஊழல் கண்காணிப்புப் பிரிவு இருக்கிறது. உயர்நீதி மன்றத்தைத் தவிர மற்ற கீழ்நிலை கோர்ட்டுகளில் ஊழல்கள் நடக்காமல் பார்த்துக் கொள்வதும் ஊழல் நடந்தால் சம்பந்தப்பட்டவர்களைத் தண்டிப்பதும் அதன் வேலை. இந்தப் பிரிவு தனது பணியைச் செவ்வனே நிறைவேற்றியுள்ளதா? இல்லையென்றுதான் வருத்தத்தோடு சொல்ல வேண்டியிருக்கிறது. கீழ்நிலைக் கோர்ட்டுகளில் ஊழல் பேய் தலைவிரித்தாடிக் கொண்டிருக்கிறது.

ஒரு நீதிபதி லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுக்கு உள்ளானாலும்சாட்சியங்களைத்தேடி அதை செய்ய வேண்டும். இதைத் தவிர வேறு மார்க்கம் கிடையாது.



களிலும்கூட நீதித் துறையைக் கொச்சையாக விமர்சிப்பது அரசியல்வாதிகளின் பொழுதுபோக்கு ஆகிவிட்டது. இதை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

உயர் நீதிமன்ற முன்னாள் நீதிபதி (பெயர் குறிப்பிடப்படுவதை விரும்பாதவர்):

லஞ்ச ஊழல் இன்று சமுதாயத்தின் எல்லாத் துறைகளிலும் மலிந்துவிட்டது! லஞ்ச ஊழல் மிக்க சமுதாயத்தை ஒரு பாலைவனம் என்று கொள்வோமானால் அங்கு நீதித் துறை என்பது மட்டும் ஒரு பூஞ்சோலையாக விளங்க முடியாது. அது சாத்தியமேயில்லை. இந்தப் பாலைவனத்தின் பாதிப்பு அங்கு இருக்கவே செய்யும். எனவே ஒட்டு மொத்தமான இந்தத் தார்மீக வீழ்ச்சி எதனால் ஏற்பட்டது என்று பார்த்து அதனைக் களைவதுதான் வழியே தவிர நீதித் துறையை மட்டும் தூய்மைப்படுத்துகிறேன் என்று கிளம்புவது சிறந்த பலனைத் தராது. நாடு சுதந்திரம் பெற்றபோது காந்தியத் தலைவர்களிடையே இருந்த தார்மீகப் பற்று மீண்டும் இங்கே தோன்ற வேண்டும். அந்தத் தார்மீக மழை அடிமட்டம் வரை சொரிந்து, பரவிப் பாலைவனத்தை நனைத்து சத்தியப் பூக்களாக மக்களை மலரச்



எஸ். ராதாகிருஷ்ணன் (வழக்கறிஞர், பொதுக் காரியதரிசி தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ்):

நீதித் துறையில் உள்ள குறைபாடுகளைப் போக்க நியாயமான விமர்சனங்களை வரவேற்க வேண்டும். வழக்குமன்றங்களில்வழக்குகள் முடிந்தவுடன் தாமதம் இல்லாமல் தீர்ப்புகள் வழங்கப்பட்டால் பல பிரச்னைகள் உருவாகச் சந்தர்ப்பம் இல்லை. வழக்குகள் பல காலம் இழுத்தடிக்கப்படுகின்றன. இதைத் தவிர்த்தால் நீதிக்குக் களங்கம் வராது என்பதோடு நீதிமன்றத்துக்கு வரும் மக்களுக்குச் செலவும் குறையும்.

சமுதாய நலன் கருதித் தாக்கல் செய்யப்படும் வழக்குகளை நீதிமன்றங்கள் ஊக்குவிக்க வேண்டும். வழக்கு தாக்கல் செய்ய வசதியும் அறிவாற்றலும் இல்லாத பாமர மக்கள் இப்போது ஒரு தபால் கார்டில் நீதி கேட்டு நீதிமன்றத்துக்கு எழுதினால் கூட நியாயமான கோரிக்கைகளில் நீதி கிடைக்கிறது என்பது மகிழ்ச்சிக்குரிய விஷயம்.

நிரூபிக்க முயலுவதற்குப் பதிலாகச் சம்பந்தப்பட்ட நீதிபதியே பதவி விலகி விடுவது நல்லது. அது ஒரு சிறந்த மரபினை உருவாக்கி அந்தப் பதவிக்குக் கௌரவத்தைப் பெற்றுத் தரும்.

ஒரு நீதிபதியைப் பதவியிலிருந்து நீக்க அரசியல் சட்டத்தில் இடமில்லை. ஒரு நீதிபதி தவறு செய்தால் பாராளுமன்றத்தில் எச்சரிக்கை செய்யலாமே தவிர, குற்றவியல் சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க முடியாது.

அப்பொழுது என்னதான் செய்வது? நீதிபதிகளின் நடத்தைகளைக் கண்காணிக்க ஓர் அமைப்பு தேவை.

கீழ்க்கண்ட சில நெறிமுறைகளைப் பின்பற்றினால் நீதித் துறையில் ஊழல் விவகாரங்கள் குறையும்:

1. எந்த ஒரு வழக்கறிஞரும் ஒரு நீதிபதியோடு நெருக்கமான தொடர்பு ஏற்படுத்திக் கொள்ளக் கூடாது.

2. ஒரு நீதிபதியின்மேல் ஊழல் குற்றச்சாட்டு வருமேயானால் அவரை நீக்கும் வழியை வழக்கறிஞர்கள் கண்டு பிடிக்க வேண்டும்.

3. நீதிபதிகள் விளையாட்டு, மனமகிழ் சங்கங்களுடன் தொடர்பு வைத்துக் கொள்ளலாமே தவிர மற்ற எந்தவித கிளப்புகளுடனும் தொடர்பு வைத்துக் கொள்ளக் கூடாது.

4. ஒரு நீதிபதியின் முன்னால் உள்ள வழக்கை வேறு ஒரு நீதிபதிக்கு மாற்ற வேண்டும் என்று வழக்கறிஞர் விரும்பினால் அதை உடனே வேறு நீதிபதிக்கு மாற்றிவிட வேண்டும்.

இந்தக் கட்டுரையின் நோக்கம் யாரையும் அவமதிப்பது அல்ல. நல்ல எண்ணங்களுக்கு, ஆரோக்கியமான மரபுகளுக்கு இக்கட்டுரை வித்திட வேண்டும். மீண்டும் பல்கிவாலா கூறியதையே இங்கு நினைவு கூர வேண்டியிருக்கிறது. "தவறான நியமனங்களாலும் ஊழல் பேய்களினாலும் நீதியின் தரம் குறைந்து கொண்டே வரும் இந்தப் போக்கை உடனே தடுத்து நிறுத்தாவிட்டால், கோர்ட்டு வராந்தாக்களில், கறுப்புக் கோட்டு மாட்டிய இடைத்தரகர்கள் மட்டுமே நீதிபதிகளுக்கு நீதியை விற்க உதவி செய்து கொண்டிருப்பார்கள்!"

தொகுப்பு: **கௌசல்யா**

படங்கள்: **கே.வி. ஆனந்த்**

அடுத்த இதழ்

திருச்சி மாவட்டத்தில் கல்கி – I



அனாதைகளாய்த் தவிக்கும் பத்தாயிரம் மக்கள்! — கவர் ஸ்டோரி

மாவட்டத்தைச் சுற்றி...... — ஒரு ஹாலிடே விசிட்!

முற்றுப் பெறாத முக்கொம்பு — ரெய்டுக் கட்டுரை





சின்னபூவே மெல்லபேசு

காதல் — அதுவும் காலேஜ் காதல் என்ருல் எப்படி ஆரம்பிக்க வேண்டும்? போட்டா போட்டி — படிப்பில் அப்புறம் நடனத்தில் — வரிசையான மோதல்கள்.... முடிவில் காதல்! ரைட்.

காதல் ஆரம்பித்ததும் வில்லன் வேண்டுமே — அது பெண்ணைப் பெற்றவராயிருந்தால் இன்னும் நல்லது. டபிள் ரைட்!

இப்பொழுதெல்லாம் ஒரே ஹீரோவை நம்ப முடிவதில்லை. இரண்டாவது ஹீரோ போட்டால் பரவாயில்லை. அவ்வளவு தானே. பிரபுவைக் கேட்டு விடுவோம்!

மேற்சொன்ன தமிழ்ச் சினிமா விதிகளை மீருமல் — அதேசமயம் துடிப்பாகக் கதை சொல்வதில் வெற்றி பெற்றிருக்கும் ராபர்ட் ராஜசேகரனுக்கு முதலில் கைகொடுப்போம்.

வகுப்பில் மாணவர் முதல் மார்க் வாங்குவாரா? மாணவி முதல் மார்க் வாங்குவாரா? என்ற போட்டியும், அதை அடுத்து அடுக்கப்படும் காட்சிகளும் சிடுமூஞ்சிகளுக்குக் கூட கிச்சுகிச்சு மூட்டும். கலகலப்பாகப் போய்க் கொண்டிருக்கும் கதையில் சுதா சந்திரனின் கண்ணீர் ததும்பும் முகமும், சதா சாராய சோக பிரபுவும் நுழைந்தவுடன் அவுன்ஸ் கணக்குப் பண்ணி 'செண்டிமெண்ட்' மருந்து. பிரபுவின் முன்கதையை வெகுசீக்கிரமே நாம்யூகம்செய்துவிடுவதால், அந்தஃபிளாஷ் பேக் வரும்போது கொஞ்சம் எரிச்சலாகக் கூட இருக்கிறது. பிரபுவை வில்லன்கள் அடித்துப் போட்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட, ஆக்ஸிஜன் ட்யூபைக் கூடப் பிடுங்கிப் போட்டுவிட்டு, ரத்தம் சொட்ட, பிரபு ஆஸ்பத்திரியிலிருந்து வெளியேறி, ஆட்டோவில் கார்களைத் துரத்தும் க்ளைமாக்ஸ் (இவர் சூப்பர்மேனு என்ன?) மன்னிக்கக் கூடிய அபத்தம்.

முடிக்குமுன் சில புதுமுகங்கள் பற்றி:

இளைஞர் ராம்கியின் கால்கள் டான்ஸுக்காகச் சுலபமாக வளைகின்றன. கைகள் சண்டைக்காக ஆவேசத்தோடு எகிறுகின்றன. மெலிதான பெண்மை பூசப்பட்ட முகம் கூடுதல் பாயிண்ட். நர்மதா அடுத்த படத்தில் இம்ப்ரூவ் செய்வார் என்று நம்பி வரவேற்போம்.

புதுசு புதுசாய் வரும் இசையமைப்பாளர்கள் வரிசையில் எஸ்.ஏ. ராஜ்குமார் அபாரமான கைவரிசை காட்டியிருக்கிருர். பாடல்கள் எழுதியதும் அவரே எனும் போது இரண்டாவது புருவத்தையும் தூக்குகிறோம். ஆனுலும் ஒரு படத்துக்குப் பத்துப் பாடல்களா!

பாஸன்ஜரா, எக்ஸ்பிரஸா என்று நிச்சயமாய்ச் சொல்ல முடியாத படம்.

— ஜெயமன்மதன்

நிழல் யுத்தம்

பாலகுமாரன்

—6—

"உட்காரேன். ஏதாவது பேசிண்டிருக்கலாம்."

"வேண்டாம்."

"ஏன்?"

"யாராவது ஏதாவது நினைச்சுப்பா."

"புருஷன் பொண்டாட்டி பேசக்கூடாதா.. சௌந்தரம்?"

"ஊர் ஜனம் மொத்தமும் இந்த மாடியையே பார்த்திண்டிருக்கும். இன்னும் என்ன பேச்சு அங்கேன்னு யாராவது குரல் கொடுப்பா. எதுக்கு வம்பு?"

"என்ன பண்ணணுங்கறே?"

"கோபிச்சுக்க வேண்டாம். விளக்கணைச்சுட்டுப் படுத்துக்குங்கோ. நான் கால் புடிச்சு விடறேன்."

"சங்கரன் விளக்கணைடா முதல்லே..." கீழேயிருந்து சொல்லி வைத்தாற் போல் அப்பாவின் குரல் கேட்டது. குரல் கேட்ட க்ஷணம் அருவருப்பு உடம்பு முழுவதும் மண்டிக் கொண்டது. அநாகரிகம் பிடித்த நாய்கள். உள்ளே சீற்றம் ஓடிற்று.

சங்கரன் விளக்கணைத்தான். யோசித்தான்.

"கடை வீதிக்குப் போறேளா?"

"ம்ம்..."

"இங்கேயே சொல்லிண்டு போங்கோ."

"ஏன்...? நீயும் கூட வாயேன்."

"வேண்டாம். யாராவது ஏதாவது நினைச்சுப்பா..."


"ச்சீ வா..."

"உங்களுக்குப் புரியலே. வேண்டாம்."

"கடைவீதிக்குப் பொண்டாட்டி துணையா? நன்னாயிருக்கு போ... வேணுங்கற சாமான் லிஸ்ட் கொடு. வாங்கிண்டு வருவான்."

"கூட்டிண்டு போனால் என்னப்பா?"

"ரொம்பத் தெரிஞ்சவாளுக்குத்தான் பத்திரிகை கொடுத்துக் கல்யாணத்துக்குக் கூப்பிட்டது. மாயவரம் முழுக்கக் கூப்பிடலே. உன்னையும் அவளையும் கடை வீதில பார்த்துட்டு 'என்ன புள்ளைக்குக் கல்யாணமாச்சா'ன்னு எவனாவது கேட்பான். நான் ஆமான்னு மோட்டு வளையைப் பார்த்துப் பதில் சொல்லணும். அவளை உள்ளே அனுப்பு."



கடற்படைக் கப்பல் தளத்தில் நின்றதும் ஸோல்ஜர்கள் தாவிக் குதித்துத் தம் மனைவி தேடிப் புறாவாய்ப் பறந்து ஓடி இறுக்கிப் பிணைத்துக் கொண்டு கூத்தாடும் காட்சிகள் நினைவுக்கு வந்தன.

குடும்பத்தைப் பிரிந்து வெயிலில் கறுத்துக் கிடந்த ஸோல்ஜர் ஒருவன் வரப் போகிறான் என்று தெரிந்து, ஹார்பருக்கு வந்த மனைவி, அவன் குழந்தைகள், சங்கரனிடம் அவன் வருகை பற்றி விவரம் கேட்டனர். தொலைவில் கப்பல் நங்கூரமிட்டிருக்கிறது. நாளை ஹார்பர் வரும் என்றதும் விசனம் கொண்டனர். இருநூறு மைல் தாண்டி வந்த குழந்தைகளையும் அந்தப் பெண்ணையும் தன்னோடு தங்க வைத்து ஹார்பருக்கு அழைத்துப் போய்க் கப்பலோடு போன் தொடர்பு கொண்டு, ஸோல்ஜருக்கு இவர்கள் வருகை தெரிவித்துக் காத்திருந்தார்கள்.

"உயிருக்கு ஆபத்தில்லையே... காயம் ஒன்றும் இல்லையே...? உண்மைதானா? என் கடவுளே! உனக்கு வந்தனம்," பெண் நடு ஹார்பரில் சிலுவையிட்டாள். தவித்தாள். ஒரு கால் இழந்து கட்டைகள் அக்குளில் வைத்து, "விடியா" என்று அவன் எதிரே வந்ததும் வெறி பிடித்தவளைப் போல் பாய்ந்து அவனைத் தழுவிக் கொண்டாள்.

கண்ணும் காதும் பொசுங்கிப் போயிருந்தன. இடது காலைச் சுத்தமாய் நறுக்கிப் போட்டு விட்டார்கள். கண்ணி வெடி மிதித்து விட்டானாம்.

முதிர்ந்த வாலிபனாய்ப் போருக்குப் போனவன் முடமாய், செவிடாய், அரைக் குருடாய் வந்திருக்கிறான்..

ஹார்பர் மொத்தமும் அந்தத் தழுவலை, முத்தமிடலைப் பிணைந்துப் பிணைந்து கதறியதை வேடிக்கை பார்த்தது.

உறவு பிரிந்த துக்கம், நோய், துன்பம் உலகம் முழுவதும் பொது. இந்த ஊர் மட்டும் ஏன் இதற்கு இப்படி மரபு விதித்திருக்கிறது. அன்பும் காட்டாது, அழுகையும் காட்டாது வெறும் கடுகடுப்பாகவே ஏன் மாறிவிட்டது?

அன்றிரவு அந்தக் குடும்பம் அங்கே அவனோடு தங்கியது.

சங்கரன் இருப்பதை அவர்கள் லட்சியமே செய்யவில்லை – நூற்றுக்கணக்கில் முத்தங்கள் பரிமாறப்பட்டன.

அவன் குழந்தைகளை வெளியே அழைத்துப் போனான். டஃப் பூட்ஸ் வாங்கிக் கொடுத்தான். லாரல் ஹார்டி படம் பார்த்தார்கள்.

அந்தக் குடும்பம் தன் ஊருக்குக் கிளம்பும் போது விடியா கூறினாள்: "நண்பனே, நீ இந்தியன் என்று அறிகிறேன். இந்த இரண்டு தினங்கள் என் வாழ்வில் கிடைத்த இன்பம், நிம்மதி, சந்தோஷம், உன் குடும்பத்திலும் நிலவப் பிரார்த்திக்கிறேன், சாகும் வரை உன்னை என்னால் மறக்க முடியாது ஷாங்கி."

"அன்பு என்பது அற்புதம் ஷாங்கி. அன்பு குறையக் குறைய யுத்தம் வருகிறது. யுத்தம் தீவிரமடைய அன்புத் தாகம் அதிகரிக்கிறது. போதும்! யுத்தம் போதும்! இனி உலகத்தில் எங்கும் எதன் பொருட்டும் யுத்தம் வரக் கூடாது. வரவே கூடாது!"



— ஸோல்ஜர் காரில் ஏறும் போது பேசினான். விடைபெறக் கைகுலுக்கினான். குழந்தைகள் முத்தமிட்டன. லிடியா ஷாங்கியைக் கட்டித் தழுவி, கன்னத்தில் முத்தமிட்டாள். சங்கரனின் கண் கலங்கி, கன்னங்களில் ஜலம் வழிந்து தரை தொட்டது.

மாயவரத்தில் இருக்கிற நான்கு சகோதரிகளின் மொத்த உருவமாய் லிடியா கண்களுக்குத் தோன்றினாள்.

ஆனால் மாயவரம் வேறு. ஐரோப்பா வேறு.

நாலு வருடங்கள் நாயாய் ஓடிச் சம்பாதித்த காசும், தங்கமும் மாப்பிள்ளைகளின் திமிரைக் குறைக்க வாரியிறைக்கப் பட்டன.

"என்ன ரசம் இது... உப்பு இல்லாத..." அப்பா ஒருநாள் மருமகளைப் பார்த்துச் சீறினார்.

"உப்பு இல்லியா... போட்டேனே...?"

"உப்பு போட்டியா... இந்தா நக்கிக் குடி. உப்பு இருக்கா இல்லியான்னு தெரியும்." சொம்பு ரசத்தை அப்பா முற்றத்தில் வீசினார்.

கூடச்சாப்பிட்டுக்கொண்டிருந்தசங்கரன் நெற்றிக்குள் கோபம் கொப்பளித்தது. கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டான். பயத்தில் தத்தளிக்கிற மனைவியைப் பார்த்தான். மெல்ல அப்பாவிடம் திரும்பி எச்சில் கையை நீட்டிப் பேசினான்.

"ஐ வார்ன் யூ... பிஹேவ் யுவர் ஸெல்ஃப்."

"என்ன... என்னடா சொன்னே...? பிச்சிடுவேன். உன் ஆட்டத்தை உன் பொண்டாட்டியோட நிறுத்திக்க."

"அவள் என் வொய்ஃப். அந்த மரியாதையோட பேசு."

"என்னடா பண்ணுவே?"

"இனிமேல் உப்பு இல்லாம சமைக்கச் சொல்லுவேன். உங்களுக்கெல்லாம் சொரணை ரொம்ப ஜாஸ்தியாப் போச்சு. அதைக் குறைக்கணும்னு சொல்லுவேன்."

"பெத்த அப்பனைப் பார்த்தா சொல்றே?"

"உன்னைவிட அந்தப் பொண்ணு இம்பார்ட்டெண்ட் எனக்கு. போட்டதைச் சாப்பிட்டுட்டுப் போ."

"சொல்லிக் கொடுத்தாளா?"

"சொல்லிக் கொடுக்கப்பட்டிருந்தால் இந்த நேரம் உன் முகத்திலே அடி விழுந்திருக்கும். சுயமா யோசித்ததால் பொறுமையாகப் பேசறேன். உன் தர்பார் உன்னோட இருக்கட்டும்."

"என் வீட்டில் என் வீட்டுச் சோத்தைத் தின்னுட்டு எனக்கெதிராப் பேசறயா நாயே."

சங்கரன் எழுந்தான். தட்டு மிச்சத்தைத் தகப்பன் தலையில் கவிழ்த்தான். "இது உப்பில்லாத ரசஞ்சாதம். உப்பு இல்லாத சோறு எப்ப போடுவான்னு உனக்குத் தெரியும். போட்டாச்சு, குட்பை."

அடுத்த பத்தாவது நிமிடம் தன் சட்டைத் துணிமணிகளுடன், பாத்திரப் பண்டங்களுடன் பெண்டாட்டியின் கைபிடித்துத் தெருவில் இறங்கினான். மாட்டு வண்டி பிடித்து ஸ்டேஷன் வந்து, ரயில் ஏறிச் சென்னைக்கு வந்தான். அடுத்த வாரமே பம்பாய்க்குப் பயணமானார்கள்.

இந்தியா சுதந்திரம் அடைந்தது.

"ஆயிரம் இருக்கட்டும். பெத்தவா மேல் அப்படி சாதம் போடலாமா...? பாவமில்லையா?" ஒரு வருடம் கழித்துச் சௌந்தரா கேட்டாள்.

"உனக்குப் புரியலே சௌந்தரா... உங்களுக்குக் குடும்பம் தெரியலே. உனக்கு நீ, எனக்கு நான். இதுதான் முதல். இதுதான் அச்சு. இதுதான் குடும்பத்து ஆணி வேர். இதை அசைக்க விட மாட்டேன்.

"வேத்தாள் சொல்லோ வேத்தான் கையோ தன் பெண்டாட்டி மேல் படாமல் காப்பாத்தறது புருஷன் வேலை.

"வேறு பொண்ணு உடம்போ, வேறு வீட்டுச் சாப்பாட்டு ருசியோ புருஷனுக்கு வராத காப்பாத்தறது பொண்டாட்டி வேலை.

"இதைச் செய்யாத வேறு எதைச் செய்தாலும் அது பாவம்."

"பெத்தவா முக்கியம் இல்லையா?"

"பொண்டாட்டிக்கு அப்புறம் பெத்தவா. புருஷனுக்கப்புறம் உடம் பொறந்தான், உறவு, ஊர். என்னை மதிக்கிறதுக்கு அர்த்தம் உன்னை மதிக்கிறது. உன்னைக் கைகூப்பி நமஸ்காரம் பண்றதுக்கு அர்த்தம் என்னை நமஸ்காரம் பண்றது. உனக்கு ஓர் அவமரியாதை வர விட மாட்டேன். நான் அசிங்கப்படும்படி நீ விடப்படாது."

"எங்கக் கத்துண்டேள் இதெல்லாம்."

"ஐரோப்பாவில்..."

"அங்கே பொம்மனாட்டியெல்லாம்..."

"அவுத்துப் போட்டு நிப்பான்னு பேசிண்டாளா? சுயமரியாதைன்னு ஒரு விஷயம் ஐரோப்பாவில்தான் உண்டு. யுத்தம் கூட ஒரு சுயமரியாதை. யுத்தம் பார்க்கிறவனுக்குத்தான் சுயமரியாதையுடைய உண்மையான அர்த்தம் தெரியும். மிரட்டலுக்குப் பணியாத போது யுத்தம். அடிக்க அடிக்க வாங்கிண்டு பகவான் செயல்னு உட்கார்றவனுக்குச் சுயமரியாதையும் தெரியாது. பதில் மரியாதையும் வராது."

"யுத்தம்னா எப்படி டங்டங்னு கத்திச் சண்டையா?"

"டைவ் பாம்பர்ஸ்னு கேள்விப்பட்டிருக்கியா...? மிஷின்கன் போட்டோவாவது பார்த்திருக்கியோ... ஆன்டி ஏர் கிராஃப்ட் கன். டார்பிடோ. நான் சொல்லித் தரேன். டாங்க்ஸ் பத்தி முதல்லே சொல்றேன். ஜெனரல் பேட்டன்னு ஒருத்தர்..."

சௌந்திரா கரு தாங்கி நடந்தபோது இரண்டாம் உலகப் போர் பற்றிச் சங்கரன் விரிவாகச் சொன்னார். படம் போட்டுக் காண்பித்தார்.

அர்ஜுனன் மனைவி சுபத்திரைக்குக்

கிருஷ்ணர் வீரக்கதைகள் சொல்ல, அவள் வயிற்றில் உள்ள அபிமன்யு உம் கொட்டிஞனும். லலிதா உம் கொட்டினுளா என்று தெரியவில்லை. உதிரத்திலிருந்து வெளிப் பட்டபோது அழவில்லை.

''பேபி இஸ் நாட் க்ரையிங், பேபி இஸ் நாட் க்ரையிங்'' என்று டாக்டர்கள் பதறினூர்கள். சுள் சுள் என்று குழந்தையின் பிருஷ்டத்தில் அடித்தார்கள். குழந்தை வீறிட்டுக் கதறிற்று. பம்பாயில் வசதியான நர்ஸிங் ஹோமில் சங்கரனுக்கும் சௌந்தராவுக்கும் லலிதா ஸ்ரீமந்தப் புத்திரியாக ஜனித்தாள்.

'அழாத பொறந்த பொண்ணுச்சே என் தங்கம்... அதட்டினல் பொறுக்காதே என் பட்டுச் செல்லம்!' அப்பன் கொஞ்சலும், அம்மையின் சீராட்டலும் பரபரக்கிற பம்பாயின் வளமும் லலிதாவை அறிவுச் சுடராய் வளர்த்தன.

சங்கரனுக்குப் பெரிய துணி மில்லில் செக்யூரிடி ஆபீஸர் வேலை. கொஞ்சம் ஃபிரஞ்சும், நிறைய ஆங்கிலமும் கூரிய மூளையும் உடைய தமிழன், உலகம் சுற்றி அனுபவம் பெற்ற இளைஞன், பம்பாய் நகரம் கொடுத்த சவாலைச் சுலபமாய் ஏற்ருன்.

பங்களா மாதிரி குவார்ட்டர்ஸும் குழந்தைக்குப் படிக்க கான்வெண்ட்டும் அதிகாரமும் பணமும் சூட்சுமமும் இதற்கெல்லாம் அடியில் குடும்பப் பாசமும் கொண்ட சங்கரன் குடும்பம் சந்தோஷமாக இருந்தது.

வேலை முடித்து வரும் புருஷனுக்குக் கண்ணுடி டம்ளரில் இரண்டு பெக் விஸ்கி ஊற்றி, சோடா கலந்து தரச் சௌந்தரம் கற்றுக் கொண்டாள். இறுக்கக் கொண்டை போட்டு வாயில் புடைவையும் லேசாய்த் தடவிய உதட்டுச் சாயமும் ஒற்றைச் சங்கிலியுமாய்ப் பார்ட்டிக்குப் போகப் பிடித்திருந்தது. வாழ்க்கை ரம்யமாய் இருந்தது.

குழந்தைக்குப் பத்து வயது ஆன போது மாயவரம்பற்றிய கதைகளைச் சொன்னூர்கள். ஹிந்தியில் கவிதையும் ஆங்கிலத்தில் கட்டுரைகளும் இசைக்கு பியானேவும் பழகி, மனமும் உடலும் பெற்ரேர் கொடுத்த செல்லத்தில் பூரித்துப் போய்க் குதிரைக் குட்டி போல் வளைய வந்து கொண்டிருந்த லலிதா, 'மாயவரம் போகலாம்மா இந்தக் கோடைக்கு!' என்றதும், 'போனுல் என்ன?' என்று தோன்றிற்று.

மாயவரம் மாறவில்லை. மாப்பிள்ளைகள் மாறவில்லை. அடி தாங்கப் பெண்டாட்டிக்கு வலுவில்லை என்பதால் பிள்ளைகளை அடித்துக் கொண்டிருந்தார்கள். 'எம் புள்ளைக்குப் பண்ணிக்கிறியாடா உம் பொண்ணை' – அக்கா வாய் விட்டுக் கேட்டாள்.

அடித்து, கடித்து வளர்க்கப்பட்ட அந்தப் பிள்ளை தெதறித் தெதறிப் பேசிற்று. தங்கையைப் 'பொட்டச்சி' என்று பல்லைக் கடித்துத் தலையில் குட்டிற்று.

சங்கரன் பதில் சொல்லாது பம்பாய் திரும்பி விட்டார். பெண்ணின் எதிர்காலம் பற்றிக் கவலைப்பட்டார்!

(தொடரும்)

மாதம் ஒரு மாவட்டம்



வடார்க்காடு மாவட்ட மக்களுக்கு நினைவுபடுத்துகிறோம்!

கல்கி ஏற்றிருக்கும் சமுதாயப் பணியில் பதினைந்தாவது மாவட்டமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது வடார்க்காடு மாவட்டம்தான். எனவே, உங்கள் மாவட்டம் பற்றிய பிரச்னைகளும், குறைகளும் அநீதிகளும், அக்கிரமங்களும் தவிர, சாதனைகளும் ஆலோசனைகளும் கல்கி அலுவலகத்திற்கு வந்து சேர வேண்டிய கடைசித் தேதி: 20.5.87 என்பதை மீண்டும் நினைவுபடுத்துகிறோம்.

உடனடியாக எழுதியனுப்புங்கள்!

– ஆசிரியர்

அந்த நாள் எனக்கு நன்ருக ஞாபகம் இருக்கிறது. நான், அம்மா, அப்பா, என் தங்கை அமலா எல்லோரும் ஒன்ருய் உட்கார்ந்து உணவருந்திக் கொண்டிருந்த போது முற்றத்தில் ஏதோ 'பொத்' என்று விழுந்தது. தொடர்ந்து 'கீச் கீச்' என்று சப்தம்.

அங்கிருந்த கம்பி வலேயின் மீது காகம் ஒன்று வட்டமடிக்க — நிமிடத்தில் அங்கே



நடந்துவிட்டிருந்த நிகழ்ச்சி எங்களுக்குப் புரிந்து போய்விட்டது.

பாவம் ஓர் அணில் பிள்ளே எப்படியோ அந்தக் காகத்திடம் சிக்கிவிட அதைக் கால்களால் பற்றிக் கொண்டு அது பறந்து வந்த போது, காகத்தின் துரதிர்ஷ்டமோ அல்லது அந்த அணில் பிள்ளேயின் அதிர்ஷ்டமோ, பிடி நழுவிக் கீழே விழுந்திருக்க வேண்டும்.

அப்படி விழுந்ததும் கம்பிவலேயின் இடுக்கு வழியே அணில் பிள்ளே உள்ளே வந்து விழுந்து விடக் காகம் அதற்குள் நுழைந்து வர முடியாமல் ஏமாற்றத்தோடு தவித்தது.

அப்பா உடனே சிபிச் சக்கரவர்த்தி ஆகிப் போனுர். அவசரமாகக் கையை உதறிக் கொண்டு முற்றத்துக்கு ஓடினுர்.

அமலா சட்னிக் கரண்டியை எடுத்துக் காகம் பறந்த திசையை நோக்கி விட்டெறிந்தாள்.

எல்லோருமே முற்றத்தை முற்றுகை இட்டபோது — அணில் பிள்ளே சப்தம் போடுவதைக்கூட நிறுத்திப் பிரக்ஞை அற்றிருந்தது. காகத்தின் கால் பதிந்த இடங்களில் சின்னச் சின்னதாகச் சில இரத்தப் பொட்டுக்கள்.

ஒவ்வொருவருக்கும் கையும் காலும் துடித்ததே தவிர உரோமப் பந்தாகத் தோன்றிய அதைத் தொட்டுத் தூக்குவதற்கு யோசனே.

நான்தான் மெதுவாக அதை எடுத்துக் கூடத்திலிருந்த ஊஞ்சல் பலகை

அம்ம

யின் மீது கொண்டு போய் வைத்தேன். கொஞ்ச நேரம் எந்த அசைவும் இல்லே.

எல்லோரிடத்திலும் ஒரு சஸ்பென்ஸ் பார்வை.

அப்பொழுதுதான் யாருமே எதிர்பாராத அந்த அற்புதம் நிகழ்ந்தது.

அவ்வளவு நேரம் கோமா ஸ்டேஜிலேயே இருந்த அணில் பிள்ளே திடீர் என்று உயிர் பெற்றது போல் எழுந்து தொப்பென்று ஊஞ்சலே விட்டுக் குதித்தது.

நாங்கள் பார்த்துக் கொண்டிருந்த போதே மெள்ள மெள்ள நகர்ந்து கூடத்தின் ஒரு கோடியில் இருந்த பெரிய பத்தாயத்தின் அடியில் போய்ப் புகுந்து கொண்டு விட்டது.

அமலா அவசரமாகக் கத்திஞள். "என்ன எல்லாரும் பார்த்துட்டே நிக்கறீங்க. இப்போ அந்த அணில் பிள்ளேயை என்ன செய்யறது. எங்கேயாவது இண்டு இடுக்கில் போய் அது செத்துத் தொலேச்சா நாளேக்கு வீடே நாறிப் போகுமே."

அவன் போட்ட சப்தத்திலும் அர்த்தம் இருப்பதாகத் தோன்றவே என்ன செய்வது என்று யோசித்தோம்.

மறுபடியும் நான்தான் கொல்லைப்புறம் போய் ஒரு நீளமான குச்சியைத் தேடிப் பிடித்துக் கொண்டு வந்தேன்.

மெதுவாகப் பத்தாயத்தின் அடியில் விட்டுப் பக்கவாட்டில் தள்ளினேன்.

"கீச்.... கீச்...."

குச்சியின் மறுமுனைதான் வெளிப்பட்டது. அணில் பிள்ளையைக் காணோம்.

மீண்டும் மீண்டும் முயல....

குச்சியின் மற்றொரு முனையும் கீச் கீச் சப்தமும்தான் வெளிப்பட்டுக் கொண்டிருந்தன.

"டேய் வேணும் விட்டுர்ரா. ஒருவேளை இந்தக் கம்பு பட்டே அதுக்குக் கண்ணு மூக்கு ஏதேனும் சேதம் ஆயிட்டா அப்புறம் அநியாயமா ஒரு ஜீவனைச் சித்திரவதை செய்த பாபம்தான் மிச்சமாகும்" — அம்மா கெஞ்சினாள்.

அவள் குணமே அலாதி. தேள் பூரான் கரப்பான் பூச்சிகளைக்கூட ஒரே அடியில் கொன்றுவிட வேண்டும். பல தடவை அடித்து அவை துடித்துச் சாகும்படி விடக் கூடாது. அதுதான் மகா கொடுமையாம். ஒரு ஜீவனைச் சித்திரவதை செய்யும் பாபமாம்!

ஊர்க்க அணில்

அப்படிப்பட்ட அம்மா இப்பொழுது அணில் பிள்ளை விஷயத்திலும் கருணையோடு நடக்க முற்பட்டதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை.

நானும் என் முயற்சியைக் கைவிட்டேன்.

மதியத்திற்கு மேல் எல்லாரும் அதை மறந்தும் போய்விட்டோம்.

இதெல்லாம் நடந்து இரண்டு நாட்கள் ஆகியிருக்கும்.

அன்றைக்கும் அதே போல் நாங்கள் கூடத்தில் உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தோம்.

இரண்டு நாட்களாக எங்கள் கண்ணிலேயே படாமல் பத்தாயத்தின் அடியிலிருந்த சிதறிய அரிசி மணிகளைக் கொரித்தபடி இருந்த அணில் பிள்ளை மெள்ள தன் மறைவிடத்திலிருந்து எட்டிப் பார்த்தது.

அம்மா தன் கையில் இருந்த இட்லித் துண்டில் சின்னச் சின்ன உருண்டைகளாகச் சில உருட்டி, அது இருந்த திசையில் தூக்கி வீசி எறிந்தாள்.

முதலில் அது பயந்து போய் மீண்டும் உள்ளே புகுந்து கொண்டுவிட்டது.

சில விநாடிகள்தான் —

பிறகு மெதுவாக வெளிப்பட்டு அவற்றைப் பொறுக்கத் தொடங்கியது.

அதுதான் ஆரம்பம்.

அப்புறம் ஒவ்வொரு நாளும் அம்மா பொறுமையாக உட்கார்ந்து அதற்குப் பிரியமான பண்டங்களை வீசி எறிந்து பழக்கியதோடு, படிப்படியாக அந்த இடைவெளியையும் குறைத்துக் கடைசியில் தன் கையிலேயே வந்து வாங்கிக் கொள்ளும் அளவுக்கு அதற்குத் துணிச்சலை வரவழைத்துவிட்டாள்.

பிறகு அவள்தான் என்றில்லை, வீட்டில் யாரிடமும் அது மிக நெருங்கி வரும். எங்கள் மடியிலேயே வந்து ஏறி நாங்கள் தொடுப்பதை வாங்கித் தின்னும்.

அதிலும் எண்ணெயில் பொரித்த கூழ் வடகத்தை வாங்கி அது கரக் கரக் என்று சுரண்டித் தின்னும் சப்தம் எனக்கும் அமலாவுக்கும் வேடிக்கையாய் இருக்கும்.



அம்மாதான் சமயங்களில் கத்துவாள். 'அணிப் பிள்ளைன்னா பழமும் தானியமும் தான் கொடுக்கணும். இப்படி எண்ணெயில் பண்ணினதை எல்லாம் கொடுத்து அதன் வயத்தைக் கெடுத்துடாதேங்கோ.'

அம்மா கவலைப்பட்டதுபோல் அப்படி ஒன்றும் ஆகிவிடவில்லை.

அடுத்த ஒரு மாதத்திலேயே அந்த அணில் பிள்ளை பொசு பொசு என்று பருத்து விட்டது.

இரவு பகல் வீட்டையே சுற்றிக் கொண்டிருந்த அது கொஞ்சம் கொஞ்சமாகத் துணிவு பெற்று வெளி இடங்களுக்கும் போக ஆரம்பித்தது.

"அண்ணா இந்த அணிப் பிள்ளை ஒரு நாள் நம்மை எல்லாம் ஏமாற்றி விட்டு ஓடத்தான் போகிறது" என்றாள் அமலா.

"ஓடாது அமலா. எதை மறந்தாலும் தினமும் அம்மா தருகிற தேங்காய்த் துருவலை அதனால் மறக்கமுடியாது. சரியாக ஒவ்வொரு நாளும் அந்தச் சமையல் நேரத்தில் வந்து குதித்து விடும் பார்."

கமலா நடராஜன்



கணவன்: குழாயில்தான் தண்ணீர் வரலையே.... எங்கே கிளம்பறே....?

மனைவி: அதுக்காக குழாயடிச் சண்டை போடாம இருந்துட முடியுமா?

— உ. ராஜாஜி

அதன்படியே எங்கு போகுமோ எப்படிச் சுத்துமோ தினமும் அந்தச் சாப்பாட்டு நேரத்திற்குள் டாண் என்று வந்து விடும். அப்பா மடியிலோ அம்மா மடியிலோ ஜம் என்று ஏறி உட்கார்ந்து கொள்ளும்.

வீட்டிற்கு வருபவர்கள் எல்லாம் ஆச்சரியப்பட்டுப் போவார்கள்.

அப்பா எந்த இடத்திலும் தன் செல்லப் பிராணியை அடையாளம் கண்டு கொள்வதற்காக அதன் நெற்றியில் சிவப்புச் சாயத்தினால் அடிக்கடி ஒரு பொட்டு வைத்துவிடுவார்.

அம்மா அலட்டிக் கொள்வதோ அதை விட வேடிக்கை.

மாடு கன்று வைத்திருப்பவர்கள் கூட அவ்வளவு கவலைப் பட மாட்டார்கள் எங்காவது ஒருநாள் வெளியூர் கிளம்பிவிட்டால் போதும் அவ்வளவு அலட்டல்.

'அடியே அமலா அணிப் பிள்ளை வந்தா தேங்காய்த் துருவல் தர மறந்துடாதே. பாவம் விக்கிச்சுப் போகும். பூசை அலமாரியில் வாழைப் பழம் இருக்கு. அதையும் எடுத்துக் கொடு. முடிஞ்சா நான் சாயங்காலமே வந்துடுவேன்.'

அப்படித்தான் ஒரு தடவை தன் தங்கை பெண்ணுக்கு ஆபரேஷன் என்று சொல்லி, சென்னைக்குப் போய் இருந்தவள், வர ஒரு வாரம் ஆகிவிட்டது. அதற்குள் தன் வளர்ப்பு ஜீவன் பற்றி இரண்டு கடிதங்கள் எழுதிக் கேட்டுவிட்டாள்.

மூன்றாவது கடிதத்தில்,தான் மறு நாள் இங்கே வர இருப்பதாக அவள் எழுதி இருந்ததை நான் படித்துக் கொண்டிருந்த போது தான் —

பக்கத்து கொல்லையிலிருந்து திடீரென்று அப்படிச் சத்தம்.

கீச்சச்சச்.... கீச்சச்சச்....

மனத்தை எதுவோ அவசரமாக நெருட, வாசலுக்கு விரைந்தேன்.

இடதுபுறம் திரும்பி எங்கள் தோட்டம் இருந்த திசையில் பார்த்தவனுக்குச் 'சொரேர்' என்றது.

ஆறடி உயரத்தில் ஒரு மனிதன்! — வெறும் கௌபீனம் மட்டுமே அணிந்து இரக்கம் இல்லாத முரட்டுத் தோற்றத்தோடு தெரிந்தான் — வேலிக்கு வெளியே நின்று தன் கையில் இருந்த நீண்ட குச்சியை உள்பக்கம் இருந்து இழுத்தான்.

அதன் நுனியில் செருகப்பட்டிருந்த கூரிய ஆயுதம் தன் வயிற்றின் வழி இறங்கி முதுகு வரை துளைத்திருக்க அங்கே அலறித் துடித்தது ஓர் அணில்.

அந்த ஒரு விநாடிக்குள் என்னுடைய வயிற்றையும் ஏதோ துளைப்பது போன்ற உணர்வு.

கடவுளே அது எந்த உயிராக இருந்தாலும் கவலைக்கு உரியதுதான். இருந்தாலும் எங்களுடைய வளர்ப்பாக மட்டும் இருந்து விடவே கூடாது.

கீச்சச்சச்.... கீச்சச்சச்....

மேலும் மேலும் அதன் மரண ஓலம் என்னை என்னென்னமோ செய்ய —

மிக அவசரமாய் அவனை நெருங்கிய போது —

அவன் சாவகாசமாக அதை உருவி மூன்றாக நான்காக மடித்து எல்லாமே முடியத் தொடங்கி இருந்தது.

அந்தக் கொடுமையை, சித்திரவதையை நான் பார்க்கவே விரும்பவில்லையானாலும் என்னையும் மீறி அதன் நெற்றியில் இருந்த சிவப்புப் பொட்டுக் கண்களில் பட்டுவிட —

பனிக்கட்டியாய் உறைந்தேன்.

அதற்குள் அப்பா ஓடி வர, அமலாவும் உடன் வர —

ஆளுக்கு ஆள் வாய்க்கு வந்தபடியெல்லாம் அவனைத் திட்டித் தீர்த்தோம்.

அவன் அரண்டு போனான்.

''மன்னிச்சுடுங்க சாமி.... இது மாதிரி அணிப் பிள்ளைகளைக் கூட யாரும் வளர்ப்பாங்கன்னு எனக்கு எப்படித் தெரியும்?''

காலிலேயே விழுந்தான்.

உண்மைதான். இப்படி ஒரு முடிவும் இந்த ஜீவனுக்கு ஏற்படலாம் என்பதை ஏன் மறந்து போனோம்? ஆயிரம் எச்சரிக்கை செய்யும் அம்மாவுக்குக் கூட இது தோன்றவில்லையே!

கடைசியாக எங்களால் செய்ய முடிந்தது ஒன்றுதான். நாங்கள் வளர்த்த அந்த அருமையான ஜீவனை தோட்டத்தின் ஒரு மூலையிலேயே புதைத்துப் பால் ஊற்றி எல்லாம் முடிந்து போன மறுநாள் —

அம்மா வந்தாள்.

''எங்கேடா அணிப் பிள்ளை?'' — முதல் கேள்வியே கேட்டாள்.

இரண்டு நாட்கள் வரை என்னென்னமோ சமாதானம். எதையும் அவள் நம்பத் தயாராய் இல்லை. தோண்டித் துருவி விசாரித்துக் கொண்டே இருந்தாள்.

இதற்கு மேலும் சமாளிக்க முடியாது என்கிற கட்டத்தில் அப்பா சொல்லிவிட்டார்: ''திலகம் நம்ம அணிப்பிள்ளை செத்துப் போச்சு.''

அவளுடைய அதிர்ச்சி சிறிது நேரச் செயல் இழப்பின் மூலம் தெளிவாகத் தெரிந்தது.

''ஏன், எப்படி?'' — வார்த்தைகள் செத்த பிணமாய் வெளிப்பட்டன.

நல்லவேளை. சட்டென்று எனக்கு ஒரு யோசனை தோன்றக் குறுக்கே புகுந்தேன். ''என்னமோ தெரியலே, நீ ஊரிலிருந்து வர்றதுக்கு முதல் நாள் முழுவதும் அது வீட்டை விட்டே வெளியில் போகலே. அதோ அந்த ஊஞ்சல் பலகையின் ஓரம்தான் உறங்கியபடியே உட்கார்ந்திருந்தது. ஆகாரம் எதுவும் தொடலே. சாயங்காலம் நாலு மணி இருக்கும். அப்பாவும் இதே கவலையில் மத்தியானம் கூட எதுவும் சாப்பிடாதவர், அமலா கொடுத்த காப்பியை வாங்கிக் குடித்துக் கொண்டிருந்தார். அப்பொழுதுதான் அது மெள்ள மெள்ள நகர்ந்து அவர் காலடி ஓரம் வந்தது. கிட்டத்தட்ட அவரை நெருங்கி விட்ட நிலையில் சுருண்டு படுத்துவிட்டது தான். பிறகு எழுவே இல்லை!''

இந்த விவரம் அவளைப் பூரணச் சமாதானப்படுத்தவில்லை என்பது அவள் முகத்தில் புரிந்தது.

''நம்பவே முடியலையே. நல்லா இருந்த ஒரு அணிப்பிள்ளை ஏன் அப்படிச் சாகணும்?''

அமலா பளிச்சென்று அதற்கும் ஒரு பதிலைச் சொன்னாள்.

''இது என்னம்மா கேள்வி? மனுஷாளுக்கு மயக்கம், மாரடைப்புன்னு ஏற்படறதில்லையா அதே மாதிரி அந்த அணிப் பிள்ளைக்கும் ஏதோ ஒண்ணு ஆகியிருக்கணும்!''

அவள் விலங்கியல் படித்தவள் என்பதால் அவள் சொன்னதை அம்மா ஓரளவு நம்பினாள்.

ஆனாலும் அவள் மனத்தில் அந்த நிகழ்ச்சி எந்த அளவு வேரூன்றி இருந்தது என்பது இருபது வருஷம் கழித்தும் இதோ அவள் பேசுவதிலிருந்து புரிகிறது.

காலையில் டாக்டர் வந்து பார்த்துவிட்டுப் போனதிலிருந்தே சொல்லிக் கொண்டிருக்கிறாள்.

'கடவுளே எந்த ஜீவனுக்கும் மரணங்கறது இயற்கை. ஆனா இந்த நோவிலும் நொடியிலும் என்னை நாட்கணக்கில் போட்டுடாமே எங்க அணிப் பிள்ளை மாதிரியே என்னையும் இமைப் பொழுதில் அழைச்சுக்கோ!''

அந்த 'அணிப் பிள்ளை மாதிரியே...' என்று அவள் கூறுகிறபோதெல்லாம் எங்களுக்குச் சரீரம் நடுங்குகிறதே தவிர, இப்பொழுது கூட அவளிடத்தில் அந்த உண்மையை எடுத்துச் சொல்லிவிடும் தைரியம் யாருக்கும் வரவில்லை.

அருள்வாக்கு

எவ்வளவுதான் அலசி அலசி விரிவாக எழுதினாலும் நூறாயிரம் சமாசாரங்கள் வந்து சேர்கிற மநுஷ்ய வாழ்க்கையில் ஒவ்வொரு அம்சமும் இப்படித்தான் என்று எழுதி வைத்து நிர்ணயம் பண்ண முடியாது. எழுத்திலே நித்தாரணம் செய்வது சட்டம் மாதிரி நிர்ப்பந்தமாகத்தான் தோன்றும். நன்றாகக் கட்டுப்பாடு செய்கிற சட்ட விதிகள் வேண்டும்தான். நம் சாஸ்திரங்களில் இப்படி நிறைய இருக்கத்தான் செய்கின்றன. சுதந்திரம், ஜனநாயகம் என்று பெரிசாகச் சொல்வதெல்லாம் யதார்த்தத்தில் மனம் போனபடி நடப்பதாகவும் அசக்தமான நல்லவர்களை ஒடுக்கி, பலிஷ்டரான முரடர்கள் ஸ்வயேச்சையாகக் கஷ்டப்படுத்துவதாகவும் இருப்பதைப் பார்க்கிறோம். ஆகையால் விதிகளைப் போட்டு, ஜனங்களைக் கட்டுப்படுத்தத்தான் வேண்டும். ஆனாலும் இதிலும் ஒரு 'லிமிட்' வேண்டும். கட்டுப்பாடு பண்ணுவதற்கும் ஒரு கட்டுப்பாடு வேண்டும். இல்லாவிட்டால் மநுஷ்ய ஸ்வபாவப்படி, ஒரேயடியாகச் சட்டம் போட்டு நெரித்தால், உத்ஸாகமே போய் விடும். ரொம்பவும் கட்டுப்படுத்தினாலே ரொம்பவும் அறுத்துக் கொண்டு ஓடத் தோன்றும்.

இதனால் நம் சாஸ்திரங்களில் எல்லாவற்றையும் எழுதி வைத்துச் சட்டமாகத் திணிக்காமல் பல விஷயங்களில் பெரியவர்கள் பண்ணுகிறதைப் பார்த்தே மற்றவர்கள் மனமொப்பி, தாங்களாக, ஸ்வேச்சையாக அதேமாதிரி செய்யும்படி விட்டிருக்கிறார்கள்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்



பொன்மொழிப் போட்டி-6 முடிவு

(சென்ற இதழ் தொடர்ச்சி....)

108. எஸ். சிதம்பரம், ஆணையாம்பட்டி; 109. கோ. இராஜேஷ், தஞ்சை—7; 110. இரா. ப. பிரபாகரன், திருநெய்த்தானம்; 111. என். ஆனந்தகுமார், ஈரோடு; 112. சாவித்ரி வடிவேல், பிரான்மலை; 113. ஆர். மணிமேகலை, கோபி; 114. வள்ளி வெங்கட்ராமன், சென்னை—18; 115. ஆர். நாராயணன், சென்னை—33; 116. கோ. மலர்வண்ணன், சென்னை — 84; 117. கே. இராகவேந்திரன், கிருஷ்ணகிரி; 118. ஏ. சந்திரசேகரன், தேவிகுளம்; 119. எஸ். ரவிச்சந்திரன், சென்னை—4; 120. ஸ்ரீமதி மணவாளன், காஞ்சிபுரம்; 121. எஸ். சிவசுப்பிரமணியன், நெல்லிக்குப்பம்; 122. கே. ஆர்த்தி, சென்னை — 78; 123. எம்., பிரகாஷ், சிறுதொண்டநல்லூர்; 124. ப. நடராசன், காட்பாடி; 125. நெல்லை கிருஷ்ணன், வெள்ளங்குளி; 126. ஆர். பாலகிருஷ்ணன், கும்பகோணம்; 127. எம். ஏ. முகம்மது அலி, பாளையங்கோட்டை, 128. வி. எஸ். பார்த்திபன், ஏனங்குடி; 129. கே. ரவிச்சந்திரன், மதுரை — 20; 130. த. ராஜேஸ்வரி, திருத்துறைப் பூண்டி; 131. பி. அருள்மணி, பெங்களூர் — 50; 132. பி. விசாலாட்சி, கோவை — 18; 133. கே. நடராஜன், திருத்துறைப்பூண்டி; 134. வி. ஸ்ரீனிவாஸன், கள்ளக்குறிச்சி; 135. எஸ். கற்பகவல்லி, திருவனந்தபுரம்; 136. மா. முத்துக்கருப்புச்சாமி, திருச்சி—20; 137. பி. கணேசன், புளியங்குடி; 138. வெ. உஷாராணி, பொன்னேரி; 139. எஸ். மணிமேகலை, கமுதி; 140. வி. கல்யாணசுந்தரம், சென்னை — 18; 141. பி. கே. மூர்த்தி, மதுரை — 18; 142. டி. எஸ். ராஜப்பா, சென்னை — 1; 143. கே. ஆர். பழனியப்பன், அம்பத்தூர்; 144. ஊ. மங்களம், என். முத்துலிங்காபுரம்; 145. ஜி. பாண்டுரங்கன், கோலார். (தங்கவயல்)

பொன்மொழிப் போட்டி-7 முடிவு

சரியான விடை:

ராபர்ட் லூயி ஸ்டீவன்ஸன்: அச்சங்களை உனக்குள்ளே வைத்துக் கொள். துணிவுகளைப் பிறருடன் பகிர்ந்து கொள்.

சத்யசாயிபாபா: நம்முடைய ஆசைகள் சாம்பலாக வேண்டும். விபூதி என்பது அதன் உருவகமே. துறவு மனப்பான்மையையும் பற்றற்ற நிலையையும் உணர்த்தும்.


விவேகானந்தர்: சிறந்த ஆசிரியர் மாணவன் நிலைக்கு இறங்கி வந்து, அவன் கண்களால் பார்த்து, அவன் காதுகளால் கேட்டு, அவனது அறிவாற்றலுக்கு ஏற்பப் புரிந்து கொண்டு உணர்த்தவும் செய்வார்.

ராஜாஜி: கதையோ கட்டுரையோ எழுதும் போது வசதியான ஓரிடத்தில் நிறுத்திப் படித்துப் பார்க்க வேண்டும். நமது குழந்தையைப் பார்ப்பது போல் பார்க்காமல், பிறர் பார்ப்பது போல் பார்க்க வேண்டும்.

பெர்னார்ட் ஷா: வெற்றி என்பது ஏராளமான தவறுகளை மூடி மறைத்துவிடும்.

கீழ்க்கண்ட இருபது வாசகர்கள் சரியான விடைகளை எழுதியுள்ளனர். ரூ 200 பரிசை சமமாகப் பிரித்து ஒவ்வொருவருக்கும் ரூ 10/— வழங்குகிறோம்.

1. என். லலிதா, வேலூர்—1; 2. கே. கனகராஜ், லக்னோ—1; 3. எஸ். முகம்மது ஜூசுப், திருப்பூர்—4; 4. ஏ. எஸ். இராதா, நாகர்கோவில்; 5. இரா. உலகநம்பி, கோவை—9; 6. இராம ஜோதிவேல், பனையடிகுத்தகை அஞ்சல்; 7. எஸ். அன்புச் செல்வி, மதுரை—20; 8. எல். கஸ்தூரி, சென்னை—41; 9. வி. சீனிவாசவரதன், சென்னை—75; 10. பி. கோபாலரத்தினம், திருவாரூர்; 11. எஸ். கிரிஜா, சேலம்—11; 12. கே. சரவணன், மல்லியம் அஞ்சல்; 13. டி. ரங்கசாமி, கோவை—37; 14. எல். என். பாபு ராவ், வாணியம்பாடி; 15. கே. ஆர். கோபாலகிருஷ்ணன், ஈரோடு—1; 16. எஸ். கலைவாணன், திருநெல்வேலி—7; 17. எஸ். காயத்ரி, சென்னை—88; 18. கி. பாலசுப்பிரமணியன், சித்தமல்லி (அஞ்சல்); 19. நிர்மலா கேசவராஜன், சென்னை—9; 20. எம். பாஸ்கரன், சென்னை—67.



"நான் கேட்காமலேயே இன்னும் நாலு இட்லி கொண்டு வந்து வச்சிருக்கியே — எதுக்காக?"

"ஐம்பது இட்லின்னு பில் கணக்குப் போடச் சௌகரியமா இருக்குமேன்னுதான்!"

— தாஜா



அத்தியாயம் 40
இருள் மாளிகை

காணாமற் போன வந்தியத்தேவன் என்ன ஆனான் என்பதை இப்போது நாம் கவனிக்கலாம். இருளடைந்த மாளிகைக்கு அருகில் சென்று அவன் மறைந்து நின்றான் என்பதைப் பார்த்தோம் அல்லவா? மந்திரவாதியும் நந்தினியும் என்ன பேசிக் கொள்கிறார்கள் என்பதை அவன் முதலில் காது கொடுத்துக் கேட்க முயன்றான். ஆனால் அவர்களுடைய பேச்சு ஒன்றும் அவன் காதில் விழவில்லை. அதைக் கேட்டுத் தெரிந்து கொள்வதில் அவ்வளவாக அவனுக்குச் சிரத்தையும் இல்லை. நந்தினியிடம் பேசிக் கொண்டிருந்த போது தன் அறிவு தன்னை விட்டு அகன்று ஒருவித போதை உணர்ச்சி உண்டாகியிருந்தது என்பதை இப்போது உணர்ந்தான். மறுபடியும் அவளைச் சந்திக்காமல் தப்பித்துக் கொண்டு போய் விட்டால் நல்லது. பழுவேட்டரையர்களிடம் அகப்பட்டுக் கொள்வதைக் காட்டிலும் இந்த இளைய ராணியிடம் அகப்பட்டுக் கொள்வதில் அபாயம் அதிகம் இருக்கிறது. அவர்கள் முன்னிலையில் தன் அறிவு நன்றாய் இயங்குகிறது; தோள் வலி ஓங்குகிறது; அரையில் உள்ள கத்தியில் எப்போதும் கை இருக்கிறது. யுக்தியினாலும் ஒரு கை பார்க்கலாம்; கத்தியினாலும் ஒரு கை பார்க்கலாம்; ஆனால் இந்த மோகினியின் முன்னால் புத்தி மயங்கி விடுகிறது; கையும் கத்தி பிடிக்கும் சக்தியை இழந்துவிடுகிறது. மீண்டும் இவள் முன்னால் சென்றால், என்ன நேருமோ என்னமோ? போதும் போதாததற்கு, மந்திரவாதி ஒருவனுடைய கூட்டுறவும் இவள் வைத்துக் கொண்டிருக்கிறாள்! இரண்டு பேரும் சேர்ந்து என்ன மாயமந்திரம் செய்வார்களோ? குந்தவைப் பிராட்டியிடந்தான் இவளுக்கு எவ்வளவு துவேஷம்? அந்த துவேஷம் இவளுடைய கண்களில் தீப்பொறியாக வெளிப்படுகிறதே! ஒரு வேளை மனத்தை மாற்றிக் கொண்டு பழுவேட்டரையரிடம் தன்னைப் பிடித்துக் கொடுத்தாலும் கொடுத்து விடலாம்! பெண்களின் சபல சித்தமும் சஞ்சல புத்தியும் பிரசித்தமானவை அல்லவா? ஆகையால் மீண்டும் இவளைச் சந்திக்காமல் தப்பித்துக் கொண்டு போய்விட்டால் நல்லது. ஆனால் எப்படி? தோட்டத்துக்குள் புகுந்துதான் வழி கண்டுபிடித்துப் போக வேண்டும்! மதில் ஏறிக் குதிக்க வேண்டும்! மதிலுக்கு வெளியில்



தன்னைத் தேடி வந்தவர்கள் காத்திருந்தால்...? வேறு ஏதேனும் உபாயம் இல்லையா? வந்தியத்தேவா! இத்தனை நாளும் உனக்கு உதவி செய்து வந்த அதிர்ஷ்டம் எங்கே போயிற்று? யோசி! யோசி! மூளையைச் செலுத்தி யோசி! கண்களையும் கொஞ்சம் உபயோகப்படுத்து! நாலாபக்கமும் பார்! இதோ இந்த இருள் அடர்ந்த மாளிகை இருக்கிறதே! இது ஏன் இருளடைந்திருக்கிறது? இதற்குள்ளே என்ன இருக்கும்? இதன் உள்ளே புகுந்தால் இதன் இன்னொரு வாசல் எங்கே கொண்டுபோய்விடும்? எல்லாவற்றுக்கும் இதற்குள் புகுந்து பார்த்து வைக்கலாமா? இப்போது உபயோகப்படாவிட்டாலும் வேறு ஒரு சமயத்துக்கு உபயோகப்படலாம். யார் கண்டது?

ஆனால், இதற்குள்ளே எப்படிப் பிரவேசிப்பது? எவ்வளவு பெரிய, பிரம்மாண்டமான கதவு, இதற்கு எவ்வளவு பெரிய பூட்டு! அப்பப்பா! என்ன அழுத்தம்! என்ன கெட்டி! ஆ! இது என்ன? கதவுக்குள் ஒரு சிறிய கதவு போலிருக்கிறதே! கையை வைத்ததும் இந்தச் சிறிய கதவு திறந்து கொள்கிறதே! அதிர்ஷ்டம் என்றால், இதுவல்லவா அதிர்ஷ்டம்! உள்ளே புகுந்து பார்க்க வேண்டியதுதான்!

பெரிய கதவுக்குள்ளே, பார்த்தால் தெரியாதபடி பொருத்தியிருந்த சிறிய கதவைத் திறந்து கொண்டு வந்தியத்தேவன் அந்த இருளடைந்த மாளிகைக்குள் புகுந்தான். உள்ளே காலடி வைத்ததும் அவனுக்குத் தோன்றிய முதல் எண்ணம், தான் அம்மாளிகைக்குள் புகுந்தது நந்தினிக்குக்கூடத் தெரியக் கூடாது என்பதுதான். ஆகையால் சிறிய கதவைச் சாத்தினான். சாத்தியவுடன் உள்ளிருந்த இருள் இன்னும் பன்மடங்கு கனத்து விட்டதாகத் தோன்றியது. கதவு திறந்திருந்த ஒரு வினாடி நேரத்தில் சில பெரிய தூண்கள் நிற்பது தெரிந்தது. இப்போது அதுவும் தெரியவில்லை. இருட்டு என்றால், இப்படிப்பட்ட இருட்டைக் கற்பனை செய்யவும் முடியாது!.... சீச்சீ! வெளிச்சத்திலிருந்து இருட்டில் வந்திருப்பதால் முதலில் இப்படித்தான் இருக்கும். சற்றுப் போனால் இருட்டின் கனம் குறைந்து பொருள்கள் மங்கலாகக் கண்ணுக்குப் புலப்படும். இதை எத்தனையோ தடவை அனுபவத்தில் கண்டிருந்தும், இருளைக் கண்டு கலக்கம் ஏன்? சும்மா நிற்பதற்குப் பதில் கொஞ்சம் நடந்து பார்க்கலாம். கையினால் தடவிக் கொண்டே போகலாம். முதலில் தெரிந்த தூண் இப்போது இல்லாமல் எங்கே போய்விடும்......? சற்றுத் தூரம் குருடனைப் போல் கையை முன்னால் நீட்டிக் கொண்டு வந்தியத்தேவன் நடந்தான். அவன் நினைத்தபடியே ஒரு தூண் கைக்குத் தட்டுப்பட்டது! ஆ! எவ்வளவு பெரிய தூண்! கருங்கல் தூண்! இதைச் சுற்றி வளைத்துக் கொண்டு மேலே போய்ப் பார்க்கலாம். மேலும் கொஞ்ச தூரம் நடந்ததும் இன்னொரு தூண் கைக்கு அகப்பட்டது. ஆனால் இன்னமும் கண்ணுக்கு ஏதும் தெரிந்த பாடாயில்லை. திடீரென்று கண் குருடாகப் போய் விட்டதா, என்ன? இது என்ன பைத்தியக்கார எண்ணம்! கண் திடீர் என்று எப்படிக் குருடாகும்? இன்னும் கொஞ்சம் நடந்து பார்க்கலாம். மேலே தூண் ஒன்றும் கைக்கு அகப்படவில்லை! ஏதோ பள்ளத்தில் இறங்குவதுபோன்ற உணர்ச்சி உண்டாகிறது! ஆ! இதோ ஒரு படி! நல்லவேளை, விழாமல் தப்பினோம்! இப்படியே இந்த இருட்டில் ஒன்றும் தெரியாமல் எத்தனை நேரம், எத்தனை தூரம் போவது?...... எத



நல்ல வளர்ச்சி போர்ன்விடா பயிற்சி!



அன்னையர், அறிவர்: கேட்பரிஸ் போர்ன்விடா கோகோ, மால்ட், பால் மற்றும் அசல் சீனியின் ஊட்ட நலன்களைக் கொண்டது. போர்ன்விடா குழந்தைகள் மிக விரும்பும் அத் தனிச் சுவையை பாலின் குணத்துடன் அளிக்கிறது.

தினமும் போர்ன்விடா அளிக்கப்படும் குழந்தைகள் வேலையிலும் விளையாட்டிலும் கூர்மையோடிருக்கிறார்கள். அது, அவர்களுக்கு ஆரோக்கியத்தையும் சுறுசுறுப்பையும் அளிக்கிறது. அவர்களுடைய வளர்ச்சிக்கு எல்லா வகையிலும் நலன் அளிக்கிறது.

அதன் தனிச் சுவையுடன் இணைந்திட்ட இன்றைய வளர்ச்சி.

கேட்பரிஸ் போர்ன்விடா

OBM/9174 TAM

ஓர் வேண்டுகோள்

சிவானந்த குருகுலம் காட்டாங்கொளத்தூரில் உள்ள ஆதரவற்ற குழந்தைகளின் நலம் நாடும் நன்கொடையாளர்கள் மனமுவந்து வரும் கல்வி ஆண்டில் அவர்களுக்குத் தேவையான நோட்டு புத்தகங்களோ, சீருடைகளாகவோ அல்லது பணமாகவோ நன்கொடையாக அளிக்க விரும்பும் அன்பர்கள் ''சிவானந்த சரஸ்வதி சேவாஸ்ரமம்'' என்ற பெயருக்கு, காசோலையாகவோ, மணியார்டர் மூலமாகவோ அளித்தால் நாங்கள் என்றும் நன்றியுடையவர்களாக இருப்போம். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: நிர்வாகி, சிவானந்த சரஸ்வதி சேவாஸ்ரமம் நெ. 20, கம்பர் தெரு, கிழக்கு தாம்பரம், சென்னை—600 059.

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள் மாற்றம் செய்யப்பட்டுள்ளன. அதன் விவரம்:

பழைய எண்:-	மாற்றப்பட்ட எண்:
1. 48248	401078
2. 433384	402354

மேற்குறிப்பிட்ட புதிய எண்ணில் தொடர்பு கொள்ளவும்.

ஞலோ வந்தியத்தேவன் மனத்தில் ஒரு பீதி உண்டாயிற்று. மேலே போகத் துணிவு ஏற்படவில்லை. வந்த வழியில் திரும்ப வேண்டியதுதான்! கதவைத் திறந்து கொண்டு லதா மண்டபத்துக்கே போக வேண்டியதுதான்! இந்தப் பயங்கர இருட்டில் உழலுவதைக் காட்டிலும் நந்தினியை மீண்டும் சந்தித்து அவளுடைய யோசனைப்படி நடப்பதே நல்லது. என்ன வாக்குறுதி கேட்டாலும் இப்போதைக்குக் கொடுத்து விட்டால், பிறகு சமயம் போல் பார்த்துக் கொள்கிறது! இவ்வாறு எண்ணி வந்தியத்தேவன் திரும்பினன். ஆனல் திரும்பிச் செல்லும் வழி வந்த வழியேதானு? எப்படிச் சொல்ல முடியும்!... நடக்க நடக்கக் கைக்கு ஒன்றும் தட்டுப்படவில்லையே! அந்தக் கருங்கல் தூண்கள் எங்கே போயின! கதவைக் கண்டுபிடிக்க முடியாமலே போய் விடுமோ? இரவெல்லாம் இந்த இருளில் இப்படியே சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருக்க நேரிடுமோ? கடவுளே! இது என்ன ஆபத்து!......

ஆகா! இது என்ன ஓசை! சடசடவென்ற ஓசை! எங்கேயிருந்து வருகிறது? வௌவால்கள் சிறகை அடித்துக் கொள்ளும் ஓசையாக இருக்க வேண்டும். அவ்வளவு இருட்டில் வௌவால்கள் நிறையக் குடிகொண்டிருப்பது இயல்புதானே? இல்லை! இது வௌவால் இறகின் சத்தம் மட்டும் இல்லை! காலடிச் சத்தம்! யாரோ நடக்கும் சத்தம்!...... நடப்பது யார்? மனிதர்கள்தானு? அல்லது...... வந்தியத்தேவனுடைய தொண்டை உலர்ந்து போயிற்று! நா மேலண்ணத்தில் ஒட்டிக் கொண்டது! திடீரென்று யாரோ அவன் முகத்தில் இடித்தாற் போலிருந்தது. வந்தியத்தேவன் தன் சக்தியையெல்லாம் காட்டி ஒரு குத்து விட்டான்! குத்திய கை துண்டிக்கப் பட்டது போல வலித்தது. இன்னொரு கையினல் தொட்டுப் பார்த்தான். இருட்டில் கருங்கல் தூணின் மேல் மோதிக் கொண்டதுமல்லாமல் அதைக் குத்தியதாகவும் தெரிந்து கொண்டான்! கையை அவ்வளவு 'விண, விண்' என்று வலித்திரா விட்டால் வந்தியத்தேவன் சிரித்தேயிருப்பான். ஆயினும் அதனல் அவனுடைய பயம் சிறிது அகன்றது. முழுதும் அகலவில்லை. காது கொடுத்துக் கேட்டபோது அந்தக் காலடிச் சத்தம் மேலும் மேலும் கேட்டது. ஒரு சமயம் எட்டிப் போவது போல இருந்தது! இன்னொரு சமயம் நெருங்கி வருவது போல் இருந்தது! வந்தியத்தேவன் நின்ற இடத்திலேயே நின்று உற்றுக் கேட்டான். அதே சமயத்தில் ஓசை வந்த திசையை நோக்கி அவனுடைய கண்களும் உற்றுப் பார்த்தன.

ஆ! வெளிச்சம்! அதோ வெளிச்சம்! கொஞ்சம் கொஞ்சமாக அதிகமாகி வருகிறது! நெருங்கியும் வருகிறது! வெளிச்சத்துடன் புகை! யாரோ தீவர்த்தியுடன் வருகிறர்கள். நந்தினிதான் தன்னைத் தேடிக் கொண்டு வருகிறளோ, என்னமோ! அப்படியானல் நல்லது. வேறு யாராவதாயிருந்தால்? எல்லாவற்றுக்கும் சிறிது நேரம் ஒளிந்திருந்து பார்க்கலாம். ஒளிந்து நிற்பதற்கு இங்கே இடத்துக்குக் குறைவில்லை! தூரத்திலே வந்த தீவர்த்திக் கொழுந்து அது ஒரு விசாலமான மண்டபம் என்பதைக் காட்டியது. அதில் பெரிய பெரிய தூண்கள் இருந்தன. தூண்களில் பயங்கரமான பூதங்களின் வடிவங்கள் செதுக்கப்பட்டிருந்தன. கீழேயிருந்து ஒரு படிக்கட்டு மேலே வந்து அங்கே ஒரு வளைவு வளைந்து திரும்பி மேலேறிச் சென்றது. அந்தப் படிக்கட்டின் அடிப்பக்கத்திலிருந்துதான் தீவர்த்தி வெளிச்சம் வந்தது என்பதையும் அறிந்து கொண்டான். ஆகையால் வருவது நந்தினியாக இருக்க முடியாது. 'பாதாளச் சிறை' என்று தான் கேள்விப்பட்டது இந்த இருண்ட மாளிகையின் அடியிலேதான் இருக்கிறதோ? ஒருவேளை அங்கிருந்துதான் யாரேனும் வருகிறர்களோ? பாதாளச் சிறையின் பயங்கரங்களைப் பற்றி வந்தியத்தேவன் அதிகம் கேள்விப்பட்டிருந்தபடியால், அந்த எண்ணம் அவனுடைய ரோமக் கால்களில் எல்லாம் வியர்வை துளிக்கும்படி செய்தது. அடுத்தகணம் ஒரு பெரிய தூணின் மறைவில் போய் நின்று கொண்டான். மகா தைரியசாலியான வந்தியத்

தேவனுடைய கைகால்கள் எல்லாம் அச்சமயம் வெலவெலத்துப் போய் நடுநடுங்கின!

படிக்கட்டின் வழியாக மேலேறி மூன்று உருவங்கள் வந்தன. மூவரும் மனிதர்கள்தான். ஒருவன் கையில் தீவர்த்தியிருந்தது. இன்னொருவன் கையில் வேல் இருந்தது. நடுவில் வந்தவன் கையில் ஒன்றும் பிடித்திருக்கவில்லை. தீவர்த்தி வெளிச்சத்தில் அவர்கள் முகங்கள் புலப்பட்டதும் வந்தியத்தேவனுடைய பீதி அடியோடு அகன்றது. பீதியைக் காட்டிலும் பன்மடங்கு அதிகமான வியப்பு உண்டாயிற்று. அவர்களில் முன்னால் வந்தவன் வேறு யாரும் இல்லை; வந்தியத்தேவனுடைய பிரிய நண்பனாகிய கந்தமாறன்தான்! நடுவில் வந்த உருவம், முதலில், ஓர் அதிசயமான பிரமையை வந்தியத்தேவனுக்கு உண்டாக்கிற்று. பழுவூர் இளையராணியாகிய நந்தினிதான் வருகிறாள் என்று தோன்றியது. மறுகணத்திலேயே, அந்தப்பிரமைநீங்கியது.வருகிறவன் ஆண் மகன் என்று தெரிந்தது. கடம்பூர் சம்புவரையர் மாளிகையில் அரை குறையாகத் தான் பார்த்த இளவரசர் மதுராந்தகத் தேவர் என்பதை அறிந்து கொண்டான். மூன்றாவதாக, கையில் தீவர்த்தியுடன் வந்தவனை வல்லவரையன் முன்னால் பார்த்ததில்லை. அவன் வாசற் காவலனாகவோ, ஊழியக்காரனாகவோ இருக்க வேண்டும்.

வந்தியத்தேவனுடைய மூளை அதிவேகமாக வேலை செய்தது. அவர்கள் அந்தப் பாதாள வழியில் படிக்கட்டு ஏறிவருவதன் மர்மம்என்னவென்பது வெகு விரைவில் அவனுக்கு விளங்கி விட்டது. பழுவூர் இளைய ராணி பல்லக்கில் ஏறி முதல் நாளே வந்து விட்டாள். பெரிய பழுவேட்டரையர் அன்றிரவு தஞ்சைக் கோட்டைக்குத் திரும்பிவிட்டார். இருவரும் கோட்டை வாசல் வழியாகப் பகிரங்கமாக வந்து விட்டார்கள். ஆனால், மதுராந்தகத் தேவர் வெளியில் போனதும் தெரியக் கூடாது; திரும்பி வருவதும் தெரியக் கூடாது. அதற்காக இந்த இரகசியச் சுரங்க வழியைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். இந்த இருளடைந்த மாளிகையின் மர்மமே இதுதான் போலும்! கந்தமாறன் தன்னைக் கொள்ளிடக் கரையில் விட்டுப் பிரிந்த பின்னர், வேறு எங்கேயோ ஓரிடத்தில் பெரிய பழுவேட்டரையருடன் சேர்ந்திருக்கிறான். இந்த அந்தரங்க வேலைக்கு அவனைப் பழுவேட்டரையர் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார். மதுராந்தகத் தேவரைச் சுரங்க வழியில் அழைத்துச் செல்லத் துணையாக அனுப்பி வைத்திருக்கிறார். ஆகா! இப்போது நினைத்துப் பார்த்தால் ஞாபகம் வருகிறது. "எனக்குக் கூடத் தஞ்சாவூரில் ஒரு வேலை இருக்கிறது நானும் அங்கே வந்தாலும் வருவேன்!" என்று கந்தமாறன் சொன்னான் அல்லவா?......இப்போதுஇங்கே திடீர் என்று தான் கந்தமாறன் முன்னால் போய் நின்றால், அவன் என்ன செய்வான்?... இந்த எண்ணம் தோன்றியவுடனேயே அதை வல்லவரையன் மாற்றிக் கொண்டான். இந்தச் சமயத்தில் கந்தமாறன் முன்னால் தான் எதிர்ப்பட்டால், அவன் செய்துள்ள சபதத்தை முன்னிட்டுத் தன்னைக் கொல்ல நேரிடும்; அல்லது தான் அவனைக் கொல்ல நேரும். அப்படிப்பட்ட தர்ம சங்கடத்தை எதற்காக வருவித்துக் கொள்ள வேண்டும் .....?

அதற்குள் அந்த மூவரும் படிக்கட்டில் மேலேறிப் போய் விட்டார்கள். வெளிச்சமும் வரவர மங்கத் தொடங்கியது. அவர்களைப் பின் தொடர்ந்து போகலாமா என்று வந்தியத்தேவன் ஒருகணம்நினைத்து,அதையும் உடனே மாற்றிக் கொண்டான். அவர்கள் கோட்டைத் தளபதி சின்னப் பழுவேட்டரையரின் அரண்மனைக்குப் போகிறார்கள் என்பது நிச்சயம். அங்கே தான் திரும்பிப் போவதில் என்ன பயன்? சிங்கத்தின் குகையிலிருந்து தப்பித்து வந்தபிறகு மறுபடியும் போய் சிங்கத்தின் வாயில் தலையைக் கொடுப்பது போலத்தான்!

தொடர்ச்சி 37—ஆம் பக்கம்

ஓ! அப்படி ஒரு தெளிவான செயல்பாடு...



இதை நிரூபிக்க வார்த்தையேதும் தேவையில்லை.

XII LIIXII XIIXIO LIIXOU XIIXIIU XIILXI
OUXII XIIOI XIIO XIIXO LIIXOU XIIXO
UXII XIIO XIIO XILI XIILU XIIU XIIXI LIXU
XII LIXII XIIOU XIIXO LIIXOIIX

XILI LIIXILI XII XIIIXII XIIL XIO LIIO XIIO
XII LIIXII XIIXIO LIIXOU XIIXIIU XIILXI
OUXII XIIOI XIIO XIIXO LIIXOU XIIXO
UXII XIIO XIIO XILI XIILU XIIU XIIXI LIXU
XII LIXII XIIOU XIIXO LIIXOIIX

OUXII XIIOI XIIO XIIXO LIIXOU XIIXO
UXII XIIO XIIO XILI XIILU XIIU XIIXI LIXU
XII LIXII XIIOU XIIXO LIIXOIIX

மேலும் கிடைக்கிறது மாடல் சிடி-701 எம்
(ரிமோட் கண்ட்ரோலுடன்)

CROWN-TV

வேறு எந்த டிவி-ஐயும்விட அதிக
இல்லங்களில் காணப்படும் ஒரே பெய

இளம் வயதில் நான் முதன்முதலில் சமைக்கத் தொடங்கியபோது, நெய பயன்படுத்தும்படி எனக்குச் சொன்னுர்கள். அம்மா சொன்னுள், ''இந்திய உணவின் மணமே அதுதான் என்று. அப்போது அவள் சொன்னது சரியாக இருந்தபோதிலும், 20 ஆண்டுகளுக்குப் பிறகு அதைவிட மிகச் சரியானதை கண்டுகொண்டேன். ஸன்ஃப்ளவர் வனஸ்பதி. சொல்லப் போனுல், சுத்த நெய்க்கு அடுத்ததாகச் சுவையில் சிறந்தது அதுதான். அது ஊட்டமிக்கது மட்டுமல்ல, சிக்கனமானதுங்கூட. ஸன்ப்ளவர் வனஸ்பதியால் கீழ்க்கண்ட உணவை சமைத்துப் பாருங்கள், உங்களுக்கே புரியும். நான் சொல்வது.

வெஜிடபிள் பஃப்

பொருட்கள் அளவு

நல்ல மைதா 150 கிராம்
ஸன்ஃப்ளவர் வனஸ்பதி
15 கிராம்
(முதன் முறை)
உப்பு 2 கிராம்



க்ரீமிங்
ஸன்ஃப்ளவர் வனஸ்பதி 50 கிராம்
(இரண்டாம் முறை)
அரிசி மாவு 5 கிராம்

ஃபில்லிங்
பச்சை பட்டாணி 50 கிராம்
காரட் 50 கிராம் • வெங்காயம் 50 கிராம்
உருளை கிழங்கு 50 கிராம்
பீன்ஸ் 100 கிராம் • உப்பு 5 கிராம்
பச்சை மிளகாய் 2 கிராம்
கடுகு 1 கிராம் • எலுமிச்சை ½
மஞ்சள் பொடி 1 சிட்டிகை • பச்சை
கொத்தமல்லி 2 அருக்கு
கறிவேப்பிலை 1 இலை • ஸன்ஃப்ளவர்
(வறுக்க) 15 கிராம்.

தங்கம் பிலிப்* சொல்கிருர்



"இருபது ஆண்டுகளுக்குப் பின் நான் கண்டு கொண்ட ஒரு உணவுப் பொருள்..."

WIPRO LIMITED
Closer to the consumer

ஸன்ஃப்ளவர் வனஸ்பதி

செய்முறை

1. மைதாவையும், உப்பையும் கலக்கவும்.

2. ஸன்ஃப்ளவர் இட்டு, தண்ணீர், உப்புடன் மென்மையான மாவாக பிசையவும்.

3. பிசைந்த மாவை சமமான உருண்டைகளாகச் செய்து கொள்ளவும்.

4. இரண்டாம் முறை ஸன்ஃப்ளவரையும் அரிசி மாவையும் கலந்து பசைபோல் செய்து தண்ணீரில் வைக்கவும்.

5. உருண்டைகளை மும்மூன்றாக அடுக்கி, அரிசிமாப் பசையை தடவவும்.



6. 2.5 செ.மீ. (1") துண்டுகளாக நறுக்கவும்

7. ஒவ்வொன்றையும் தட்டையாக்கி, வட்டவடிவமாக்கவும்.

8. வெஜிடபிள் கலவையை வைத்து, அரைவட்ட வடிவில், சோமாஸ் போல் மடிக்கவும். முனைகளை நன்கு அழுத்தி மூடவும்.

9. ஸன்ஃப்ளவர் வனஸ்பதியிட்டு பொன்னிறத்தில் வறுத்தெடுக்கவும்.

ஃபில்லிங்

1. பச்சை மிளகாய், வெங்காயத்தை நறுக்கவும். காரட், பீன்ஸ், உருளைக் கிழங்கையும் சன்னமாக நறுக்கியெடுக்கவும்.

2. கடுகைத் தாளித்து அதில் காய்கறி, வெங்காயம், பச்சை மிளகாய், மஞ்சள் பொடி இவற்றை இட்டு, சிறிது நீர் தெளித்து, மெல்லிய தீயில் (15 நிமிடம்) உருளைக் கிழங்கு வேகும் வரை வேக வைக்கவும்.

3. உப்பு கலந்து, 5 நிமிடத்திற்கு நன்கு கலக்கவும். லெமன் ஜூஸ், அரிந்த கொத்தமல்லி இவைகளை இட்டு, இறக்கி வைக்கவும்.

இச் சமையற் குறிப்பில், ஒவ்வொரு நிலையிலும் ஸன்ஃப்ளவர் வனஸ்பதி பயன்படுத்துவதைப் பாருங்கள். சுவையில் தான் எவ்வளவு வேறுபாடு! நீங்களே முயன்று பாருங்கள். வேறுபாட்டைச் சுவையுங்கள்.

* உணவு வல்லுநர், நியூட்ரிஷனிஸ்ட்



WPL-2807

உங்கள் எழிலுக்கு பெருமை சேர்ப்பது பட்டுப் போன்ற மென்மையான கூந்தல்



கிரௌன் ஹெர்பல் ஷாம்புவில் அடங்கியுள்ள விசேஷ மூலிகைகள் இயற்கையாக உங்களது கூந்தலைப் பாதுகாக்கிறது. முடி உதிர்தலின் மூல காரணமான உஷ்ணத்தைக் குறைத்து கண்களுக்கு குளிர்ச்சியூட்டுகிறது. கேசத்தின் கருமைக்குக் காரணமான 'மெலனின்' சத்துக்கு பாதுகாப்பளிக்கிறது.

முடி உதிர்தலின் காரணமும், நிவாரணமும் :

உரோமக் கால்களை கெட்டியாகப் பிடித்து முடி உதிராமல் பாதுகாக்கக் கூடிய கொழுப்பு போன்ற பாளம் மண்டை ஓட்டிற்கும் மேல் தோலுக்கும் இடையே உள்ளது. உடல் உஷ்ணம் அதிகரிக்கும் போது இப்பாளம் உருகி உரோமக் கால்களை வலுவிழக்கச் செய்து முடி உதிர்தலை அதிகப் படுத்துகிறது. கிரௌன் ஹெர்பல் ஷாம்புவில் அடங்கியுள்ள விசேஷ மூலிகைகள் உருகி நிற்கும் கொழுப்புப் பாளத்தை இதமாக குளிரச் செய்து கெட்டியாக இறுகச் செய்வதால் உரோமக் கால்கள் மேலும் உறுதியாகி உங்கள் கேசத்திற்கு அதிக பாதுகாப்பு கிடைக்கிறது.

குளிப்பதற்கு சில நிமிடங்களுக்கு முன் தலையில் தேய்த்து அதன் பிறகு குளிக்கும் போது பெறுகின்ற குளுமையும் சுகமுமே அலாதிதான்.

CROWN

உங்கள் கூந்தலுக்கு இயற்கையான பாதுகாப்பு
கிரௌன் ஹெர்பல் ஷாம்பு



Efficent/8/C/87

32—ஆம் பக்கத் தொடர்ச்சி.......

இனித் திரும்ப நந்தினி இருந்த லதா மண்டபத்துக்குப் போவதிலும் பயன் இல்லை. ஒருவேளை பெரிய-பழுவேட்டரையர் இதற்குள் அங்கு வந்திருக்கலாம். அதுவும் அபாயகரந்தான். வேறு என்ன செய்யலாம்?...... ஏன்? இந்தப் படிக்கட்டு வழியாக இறங்கிப் போய்ப் பார்த்தால் என்ன? இவ்விதம் எண்ணி நம் வாலிப வீரன் அந்தச் சுரங்கப் படிக்கட்டில் இறங்கினான்.

அத்தியாயம் 41

நிலவறை

இருண்ட சுரங்கப் பாதையில் வந்தியத் தேவன் காலை ஊன்றி வைத்து, விழுந்துவிடாமல் நடந்தான். படிகள் கொஞ்ச தூரம் கீழே இறங்கின. பிறகு சமநிலமாயிருந்தது. மறுபடியும் படிகள். மீண்டும் சமதரை. இரண்டு கைகளையும் எட்டி விரித்துப் பார்த்தான். சுவர் தட்டுப்படவில்லை. ஆகவே, அந்தச் சுரங்க வழி விசாலமானதாகவே இருக்க வேண்டும். மறுபடி சற்றுத் தூரம் போனதும் படிகள் மேலே ஏறின. வளைந்து செல்வதாகவும் தோன்றியது. அப்பப்பா! இத்தகைய கும்மிருட்டில் தட்டுத் தடுமாறி இன்னும் எத்தனை தூரம் நடக்க வேண்டுமோ தெரியவில்லையே!

ஆகா! இது என்ன! இருள் சிறிது குறைந்து வருகிறதே! மிக மிக மங்கலான ஒளி தோன்றுகிறதே! இந்த மங்கிய ஒளி எப்படி எங்கிருந்து வருகிறது? மேலே கூரையில் எங்கிருந்தாவது வரும் நிலவின் ஒளியா? அல்லது சுவர்களில் உள்ள பலகணி வழியாக வரும் ஒளியா? மறைவான இடத்தில் வைத்திருக்கும் விளக்கிலிருந்து பரவும் ஒளியா?......

இல்லை, இல்லை! இது என்ன அற்புதம்? நம் கண் முன்னால் தெரியும் இந்தக் காட்சி மெய்யான காட்சி தானா? அல்லது நமது மூளை கலங்கியதால் ஏற்பட்ட தோற்றமா?

அது ஒரு விசாலமான மண்டபம். கல்லைக் குடைந்து எடுத்து அமைத்த நிலவறை மண்டபம். அதனாலேதான் தலையை இடித்து விடும் போல் அவ்வளவு தாழ்வாகச் சமமட்டமான மேல் தளம் அமைந்திருக்கிறது. அந்த நிலவறையில் குடிகொண்டுள்ள மங்கிய நிலவொளி வெளியிலிருந்து வருவது அல்ல; கூரை வழியாகவோ பலகணி வழியாகவோ வருவதும் அல்ல. அங்கங்கே அந்த நிலவறையில் கும்பல் கும்பலாகவும் சில விடங்களில் பரவலாகவும் கிடக்கும் பொருள்களிலிருந்து வருகிறது. ஆ! அப்படி நிலவொளி வீசும் அப்பொருள்கள் எத்தகைய பொருள்கள்! ஒரு மூலையில் மணி மகுடங்கள்; முத்தும் மணியும் வைரமும் பதித்த மகுடங்கள்; இன்னொரு பக்கத்தில் ஹாரங்கள்; முத்து வடங்கள்; நவரத்தின மாலைகள், அதோ அந்த வாயகன்ற அண்டாவில் என்ன? கடவுளே! அவ்வளவும் புன்னை மொட்டுக்களைப் போன்ற வெண் முத்துக்கள்! குண்டு குண்டான கெட்டி முத்துக்கள்! அதோ அந்தப் பானையில் பளபளவென்று மஞ்சள் வெயில் வீசும் பொற்காசுகள். இதோ இங்கே குவிந்து கிடப்பவை தங்கக் கட்டிகள். தஞ்சை அரண்மனையின் நிலவறைப் பொக்கிஷம் இதுதான் போலும்! தனாதிகாரி பழுவேட்டரையரின் மாளிகையையொட்டி இந்த இருள் மாளிகையும் அதில் இந்தப் பொக்கிஷ நிலவறையும் இருப்பதில் வியப்பில்லையல்லவா? அம்மம்மா! இந்த நிலவறைக்குள் நாம் வந்து சேர்ந்தோமே? இது நம்முடைய பாக்கியமேயல்லவா? பாக்கிய லக்ஷ்மியும் அதிர்ஷ்ட தேவதையும் சேர்ந்தல்லவா நம்மை இங்கே கொண்டு வந்து சேர்த்திருக்கிறார்கள்? எப்படிப்பட்ட அதிசயமான, அபூர்வமான இரகசியத்தை, நம்முடைய முயற்சி ஒன்றும் இல்லாமலே நாம் தெரிந்து கொண்டோம்!

இதை எப்படிப் பயன்படுத்துவது? பயன்படுத்துவது அப்புறம் இருக்கட்டும்; இங்கிருந்து போவதற்கே மனம் வராது போலிருக்கிறதே! இங்கேயே சுற்றிச் சுழன்று கொண்டிருக்கலாம் போலத் தோன்றுகிறதே! இங்கேயே இருந்தால் பசி, தாகம் தெரியாது! உறக்கம் அருகிலும் அணுகாது! நூறு வருஷ காலமாகச் சோழ நாட்டு வீர சைன்யங்கள் அடைந்த வெற்றி



களின் பலன்கள் எல்லாம் இங்கே இருக்கின்றன. நவ நிதி என்று சொல்வார்களே; அவ்வளவும் இங்கே இருக்கிறது! குபேரனுடைய பொக்கிஷத்தையும் தோற்கடிக்கும் செல்வக் களஞ்சியம் இங்கே இருக்கிறது! இதை விட்டு எதற்காகப் போக வேண்டும்!



வந்தியத்தேவன் அந்த நிலவறையைச் சுற்றிச் சுற்றி வந்தான். ஒரு மூலையில் கிடந்த மணி மகுடங்களைத் தொட்டுப் பார்த்தான். இன்னொரு பக்கத்தில் கிடந்த ரத்தின ஹாரங்களைக் கையில் எடுத்துப் பார்த்தான். அவற்றைப் போட்டுவிட்டு இன்னொரு பக்கம் சென்று செப்புப் பானையில் நிறைந்திருந்த முத்துக்களில் கைகளை விட்டு அளைந்தான். வேறொரு பானையில் கையை விட்டுப் பொற்காசுகளை அள்ளிச் சொரிந்தான். ஒரு மூலையில் தரையில் பளபளவென்று ஏதோ பரவலாக ஜொலிப்பதைக் கண்டு அங்கே சென்றான். முதலில் என்னவென்று தெரியவில்லை. பிறகு, குனிந்து உற்றுப் பார்த்தான். ஐயோ! ஆண்டவனே! அது ஓர் எலும்புக் கூடு! ஒரு காலத்தில் சதையும் இரத்தமும் தோலும் உரோமமும் மூக்கும் முகமும் கண்ணும் காதுமாக இருந்த மனித உடலின் எலும்புக் கூடு!

ஆ! இந்த எலும்புக் கூடு அசைகிறதே! உயிர்பெற்று எழுகிறதே! பொற்காசுகளைப் போலவே சத்தமிடுகிறதே! நமக்கு ஏதோ சேதி சொல்ல எழுந்திருப்பதாய்க் காண்கிறதே!... வல்லவரையனுடைய உடம்பிலிருந்த ஒவ்வொரு ரோமமும் குத்திட்டு நின்றது. தனக்குப் பைத்தியந்தான் பிடித்துவிட்டது என்று நினைத்தான். சீச்சீ! எலும்புக்கூடு எழுந்திருக்கவில்லை! அதற்குள்ளேயிருந்து



ஒரு பெருச்சாளி ஓடி வருகிறது! நம் கால் மீது விழுந்து ஓடுகிறது!... ஆம்; இப்போது பார்த்தால் எலும்புக் கூடு தரையிலேதான் விழுந்து கிடக்கிறது! ஆனால் அது நமக்கு ஒரு சேதி சொல்லுகிறது என்பது உண்மை. ''ஓடிப் போ! இங்கே தாமதியாதே! நானும் உன்னைப் போல் உடல் படைத்த மனிதனாயிருந்தேன். இங்கு வந்து அகப்பட்டுக் கொண்டேன். இங்கேயே மாண்டு மடிந்தேன்! இப்போது எலும்புக் கூடாகக் கிடக்கிறேன்! ஓடிப் போ!'' என்று அது நம்மை எச்சரிக்கிறது. இங்கிருந்து உடனே தப்பிச் சென்றோமோ, பிழைத்தோம், இல்லாவிட்டால் அதோ கதிதான்; அந்த மனிதனுக்கு ஏற்பட்ட கதிதான்.

வந்தியத்தேவன் அந்த நிலவறையிலிருந்து வெளியேற எண்ணினான். ஆனால் வெளியேறும் வழிதான் தெரியவில்லை. வந்த வழியைக் கண்டுபிடிக்க முடியவில்லை. நிலவறையின் ஓரமாக எங்கே போனாலும் இருள் என்னும் பூதம் வாயைப் பிளந்து கொண்டிருந்தது. கீழே பார்த்தால் அதல பாதாளப் படுகுழியாகத் தோன்றியது. ஏறி வந்த படிக்கட்டு எங்கேயோ ஓரிடத்தில் இருக்கத்தான் வேண்டும். அதைக் கண்டுபிடிக்க வந்தியத்தேவன் மேலும் முயன்றான். தேடித் தேடி அலைந்தான். அப்படி அலையும் போது ஓரிடத்தில் சுவர் ஓரமாக ஒரு குப்பல் தங்கக் காசுகள் கிடப்பதைக் கண்டான். அந்தக் குப்பலின் மீது ஏதோ வலை பின்னியது போலிருந்தது. உற்றுப் பார்த்தபோது, அக்குவியலின் பேரில் சிலந்தி வலை கட்டியிருப்பதாகத் தெரிந்தது. சிலந்தியின் வலை அவனது சிந்தனையைத் தூண்டியது.

பெரியோர்கள் மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசைகளைச் சிலந்தி வலைக்கு ஒப்பிட்டிருக்கிறார்கள். வலையை விரித்துக் கொண்டு சிலந்தி காத்திருக்கிறது. எங்கிருந்தோ பறந்து வந்து ஈ அதில் அகப்பட்டுக் கொள்கிறது. பிறகு சிறிது சிறிதாகச் சிலந்தி ஈயை இழுத்து விழுங்குகிறது. மூன்று வித ஆசைகளும் அப்படித்தான். மனிதன் வழிதவறிச் சென்று அந்த ஆசை வலைகளில் விழுந்து அகப்பட்டுக்கொள்கிறான்; அப்புறம் மீளுவதில்லை! மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை ஆகிய மூன்று ஆசைகளின் இயல்பையும் அன்று ஒரே நாளில் நாம் அனுபவித்தாகிவிட்டது. நந்தினி என்னும் பழுவூர் இளையராணி தன்னுடைய வலையில் நம்மை அகப்படுத்தப் பார்த்தாள். பழைய வாணர் குல ராஜ்யத்தை அடையலாம் என்னும் மண்ணாசையும் காட்டினாள். கடைசியாக, இங்கே இந்தப் பயங்கரமான பொன்னாசைப் பூதம் நம்மை அடியோடு விழுங்கப் பார்க்கிறது. முதல் இரண்டிலிருந்தும் தப்பினோம். இந்த மூன்றாவது அபாயத்திலிருந்தும் தப்பவேண்டும். நமக்கு எதற்காக இந்த வம்பெல்லாம்? இராஜ்யம் எதற்கு? செல்வம் எதற்கு? பெண்களின் கூட்டுறவுதான் எதற்காக? வானத்தைக் கூரையாகப் பெற்ற அகண்டமான பூமியே நமது அரண்மனை! ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்று பண்டைத் தமிழ் நாட்டுப் பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்களே! எல்லா ஊரும் நம்முடைய ஊர்தான். எல்லா மனிதர்களும் நம்முடைய உறவினர்கள்தான். ஊர் ஊராகப் போக வேண்டியது; புது வெள்ளம் பொங்கிவரும் நதிகளையும், புதிய இலைகள் தளிர்த்து விளங்கும் மரங்களையும், பல வர்ணப் பட்சிகளையும், மான்களையும், மயில்களையும் மலைகளையும் மலைகளின் சிகரங்களை

யும், வானத்தையும் மேகத்தையும், கடலையும் கடல் அலைகளையும் பார்த்துக் களிக்க வேண்டியது; பசிக்கு உணவு கிடைக்கின்ற இடத்திலே உண்ண வேண்டியது; உறக்கம் வந்த இடத்தில் உறங்க வேண்டியது! ஆகா! இதுவல்லவா இன்ப வாழ்க்கை! எளிதில் கிடைக்கக்கூடிய இத்தகைய ஆனந்த வாழ்க்கையை விட்டுவிட்டு; தொல்லைகளும் சூழ்ச்சிகளும் ஆசைகளும் அபாயங்களும் நிறைந்த வாழ்க்கையை ஏன் மேற் கொள்ள வேண்டும்? எப்படியாவது இந்த நிலவறையை விட்டு இப்போது வெளியேறி விட்டால் போதும்; பிறகு இந்த இருள் மாளிகையையும் தஞ்சாவூர்க் கோட்டையையும் விட்டு வெளியேறிவிட வேண்டும். பின்னர், இத்தகைய தொல்லைகளில் என்றைக்கும் அகப்பட்டுக் கொள்ளவே கூடாது......

ஆகா! கதவு திறந்து மூடும் ஓசை!... மறுபடியும் காலடி ஓசை!... இன்றைய இரவின் அதிசயங்களுக்கு முடிவே கிடையாது போலும்! அதிசயங்களுக்கும் அளவில்லை; பயங்கரங்களுக்கும் எல்லையில்லை! இம்முறை வெகுதூரத்திலிருந்து அந்தக் காலடிச் சத்தங்கள் கேட்டன. இரண்டு பக்கங்களிலிருந்தும் வருவதாகத் தோன்றியது. வந்தியத்தேவன் காது கொடுத்துக் கவனமாகக் கேட்டான். பொக்கிஷ நிலவறையில் நாலு புறமும் சூழ்ந்திருந்த இருளைக் கிழித்துக் கொண்டு பார்ப்பவனைப் போல் உற்றுப் பார்த்தான். சிறிது நேரத்துக்கெல்லாம் அவன் எதிர்பார்த்தது போலவே அபூர்வமான காட்சியைக் கண்டான்.

கூத்து மேடையிலிருந்து மிகத் தொலைவிலே உட்கார்ந்திருப்பவனுக்கு மேடையில் தோன்றும் காட்சிகள் எப்படியிருக்குமோ அப்படியிருந்தது வந்தியத்தேவன் அப்போது கண்ட காட்சி. அவன் அச்சமயம் இருந்த இடத்துக்கு உயரமான ஓர் இடத்தில், தொலை தூரம் என்று தோன்றிய தூரத்தில் அது நடந்தது.



கூத்து மேடையின் ஒரு பக்கத்திலிருந்து ஒரு தீவர்த்தி வந்தது. இன்னொரு புறத்துப் பக்கம் படுதாவை நீக்கிக் கொண்டு மற்றொரு தீவர்த்தி வந்தது. தீவர்த்திகள் இரண்டும் நெருங்கி நெருங்கி வந்து கொண்டிருந்தன. ஒரு தீவர்த்தி வெளிச்சத்தில் இரு நெடிய கரிய உருவங்கள் தெரிந்தன. இன்னொரு தீவர்த்தியின் ஒளியில் மற்றும் இரு உருவங்கள் காணப்பட்டன. அவற்றில் ஒன்று நெடிய கம்பீரமான உருவம்; மற்றொன்று சிறிது குட்டையான மெல்லிய வடிவம். இரு தரப்பு உருவங்களும் ஒன்றையொன்று நெருங்கி வந்து கொண்டிருந்தன. வந்தியத்தேவன் மேலும் கண் விழிகள் பிதுங்கும்படி உற்றுப் பார்த்து அந்த உருவங்கள் யாருடையவை என்பதை ஒருவாறு தெரிந்து கொண்டான். இடது பக்கத்திலிருந்து வந்த இரு உருவங்கள் மதுராந்தகத் தேவரை அழைத்துச் சென்ற கந்தமாறனும் காவலனும்; வலது புறத்திலிருந்து வந்த உருவங்கள் பெரிய பழுவேட்டரையரும் அவருடைய இளையராணி நந்தினிதேவியும்.

இந்த இரு கோஷ்டியாரும் சந்திக்கும்போது என்ன நடக்கும்? ஏதாவது விபரீதமாக நடக்குமா? அல்லது ஒருவருக்கொருவர் வழி விட்டு விட்டுச் சாவதானமாகப் போய் விடுவார்களா?... வந்தியத்தேவன் அந்தப் பரபரப்பில் மூச்சு விடுவதைக் கூட நிறுத்திக் கொண்டு அத்தனை கவனமாகப் பார்த்துக் கொண்டிருந்தான்.

இரு கோஷ்டியாரும் சந்தித்தார்கள். அவர்கள் தடுமாறித் தயங்கி நின்றதிலிருந்து இரு சாராருக்கும் அச்சந்திப்பு வியப்பையும் திகைப்பையும் அளித்திருக்க வேண்டுமென்று தோன்றியது. ஆனால் விபரீதம் ஒன்றும் நேர்ந்துவிட



வில்லை. பழுவேட்டரையர் கந்தமாறனைப் பார்த்து ஏதோ கேட்டார். அதற்குக் கந்தமாறன் ஏதோ விடை சொன்னான். கேள்வியும் விடையும் என்னவென்பது வந்தியத்தேவனின் காதில் விழவில்லை. பிறகு, பழுவேட்டரையர் கையினால் சமிக்ஞை செய்து சுரங்க வழியின் படிக்கட்டைச் சுட்டிக் காட்டினார். கந்தமாறன் அவ்வரைப் பணிவுடன் வணங்கினான். வணங்கிவிட்டுப் படிக்கட்டில் இறங்கினான். அவனுக்குப் பின் கையில் தீவர்த்தியுடன் வந்த காவலனைப் பார்த்துப் பழுவேட்டரையர் ஏதோ சமிக்ஞை செய்தார். அவனும் மறுமொழி சொல்லாமல் ஒரு கையினால் வாயைப் பொத்திக் கொண்டு வணங்கினான். பிறகு கந்தமாறனைத் தொடர்ந்து படிக்கட்டில் இறங்கினான். பழுவேட்டரையரும் இளையராணியும் இடதுபக்கம் நோக்கிச் சென்றார்கள்.

நிழலாட்டத்தையும் பொம்மலாட்டத்தையும் ஒத்த மேற்கூறிய நிகழ்ச்சிகள் எல்லாம் சில கண நேரத்தில் நடந்துவிட்டன. இவ்வளவும் சுரங்க வழியில் இறங்கும் படிக்கட்டின் அருகில் நிகழ்ந்தன என்பதை வந்தியத்தேவன் கவனித்துக் கொண்டான்.

ஆகா! நாம் வழியில் எங்கும் நில்லாமல் இந்த நிலவறையில் வந்து சுற்றிச் சுழன்று கொண்டிருந்தது எவ்வளவு நல்லதாய்ப் போயிற்று! நாம் மட்டும் அந்த இரு கோஷ்டிக்கும் நடுவில் அகப்பட்டுக் கொண்டிருந்தால் நம் கதி என்னவாகியிருக்கும்? ஏதோ அந்த மட்டுக்கும் பிழைத்தோம். தப்பித்துக் கொள்ள வழி என்ன? கந்தமாறன் மதுராந்தகத் தேவரை அழைத்து வந்த சுரங்க வழியில் திரும்பிச் செல்கிறான் என்பதில் ஐயமில்லை. அந்த வழியிலிருந்து நாம் சிறிது விலகி இந்தப் பொக்கிஷ நிலவறைக்கு வந்திருக்க வேண்டும். இப்போது கந்தமாறன் போகும் வழியைத் தொடர்ந்து சென்றால், எப்படியும் வெளியேறும் வாசலைக் கண்டு கொள்ளலாம். பிறகு ஏதேனும் உபாயம் செய்து தப்பிக்கலாம். அப்படி அவசியம் நேர்ந்தால், கந்தமாறனிடமே உதவி கேட்கலாம். இல்லாவிட்டால் அவனையும் அந்தக் காவலனையும் ஒரு கை பார்த்துவிட்டுத் தப்பிச் செல்லலாம். எனவே, கந்தமாறனை இப்போது பின் தொடரலாம்.

முதலில், தீவர்த்திவெளிச்சம் நிலவறைக்கு அருகில் வருவது போலிருந்தது. வந்தியத்தேவன் மூச்சைப் பிடித்துக் கொண்டு நின்றான். பிறகு அவ்வெளிச்சம் அகன்று செல்வது போலிருந்தது. அதற்குள் வந்தியத்தேவன் சுற்றுமுற்றும் பார்த்துத் தான் அந்த நிலவறைக்குள் பிரவேசித்த படிக்கட்டு எது என்பதை அறிந்து கொண்டான். அதன் வழியாகக் கீழே இறங்கி மீண்டும் மேலேறினான். தீவர்த்தி வெளிச்சத்தை விட்டு விடாமல், அதிகமாகவும் நெருங்காமல், காலடி ஓசை கேட்காதபடி மெதுவாக அடிவைத்து நடந்து சென்றான். வளைந்தும் நெளிந்தும் சுற்றியும் சுழன்றும் ஏறியும் இறங்கியும் சென்ற அந்தச் சுரங்கப் பாதையில் நாமாக இருளில் நடந்து வழி கண்டுபிடித்துப்

போவது எவ்வளவு அசாத்தியமான காரியம்! வாழ்க கந்தமாறன்! அவன் இப்போது தன்னை அறியாமல் நமக்குச் செய்யும் உதவிக்கு எப்போது என்ன கைம்மாறு செய்யப் போகிறோம்!......

அதற்கு ஒரு சந்தர்ப்பம் அவ்வளவு சீக்கிரத்திலேயே கிடைக்கும் என்று வந்தியத்தேவன் எண்ணவேயில்லை!...

சுரங்கப்பாதையின் முடிவு வந்து விட்டது. எதிரில் ஒரு பெருஞ்சுவர் தெரிந்தது. அதில் ஒரு வாசலோ, கதவோ இருக்கும் என்று யாரும் கருத முடியாது. ஆயினும் இருக்கத்தான் வேண்டும்! சுரங்கப் பாதைக்கு ஒரு இரகசிய வாசல் இருந்தே தீர வேண்டு மல்லவா?

காவலன் தன் வலது கையிலிருந்த தீவர்த்தியை இடது கைக்கு மாற்றிக் கொள்கிறான். வலது கையினால் சுவரில் ஓரிடத்தில் கைவைத்து ஏதோ செய்கிறான். திருகாணியைத் திருகுவதுபோல் திருகுகிறான். சுவரில் மெல்லிய கோடு போல் ஒரு பிளவு தோன்றுகிறது. அப்பிளவு வரவரப் பெரிதாகி வருகிறது. ஓர் ஆள் நுழையும்படியான பிளவாகிறது. காவலன் ஒரு கையினால் அதைச் சுட்டிக் காட்டுகிறான். கந்தமாறன் அவனிடம் ஏதோ சொல்லிவிட்டுச் சுவரில் தோன்றிய பிளவில் ஒரு காலை வைக்கிறான். ஒரு கால் இன்னும் சுரங்கப் பாதையிலேதான் இருக்கிறது. இப்பொழுது அவனுடைய முதுகுப் பிரதேசம் முழுதும் புலனாகிறது!

ஆகா! இது என்ன? இந்தக் காவலன் என்ன செய்கிறான்? அரையில் செருகியிருந்த கூரிய வளைந்த சிறு கத்தியை எடுக்கிறானே? கடவுளே! கந்தமாறனுடைய முதுகில் ஓங்கிக் குத்திவிட்டானே! படு பாதகன்! ஒருவனுக்குப் பின்னாலிருந்து முதுகில் குத்தும் சண்டாளன்!......

வந்தியத்தேவன் தான் ஒதுங்கி நின்று கொண்டிருந்த இடத்திலிருந்து வெளிவந்தான். ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்தான்! அந்தச் சத்தத்தைக் கேட்டுக் காவலன் திரும்பினான்! தீவர்த்தியின் ஒளி வந்தியத்தேவனின் கோபாவேச முகத்தில் விழுந்தது!

(தொடரும்)


சிதைவுகள்

அலுவலகம் முடிந்ததும் வழக்கம்போல் தலைசீவி, முகம் கழுவிக் கொண்டு வீட்டுக்குப் புறப்படத் தயாரான போதுதான் 'சார்' என்று விநாயகம் என்னை அழைத்தார்.

எனது அலுவலகத்திற்கு வேலை நிமித்தம் அடிக்கடி வந்து போகும் அவரிடம் சமீப காலமாகத்தான் நட்பு ஏற்பட்டிருந்தது. புன்சிரிப்பில் ஆரம்பித்து, சம்பிரதாய விசாரிப்புக்களில் மெள்ள முன்னேறி, ஒரு மாதத்தில் எங்கள் நட்பு சிறிது வலுப்பட்டது. ஒருமுறை அலுவலகத்துக்கு வெளியே சந்தித்த போது, இருவரும் சேர்ந்து ஹோட்டலில் காப்பி அருந்தினோம். அப்போதுதான் அவர் தமது மகளுக்குத் திருமணம் நிச்சயித்திருந்ததாகவும், அதற்குப் புடைவை, நகை என்று தேவையான பொருட்கள் வாங்கவே வெளியே கிளம்பியதாகவும் கூறினார். கல்யாணம் இரண்டு மாதங்கழித்து ஒரு ஞாயிற்றுக்கிழமை அன்று நடக்க இருப்பதாகத் தெரிவித்தார். நான் கட்டாயம் வரவேண்டும் என்று அந்தச் சமயத்தில் முன்கூட்டியே அழைத்ததோடு, கல்யாணத்திற்கு இரண்டு வாரங்கள் இருக்கையில் பத்திரிகையும் கொண்டு வந்து அலுவலகத்தில் கொடுத்தார்.

விநாயகத்தின் மகள் கல்யாணத்தை நான் அடியோடு மறந்து போய்விட்டிருந்தேன். இப்போது அவரிடம் வசமாக மாட்டிக் கொள்ளப் போகிறோமே என்று ஒரே தர்ம சங்கடமாகப் போய்விட்டது. கல்யாணம் ஞாயிற்றுக்கிழமையன்று நடந்திருந்ததால் அலுவலக வேலை என்று சாக்குப் போக்குச் சொல்ல முடியவில்லை.

விநாயகம் என்னை அணுகினார்: "என்ன இப்படி! கல்யாணத்துக்கு வராம வச்சுட்டீங்க! போனால் போகிறது — இன்றைக்கு மாப்பிள்ளையின் அலுவலக நண்பர்களுக்கு என்று பிரத்தியேகமாக ரிஸப்ஷன் ஏற்பாடு செய்திருக்கேன். இதோ, பக்கத்தில் கலா கல்யாண மண்டபத்தில்தான். உங்களைக் கையோட அழைச்சுக்கிட்டுப் போகலாம்னு தான் வந்தேன். வாங்க சார்! உங்களை மாதிரி நாலு பேர் வந்தால்தானே எனக்கும் கௌரவம்."

இவ்வளவு தூரம் அவர் சொன்னதும் மறுக்க முடியாமல் அவருடன் புறப்பட்டேன். பேசிக் கொண்டே இருவரும் பக்கத்துத் தெருவிலிருந்த மண்டபம் நோக்கி நடந்தோம்.

அப்போதுதான் விநாயகம் திடீரென்று "ஒரு நிமிடம்" என்று விடைபெற்று அருகே இருந்த ஓட்டுக் கூரை வீட்டினுள் நுழைந்தார். அந்த வீட்டில் வசித்த மாடசாமியும் எனக்குப் பழக்கம்தான் — எனது அலுவலகத்திற்கு அடிக்கடி வந்து போய்க் கொண்டிருப்பவர். வெற்றிலைச் சாறு வழியும் வாயும், எப்போதும் தாடியுடன் கூடிய தாடையும், நுனியில் நூல் தொங்கும் காக்கி உடையுமாக — கார்ப்பரேஷன் துப்புரவுப் பணியாளர் என்று, பார்த்ததுமே சொல்லி விடக் கூடிய தோற்றத்துடன் எப்போதும் காட்சியளிப்பவர் அவர்.

அந்த மாடசாமியின் வீட்டிற்குள்தான் இப்போது நுழைந்திருந்தார் விநாயகம். ஒரே நிமிடத்தில் திரும்பி வெளியே வந்தார். "மாடசாமி ஏற்கெனவே புறப்பட்டு மண்டபத்துக்குப் போய்விட்டானாம்" என்றார் முகமெல்லாம் பூரிக்க. மாடசாமி எனக்கு அறிமுகமானவன் என்பது விநாயகத்துக்கு அலுவலகப் பழக்கத்தால் தெரிந்திருந்தது. இருவரும் வேகமாக நடந்து மண்டபத்தை அடைந்தோம்.

மண்டபத்துள் நுழைந்ததுமே யாரோ விநாயகத்தை அழைத்தார்கள். அவர் என்னை ஒரு நாற்காலியில் உட்கார வைத்து விட்டுப் பின்புறம் போய்விட்டார்.

பொழுது போகாமல், வந்திருந்த சிறு கூட்டத்தைக் கண்களால் துழாவினேன். மாடசாமி முன் வரிசையில் உட்கார்ந்திருந்தது தெரிந்தது. பளிச்சென்று வெள்ளை வேட்டி உடுத்தி அவர் எல்லோருடனும் உட்கார்ந்திருந்ததைப் பார்த்தபோது சந்தோஷமாக இருந்தது. அவருக்குச் சம அந்தஸ்து கொடுத்து, வரவேற்புக்கு அழைத்திருந்த விநாயகத்தின்பால் ஒரு புதிய மரியாதை ஏற்பட்டது. சாதாரணமாக மாடசாமியை ஒத்தவர்கள் இதுபோன்ற விசேஷங்களில் பின் கட்டில் உட்கார்த்தப்பட்டிருப்பார்கள். எல்லோரும் சாப்பிட்ட பிறகு அவர்களுக்குத் தனியே உணவு அளிக்கப்படும். பல சமயங்களில், உணவைப் பரிமாறக் கூட மனமின்றி, வெறுமே பொட்டலமாகக் கட்டிக் கொடுத்து அனுப்பி விடுவார்கள். ஆனால் விநாயகம் வித்தியாசமானவர்... மாடசாமி ஸ்பீக்கரில் ஒலித்த பாட்டிற்கேற்பத் தாளம் போட்டபடி நடுநாயகமாக உட்கார்ந்திருந்தார்.

மாடசாமியிடம் பேசுவதற்காக நான் எழுந்த அதே நேரத்தில் அவரைக் கூப்பிட்டபடி பின்கட்டிலிருந்து வந்தார் விநாயகம். தொடர்ந்து பின்புறம் கையைக் காட்டி விநாயகம் ஏதோ சொல்ல, மாடசாமியின் முகத்தில் சந்தோஷப் பூச்சு மறைந்தது. அவர் கண்களில் தாங்க முடியாத வலியின் பிரதிபலிப்புத் தெரிந்தது — ஒரே ஒரு கணம்தான் — தன்னைச் சுதாரித்துக் கொண்டு விட்டார் மாடசாமி. கடினமாய் முகத்தை வைத்துக் கொண்டு பின்புறம் நோக்கி நடந்தார். தொடர்ந்து விநாயகம், "ஆள் வருது பார், தண்ணி ஊத்து!" என்று அவரை நோக்கிச் சொன்னபோது, அவர் குரல் அனாவசியமாக ஓங்கி ஒலித்ததாக எனக்குப் பட்டது.

"கல்யாண மண்டபத்துக்குக் காசு மட்டும் வாங்கறானுங்க — அதுக்குத் தகுந்தாற்போல் இடமும் இருக்க வேண்டாமா...? இப்ப மாடசாமி மட்டும் இல்லேன்னா..." என்றபடி விநாயகம் என் அருகே வந்தார். அதற்குள் நான் வாசல் நோக்கிப் புறப்பட்டிருந்தேன்.

"ஏன் இவ்வளவு சீக்கிரம் கிளம்பறீங்க? இருந்து சாப்பிட்டுட்டு..."

"தலைவலி" என்று மட்டும்தான் என்னால் சொல்ல முடிந்தது.

— தினவெங்கரங்கஸ்ரீ

ஆபத்தான வளைவுகள்

6

"என்னா சார்! ஆபீஸ் வேலையெல்லாம் எப்படி இருக்கு? நெளிவு சுளிவெல்லாம் கத்துக்கிட்டாச்சா?" என்று அக்கறையுடன் விசாரித்தார் சதா.

அன்று அமாவாசையானதால் சதாவின் கடை வெறிச்சோடியிருந்தது. ரேடியோவில் விவித பாரதி கேட்டபடியே எதிரில் வைக்கப்பட்டிருந்த இட்லி — வடைகளைக் கணக்குப் பார்க்காமல் வயிற்றுக்குள் அவர் அனுப்பிக் கொண்டிருக்க, வழக்கம் போலப் பேப்பரைப் புரட்டிக் கொண்டிருந்தான், அருண்.

"கற்றுக் கொள்ள அங்கே எதுவுமில்லே சதா.... அஞ்சாம் கிளாஸ் படிச்ச பையன் கூட என் வேலையைச் செய்வான். படிப்புக்குத் தகுந்த வேலை இல்லே...." என்று வெறுப்புடன் பதில் சொன்னான் அருண்.

"அது கிடக்கட்டும். சம்பளம் நல்லா கொடுக்கிறானா இல்லியா! அ(த்)தைப் பாரு சார்!"

"அறுநூறு ரூபாய் சம்பளம்... இன்னும் பதினைஞ்சு நாள்லே முதல் சம்பளம் வாங்குவேன்...."

"சம்பளத்தை வாங்கிக்கினு நேரா வூடு வந்து சேரு சார். அப்பா—அம்மாவை நிக்க வச்சு, அவங்க கால்லே வுழு.... அம்மா கைலே துட்டைக் கொடு.... மனசு குளிர்ந்து போவாங்க...."

"நீங்க அப்படித்தான் செய்தீங்களா?"

"நம்ம தோஸ்துங்க எங்க சார் செய்ய வுட்டானுங்க?" — தட்டிலேயே கை கழுவி, சிவப்புத் துண்டில் துடைத்தார். "தம் மாத்தூண்டு பையனா இருக்கிறப்போ ஒரு கடையிலே வேலைக்குப் போனேன். ஒரு ரூபா சம்பளம். முதல் சம்பளத் துட்டுலே சிநேகிதங்களோடச் சேர்ந்து, குச்சி ஐஸ் வாங்கித் துன்னுட்டேன்.... வெறுங் கையோடதான் வூட்டுக்குப் போனேன்...."

"அப்பா—அம்மா எதுவும் கேட்டுக்கல்லியா....?"

"அம்மா சும்மா இருந்துட்டாங்க. எங்க நயினா, 'கஸ்மாலம்! அந்த ரூபாயை நம்பித் தானேடா நான் சாராயக் கடையிலே கடன் வச்சிட்டு வந்தேன்!'னு சொல்லி, வுட்டார் பார் கன்னத்திலே ஒரு அறை.... ஒரு பல் எகிறிடுச்சு சார்...."

முகுந்தன்

"............"

"பல்வலி வேறே வந்துடுச்சு எனக்கு... மறுநாள் வேலைக்குப் போகல்லே. நான் துடிக்கிறதைப் பார்த்துட்டு; நயினா ஐஸ் கட்டி வாங்கியாந்து கன்னத்திலே வச்சாரு... 'குச்சி ஐஸ் வேணுமா சொல்லுடா'ங்கறாரு...."

"ஆனால் எங்க அப்பா ஒரு வறட்டு மனுஷர், சதா.... பாசம், நேசம் எதையும் எதிர்பார்க்க முடியாது...."

"அப்படிச் சொல்லாதே சார்.... எல்லாப் புள்ளைங்களுக்கும் அப்படித்தான் தோணும். ஒரு தகப்பனைப் புரிஞ்சுக்கிடணும்னா, நீயும் தகப்பனாகணும்..." என்ற சதா சற்று நேரம் மௌனமாக இருந்தார். "அது போகட்டும். உங்கிட்டே இன்னொரு விஷயம் சொல்லணும்...."

"சொல்லுங்க."

"உங்கூட நிறையப் பொண்ணுங்களும் வேலை செய்யும்.... அதுங்ககிட்டே ஜாக்கிரதையா நடந்துக்க சார்...."

"எதுக்கு இப்படித் 'திடீர்'னு உபதேசம் பண்றீங்க?"

"எனக்குத் தெரிஞ்சு நிறைய ஆளுங்க ஆபீஸ்லேகூட வேலை பார்க்கிற பொண்ணுங்களாலே வம்புலே மாட்டியிருக்காங்க. அதைத் தொட்டுச் சொல்றேன்..... 'ஐயோ பாவம்'னு இரக்கப்பட்டு, ஒரு பொண்ணுக்கு உதவி செய்தாரு சீ(த்)தாராமன்னு ஒருத்தர்... நம்ம கடைக்குக் கூட வருவாரு.... நீ பார்த்திருப்பியே சார்?"

"இல்லே.... நான் பார்த்ததில்லே...."

"அக்கா கல்யாணத்துக்குப் பணம் கொடுங்கன்னு அது கேட்டிருக்கு.... இந்தாளுக்கு இந்தப் பொண்ணு மேலே ஒரு இது.... அதனாலே என்ன பண்ணிட்டாரு, ஆபீஸ் பணத்திலே கை வச்சிட்டாரு.... அந்தப் பொண்ணு இன்னாடான்னா, தன் எதிர் வூட்டுப் பையனோட ஓடிப் போயிடுச்சு...."

"அடடே!"

"நம்மாளு மாட்டிக்கினாரு.... சீட்டைக் கிழிச்சு ந(ய்)யா பைசா கையிலே கொடுக்காம, வெளியே அனுப்பிட்டாங்க. இப்ப பெரியமேட்டிலே ஒரு பாய் கிட்டக் கணக்கெழுதறாரு.... நம்ம கடைக்கு வந்தார்னா

காட்டறேன் பாரேன்....''

சுவர்க் கடிகாரத்தைப் பார்த்து, பேப்பரை மடித்து வைத்தான் அருண். ''டயமாயிட்டுது சதா.... குளிச்சு, டிபன் சாப்பிட்டு, ஆபீஸ் போகணும்....'' என்றபடி எழுந்து கொண்டான்.

வீடு திரும்பும்வரையில் சதா சொன்னது தனக்கு மறைமுகமாக அளிக்கப்படும் எச்சரிக்கையோ என்ற சிறு உறுத்தல் அவனுக்கு இருந்தது. ஆனாலும், லேகாவுக்குக் கொடுத்த வாக்குப்படி, ஃபார்முலாவைத்தேடி (திருடி)த் தருவது புத்திசாலித்தனமா, வடிகட்டிய முட்டாள்தனமா என்றெல்லாம் அதிகமாக யோசிக்கவில்லை.

சராகா நிறுவனமோ அந்த மருந்தைத் தயாரிக்கத் தொடங்கவில்லை. அதற்கு இன்னும் எத்தனை காலம் ஆகுமோ? லேகாவின் தகப்பனாரோ அதை உடனே தயாரிக்கத் துடித்துக்கொண்டிருக்கிறார். அவருக்குஉதவுவதில் என்ன தப்பு?

விட்டுத் தள்ளு சதாவை!

தன் வேலையில் அதிகப்படியாகச் சுறுசுறுப்புக் காட்டத் தொடங்கினான் அருண். குப்பையைக் கிளறுவதற்கு முன்பு, ஏற்கெனவே ஏதாவது ஒரு ஃபைலில் அந்த ஃபார்முலா இடம் பெற்றிருக்கலாமோ என்ற சந்தேகம் எழ.... தன் அறையிலிருந்த ஃபைலிங் காபினெட்களைக் குடைந்து பார்த்தான்.

பலனில்லை.

இனி வேறு வழியில்லை. மானேஜரிடமே கேட்டு விடுவது என்று தீர்மானித்தான்.

அவன் நெருங்கிய நேரம், மானேஜர் சிவம் ஏகக் கடுப்பில் இருந்தார். அதற்கு ஒரு சிறிய பின்னணி இருந்தது.

அன்று காலை மானேஜரை எம்.டி. 'பாணி அழைத்தார். ''சிவம்! ரொம்பப் பிஸியாக இருக்கிறீர்களா?''

''ஆமாம்'' என்றால், ''அப்படி என்ன பெரிசாகக் கிழிக்கிறீர்?'' என்பார். 'இல்லை' என்றாலோ, 'நினைச்சேன். நம்ம ஆபீசுக்கு மானேஜர் போஸ்டே தண்டம்!'' என்று தீர்ப்பு வழங்குவார் பாணி.

எனவே பேசாமல் நின்ற சிவத்திடம், ''எனக்காக ஒரு அரை மணி நேரம் வெளியிலே போய் வர முடியுமா?''

''ஓ. எஸ்!''

''குண்டுப் பையனுக்குப் பிஸ்கெட் இல்லையாம்... பங்களாவிலிருந்து போன் வந்தது. ஆபீஸ் காரை எடுத்துக் கொண்டு போய், நாலு பாக்கெட் பிஸ்கெட் வாங்கி வாருங்களேன்!''

துள்ளிக்குதித்துக்கொண்டுவெளியேறிய சிவம், சற்று நேரத்துக்கெல்லாம் உயர் ரக பிஸ்கெட் பாக்கெட்டுகள் நான்கைப் பவ்விய





அமைச்சர்: மத்திய அரசிடம் வறட்சி நிவாரண நிதிக்குப் பணம் கேட்டு அறிக்கை சமர்ப்பிக்கப் போனேம். அந்தச் சமயம் பார்த்துப் பலமா மழை பிடிச்சுக்கிட்டு, கொட்டித் தீர்த்திடுச்சு....

நண்பர்: அடாடா! அப்ப உங்க முயற்சி வீணாயிடுச்சுன்னு சொல்லுங்க!

அமைச்சர்: விடுவோமா? வெள்ள நிவாரண நிதிக்குப் பணம் தேவைன்னு அறிக்கையைத் திருத்தி எழுதிக் கொடுத்துட்டோம்!

— தாஜா

மாகப் பாணியின் மேஜை மீது வைத்தார்.

பாணி முறைத்தார், விறைத்தார். "என்னய்யா இதெல்லாம்?"

"இது பைனாப்பிள் க்ரீம். இது ஆரஞ்ச் க்ரீம். இது போர்பான்..."

"எதுக்காக வாங்கினீர் இதையெல்லாம்?"

திகைத்தார் சிவம். "நீங்கதானே குண்டுப் பையன் சாப்பிடப் பிஸ்கெட் இல்லே என்றீர்கள்?"

"இதையெல்லாம் நீரும் நானும் தின்னலாம். குண்டுப் பையன் சாப்பிடுவானய்யா?"

"ஏன் சார்? சாப்பிட மாட்டானு?"

"நீர் ஒரு வேலே செய்யும்.... பங்களாவுக்குப் போய், குண்டுப் பையனுக்கு இதைக் கொடுத்துப் பாரும். அவன் என்ன பண்றான் என்பதை என்னிடம் வந்து சொல்லும்!"

தப்பித் தவறி மனைவி நாகலட்சுமியின் முகத்தில் அன்று விழித்ததை நொந்து கொண்டே, பாணியின் பங்களாவுக்குப் போனார் சிவம்.

பங்களா வேலைக்காரனிடம், "முதலாளி அனுப்பினர். குண்டுப் பையனுக்குப் பிஸ்கெட் கொண்டு வந்திருக்கிறேன்!" என்றதும், அவுட் ஹவுஸ் பக்கம் அழைத்துச் சென்றான். கதவைத் திறந்து, "போங்க சார்! உள்ளே குண்டுப் பையன் விளையாடிக்கிட்டிருக்கான்!" என்று சொல்லி, வாபஸானன்.

சிவம் உள்ளே நுழைந்தவுடனேயே, "வள்! வள்! வர்ர்! வர்ர்!" என்று வரவேற்றபடியே நாலுகால் பாய்ச்சலில் வந்து, சிவத்தைப் பகல் திருடனென்று நினைத்துத் தாவிய போதுதான், குண்டுப் பையன் என்பது அசல் அல்சேஷனின் செல்லப் பெயர் என்ற ஞானம் பிறந்தது.

ஆனல் காலங் கடந்த ஞானம்.

ஏனெனில் குண்டுப் பையன் பாய்ந்த வேகத்தில், தென்னந் துடைப்பத்தால் அடி வாங்கிய கரப்பான் பூச்சி போல இசகுபிசகாக மல்லாந்து விழுந்து விட்டார் சிவம்.

எடுத்த எடுப்பிலேயே எதிரியை வீழ்த்தி விட்ட பெருமிதத்துடன் குண்டுப் பையன் சிவத்தை நெருங்கவும், 'சிவமாக நுழைந்தோம்; சவமாகத்தான் வெளியேறப் போகிறேம்' என்ற பயத்தில் சப்த நாடியும் ஒடுங்க, சித்தம் கலங்க, சத்தமின்றிப் படுத்துக் கிடந்தார்.

குண்டுப் பையன் மானேஜரின் ஐந்தடி நாலங்குல உடலில் எந்தப் பகுதி ருசியானது என்பதைத் தெரிந்து கொண்டு, அதை முதலில் ருசி பார்க்கவும், முடிந்தால் தனியே எடுத்து இரண்டு—மூன்று நாள் டின்னருக்கென்று வைத்துக் கொள்ளவும் விரும்பியது போல அவரை ஒட்டுமொத்தமாக முகர்ந்து பார்த்தது.

சிவத்தின் கழுத்துப் பகுதியில், கோலி சோடாவின் கண்ணாடிக் குண்டு போலக் குரல்வளை மேலும் கீழும் ஏறி இறங்குவதைக் கண்டு குஷி பிறந்த குண்டுப் பையன், 'கண்டேன் தொண்டையை!' என்று பகிரங்கமாக நாய் — மொழியில் அறிவித்து விட்டு, முழுப் பலாப் பழத்தில் துண்டு போட்டுக் காட்டும் பழக்காரனின் ஆர்வத்துடன் பற்களைப் பதிக்க முற்படுகையில் —

"அம்பிகே! காப்பாற்று!" என்று இஷ்ட தெய்வத்துக்கு லேட்னிங்—கால் போட முற்பட்ட சிவம், "அம்பிகே!" என்பதற்கு மேல் அலற முடியாமல் திணற —

ஹை—ஹீல்ஸ் சப்திக்க, காட்சிக்குள் நுழைந்தாள் ஒரு கவர்ச்சிக் கன்னி. "ஏ குண்டுப் பையா! கம் ஹியர்!" என்று அவள் ஓர் அதட்டல் போடவும், வாய்க்கு எட்டியது வயிற்றுக்கு எட்டாத ஏமாற்றத்துடன் சிவத்தை விடுவித்து, அவளது காலருகே வாலைக் குழைத்துக் கொண்டு போய் நின்றது குண்டுப் பையன்.

சிவம் சட்டென்று எழுந்தார். தூசு தட்டிக் கொண்டார். எந்த உறுப்பும் கழன்று போய் விடவில்லைஎன்றுஉறுதிசெய்துகொண்டார். ஒரு மூலையில் விழுந்திருந்த மூக்குக் கண்ணாடியை எடுத்து மாட்டிக் கொண்டார். அந்தக் கன்னியைப் பார்த்துப் பெரிசாக ஒரு கும்பிடு போட்டார். "அம்பிகே என்று அலறினேன்.... தெய்வம் போல வந்து நின்று காப்பாற்றினீர்கள்!"

"என் பெயர் அம்பிகாதான் அங்கிள்... யாரோ கூப்பிட்ட மாதிரி இருந்தது. அதனல்தான் ஓடி வந்தேன்... ஆமாம், நீங்க யாரு?"


"நான் சராகா ஆபீஸ் மானேஜர். பெயர்: சிவம். குண்டுப் பையனுக்குப் பிஸ்கெட் கொடுத்து விட்டு வா என்று எம்.டி. சொல்லியனுப்பினர். நான் என்ன இழவைக் கண்டேன்.....?"

சிதறிக் கிடந்த பிஸ்கெட் பாக்கெட்டுகளைப் பார்த்துவிட்டு, "குண்டுப் பையன் இதைத் தீண்டக் கூட மாட்டானே!" என்று

இதோ PET 14 D

எலெக்ட்ரானிக் ட்யூனர் கொண்ட போர்ட்டபிள் டிவி

1. ஆறு புரோக்கிராம் செலக்டர்கள்.
2. தம்ப் வீல் சானல் ட்யூனிங்.
3. குறுக்கீடுகளைத் தவிர்க்க ஏ ஜீ ஸி (ஆட்டோமாட்டிக் கெய்ன் கண்ட்ரோல
4. உயர்சக்தி படைத்த இரட்டை ஆன்டென்னு.
5. கார் பாட்டரி அல்லது எந்த 12-வோல்ட் மின்விசையிலும் இயக்கம்.
6. கைப்பிடி கொண்ட கட்டுறுதி வாய்ந்த பாலிஸ்டைரீன் வார்ப்பட காபினெட்



மெகானிகல் ட்யூனர் கொண்ட
PET-14 E-யும் கிடைக்கிறது

சாலிடேர்

-தொல்லையில்லாத் தொலைக்காட்சி-

Insight DE 508



கரூர்!

"புது ஆபீஸர் ரொம்ப கரூர் பேர் வழி."

"ஓகோ, லஞ்சம் வாங்க மாட்டா ராமா?"

"இல்லே, ரேட்டை நல்ல பயங்கரமா உயர்த்திட்டார்!"

— இளை அ. கதிர்வேல்

சிரித்தாள் அம்பிகா.

அப்போதுதான் அவளை நன்றாகக் கவனித்தார் சிவம். பால், தயிர், வெண்ணெய், நெய், சீஸ், ஐஸ்க்ரீம் இவற்றையே சாப்பிட்டு வளர்ந்தவள் போல அம்பிகாவின் தோற்றத்தில் பளபளப்பு, வழவழப்பு.

அந்த அசத்துகிற அழகில் ஆணவத்தின் சாயலும் கொஞ்சம் கலந்திருப்பது போலத் தோன்றியது. 'அவள் எப்படிப்பட்டவளாக இருந்தால் நமக்கென்ன? சமயத்திலே வந்து உயிரைக் காப்பாற்றினாளே!' என்ற நன்றியுணர்வே மேலோங்கியது.

"பாவம் நீங்கள்! மாமா உங்களை இந்த வேலைக்கு ஏவியிருக்கக் கூடாது... நாய் பிஸ்கெட்தான் வேண்டும் என்றாவது சொல்லியிருக்கலாம்.... டீஸ் பண்ணுகிற மாதிரிச் செய்துவிட்டாரே....! பிஸ்கெட் விஷயம் நான் பார்த்துக் கொள்கிறேன்...மாமாவிடம் சொல்லி விடுங்கள்!"

மனைவி நாகலட்சுமியின் முகத்தில் விழித்ததால் நாய்க்கு விருந்தாகாமல் தப்பிப் பிழைத்தோம் போலிருக்கிறது என்ற திருப்தியுடன் ஆபீஸ் திரும்பி, பாணியிடம் நடந்ததையெல்லாம் விவரித்தார் சிவம்.

பாணி சட்டென்று போனை எடுத்தார். பங்களாவில் மனைவியுடன் பேசினார்: "நம்ம குண்டுப் பையன், மானேஜரைக் கீழே தள்ளிட்டானாமே! அவனுக்குக் காலில் ஏதாவது அடி, கிடி பட்டிருக்கிறதா பார்.... பட்டிருந்தால் வெட் விச்வேச்வரனிடம் கூட்டிக் கொண்டு போ!"

பாணியின் மீது பாய்ந்து குதற வேண்டும் போலிருந்த வெறியை வெறுப்பாக மாற்றிக் கொண்டு, சிவம் ஸீட்டில் வந்து உட்கார்ந்த வேகத்தில் நெருங்கினான் அருண்.

"எங்கேய்யா வந்தே?" — 'வள் வள் வள்!'

"கான்ஃபிடென்ஷியல் ஃபைல்கள் என்று தனியாக ஏதாவது இருக்கிறதா சார்?"

"பாதிக்குப் பாதி அந்த இழவு ஃபைல்கள் தான்.... உனக்கு என்ன வேணும்?"

"அதையெல்லாம் நான் பார்க்கணுமே சார்!"

'எதற்காக? நீ என்ன தேடப் போகிறாய்? அதெல்லாம் பார்க்க முடியாது!' — இப்படி ஏதாவது ஒரு பதிலைத்தான் அருண் எதிர்பார்த்தான்.

அவனே பிரமிக்கும்படியாக ஒரு சாவிக் கொத்தை எடுத்துக் கொடுத்தார் மானேஜர் சிவம். வலது பக்கம் இருந்த ஒரு ஃபைலிங் காபினெட்டைச் சுட்டிக் காட்டினார்:

"என்ன வேண்டுமோ பார்த்துக் கொள்... நீ வேறு என் உசிரை எடுக்காதே!"

ஐந்து நட்சத்திர ஹோட்டல் மயூரா எப்போதும் போலக் கலகலப்பாக இருந்தது.

விஸ்தாரமான போர்ட்டிகோவில் ஓசைப் படாமல் வந்து நின்ற பென்ஸ் காரிலிருந்து கம்பீரமாக இறங்கினார் ஸஃபாரி சூட் அணிந்த நடுத்தர வயதுக்காரர் ஒருவர்.

டவாலி 'குட்மார்னிங்' சொல்லிக் கண்ணாடிக் கதவைத் திறந்துவிட, காரிலிருந்து நான்கு பெட்டிகளை எடுத்துக் கொண்டு 'பேரர்' பின்தொடர, ரிஸப்ஷனுக்கு வந்தார்.

ரிஸர்வேஷனைச் சரிபார்த்துக் கொண்டு, லிஃப்ட்டை நோக்கி நடந்தார். 'பேரர்' பின் தொடர்கிறான் என்று ஓரக் கண்ணால் உறுதிப் படுத்திக் கொண்டார்.

நான்காவது மாடியில் அறைக்குள் நுழைந்தவுடன் ஒரு சோபாவில் உட்கார்ந்தார் ஸஃபாரி. சில செகண்டுகள் இடைவெளிக்குப் பின் கதவைத் தட்டிவிட்டு உள்ளே வந்த 'பேரர்' பெட்டிகளை வரிசையாக வைத்துவிட்டு வெளியேறினான்.

கதவைத் தாளிட்டார் ஸஃபாரி. விமானக் கம்பெனிகளின் ஸ்டிக்கர்களைத் தாங்கிய பெட்டிகளை ஒதுக்கிவிட்டு, நான்காவதாக இருந்த செந்நிற எகோலாக் பெட்டியைத் தூக்கிக் கட்டில் மீது வைத்து, மெதுவாக விஸில் செய்தவாறே திறந்தார்.

ஒருகணம் அவரது இதயத் துடிப்பு நின்றே போனது!

பெட்டிக்குள் அவர் எதிர்பார்த்த பொருளுக்குப் பதிலாக, ரிப்பன் போலக் கிழிக்கப் பட்ட காகிதங்கள் அவரைப் பார்த்துச் சிரித்தன.

ஆத்திரத்துடனும் அவசரத்துடனும் போனை நெருங்கி ஸஃபாரி பாய்ந்த அதே வேளையில் —

மயூராவின் 'சர்வீஸ் என்ட்ரன்ஸ்' வழியாக வெளியேறிய ஓர் ஆட்டோவில் சத்யா உட்கார்ந்திருந்தான் குறுஞ்சிரிப்புடன்.

ஆட்டோவின் ஸீட்டுக்குப் பின்னாலிருந்த இடைவெளியில் ஒரு சிவப்பு நிற எகோலாக் பெட்டி பத்திரமாகப் பதுங்கியிருந்தது!

(தொடரும்)


''என்ன இருந்தாலும் எங்க ஆபீஸ் மாதிரி வராதப்பா!''

''அப்படி என்ன விசேஷம்?''

''சாயங்காலம் அஞ்சு மணியானு திருப்பள்ளி எழுச்சி பாடுறதுக்குன்னே ஒருத்தரை ஸ்பெஷலா அப்பாயிண்ட் பண்ணியிருக்காங்கன்னு பார்த்துக்கோயேன்!''

— சுபமுகா





''என்ன பத்மா, மாப்பிள்ளை ரயில்லே இருந்து இறங்குறப்பவே தலையில் ஹெல்மெட் போட்டிருக்கிறார்?''

''ஸ்கூட்டர் வாங்கித் தருவதாக நீங்க சொன்னதை ஞாபகப்படுத்துறதுக்காகத் தான்!''


— அரகண்டநல்லூர் சாதிக்பாஷா



அவன்: ''நான் உள்ளே நுழைந்ததுமே எதுக்கு ரேடியோவை ஓவர் சவுண்டில் வைக்கிறே?''

இவன்: '''வந்துட்டுது ஒரி டிபன் கேஸ்'னு என் மனைவி முணுமுணுப்பது உன் காதில் விழாம இருக்கத்தான்!''

— உ. ராஜாஜி.



''என் கணவர் மீது நான் மிகவும் ஆதிக்கம்செலுத்துவதாகக் கூறுகின்றனர். என் கட்டளைப்படி அவர் நடக்கிறார் என்பது உண்மையாக இருந்தால், அவர் பிரதம மந்திரியாக அல்ல; பாராளுமன்ற உறுப்பினராகக் கூட ஆகியிருக்க மாட்டார்''. — திருமதி சோனியா காந்தி.

ஆதாரம்: சண்டே; தகவல்: தோபங்க.



எடிட்டர்: ''பிரமாதம்!''

எழுத்தாளர்: ''எது ஸார்?''

எடிட்டர்: ''ஜன்மம் முழுவதும் மழையில் நனைந்தாலும் குடைக்கு ஒரு நாளும் ஜலதோஷம் பிடிக்காதுன்னு உங்க கதையில் வர்ற தத்துவ வரிகள்தான்!''

— உ. ராஜாஜி.

விரக்திச் சிறையிலிருந்து வெளிவர வேண்டும்!

* சோம்பலிலேயே சுவாசித்துக் கிடக்கும் இன்றைய இளைஞர்கள் தாராபாரதியின் தணல் கவிதையை வாசித்த பிறகாவது விரக்திச் சிறையிலிருந்து வெளியே வரவேண்டும்.

திருக்குவளை, வெற்றிப் பேரொளி.

* நீர் ஒருத்தராச்சும் நடுங்குவார்சிங்கைப் (நட்வர் சிங்) பின்பற்றுமல், தைரியமா இம்மாம் பெரிய சங்கதியையெல்லாம் தலையங்கமா வுட்டிருக்கீர்ளு. நீர் படா ஆளுதாம்பா.

பட்டுக்கோட்டை — 2. சண்முக இராதா.

* ''நடுங்குவார் சிங்கைப் பின்பற்றுங்கள்'' தலையங்கம், காங்கிரஸ் (இ) யின் தீர்மானத்திற்கு ஒரு சாட்டையடி. அந்தத் தீர்மானத்தை எதிர்த்து எதிர்க்கட்சியினர் கூட இந்த அளவுக்குக் கடுமையாகப் பேசியிருப்பார்களா என்பது சந்தேகமே! தாங்கள் ஒரு பொறுப்புள்ள எதிர்க்கட்சியாக மிளிர்வது கண்டு வாசகர்களாகிய நாங்கள் பெருமைப்படுகிறோம்.

இராமேஸ்வரம், அ. அருள்.

* 'அரை ரூபாயைக் கொடுத்தால் மல்லிகைப் பூ!' என்று நினைத்துக் கொண்டிருந்தேன். அதன் பின்னணிச் செய்திகளை இப்பொழுதுதான் தெரிந்து கொண்டேன்! வித்தியாசமான கவர் ஸ்டோரி!

குத்தாலம், எஸ். ராஜா.

* தலையில் சூடும் மல்லிகையோடு புன்னகை பூக்கும் பெண்களை மட்டும் காட்டிய அட்டை, தரையில் துவளும் விவசாயியை மறந்தது ஏன்?

சென்னை — 14. ஜயாறு எஸ். வாசுதேவன்.

* ''தலையில் சூடும் மல்லி; தரையில் துவளும் விவசாயி'' — கட்டுரைக்கேற்ற தலைப்பு. அட்டைப்படம் அட்டகாசம். பிரசுரித்த கல்கிக்கு மல்லிகைப் பூ கிரீடம் சூட்டுகிறோம்.

ஆலங்குளம், எம். டி. பழனிகதிர்.

* 'மல்லிகைப்பூ' பற்றிய கட்டுரையில் அரசு இத்துறையில் கவனம்செலுத்தாமையும்நல்லதுதான் என்று எழுதியிருந்ததைப் படித்ததும் சிரிக்காமல் இருக்க முடியவில்லை!

அரிமளம், என். ராணி.

* இவ்வாரச் சிறுகதைகள் இரண்டும் முத்துக்கள். அதிலும் லதா ராஜாராமின் 'சமத்துவம்' பட்டை தீட்டிய வைரம்!

மணப்பாறை, ப. ஜெயச்சந்திரன்.

* 'நட்சத்திரத் தேர்வு' படக்கதை மிகவும் பிரமாதம். மனித மனங்களின் மறுபக்கத்தையும் தெளிவாகக் காட்டி எழுதிய, வரைந்த, பொற்கரங்களுக்குப் பாராட்டுக்கள்.

ஈரோடு, இரா. செல்வமணியன்.

* 'இன்லேண்ட் மாநாடு'...! ஊர் வம்பை ட்மூக்கால் அளக்கும் சமூகப் பிரஜைகளுக்குச்(?!) சரியான சாட்டையடி! புருவம் சுருங்கி, கண்கள் எதிர்பார்த்து, முகம் வாடியிருப்பது போல, 'வர்ணத்'தின் சித்திரம், சிறப்பாக இருந்தது.

கொரட்டூர், கே. எஸ். ஸ்ரீநிவாஸ்.

* பெருந்தலைவரின் அரசியல் ஆசான் தீரர் சத்தியமூர்த்தி, பட்டதாரிகள் தொகுதியில் போட்டியிட வேட்பு மனு தாக்கல் செய்து, பின்னர் இராஜாஜியை அத்தொகுதியில் நிறுத்த மேலிடம் முடிவு செய்தவுடன், எதிர்ப்பின்றித் தமது மனுவை வாபஸ் பெற்ற நிகழ்ச்சியால் நெஞ்சம் நெகிழ்கிறது. அப்பெருந்தன்மையை நமது அரசியல்வாதிகள் எப்பொழுது பின்பற்றுவார்களோ?

விழுப்புரம், எம். நடராஜன்.

* சந்திரனிலேயே குடியேறும் காலம் வந்தால் கூட இந்த வகை சினிமா டெக்னிக்குகள் மட்டும் என்ன இந்த மாதிரி படங்களுக்கு வரிந்து கட்டிக் கொண்டு விமர்சனம் எழுதுவதும் மாறப் போவதில்லை...!

பெங்களூர் — 53. சித்திரப்பிரியா.

* கோதுமை விளைகிறதே என்று காமா கதிர் வீச்சைப் பயன்படுத்திப் பூச்சிகளிடமிருந்து, அதைக் காப்பாற்றுவது போல், மனித வர்க்கத்தின் ஆரோக்கியத்தையும் உடல் நலத்தையும் பேணிக் காக்க வேண்டியதும் ஓர் அரசின் பொறுப்பாகும் என்பதை நறுக்கென்று கூறியுள்ளார் கட்டுரை ஆசிரியர்.

பெங்களூர் — 21. ப. முனுசாமி.

* தலைவனுக்கும் தொண்டனுக்குமுள்ள வித்தியாசத்தைத் 'தராசு' இரண்டே வரிகளில் கூறியிருந்தாலும்— பச்சை மிளகாயைக் கடித்தது போல் 'நறுக்'கென்றிருந்தது!

குடியாத்தம், அனுராதா ஆபஸ்தம்பன்.

* ''வேங்கை வாசல்; ஏழைகளின் சொர்க்க வாசல்!'' கட்டுரை படித்தேன். 'அங்கு வறட்சி; இங்கு வறட்சி; குடிநீர் இல்லை; பள்ளிகள் இல்லை' போன்ற நிலைகளையே கண்டு வந்த எங்களுக்கு, ஒரு தனி மனிதரின் ஆரம்ப முயற்சியால் ''Roofs for the Roofless'' என்ற அமைப்பு மக்களுக்குப் பொதுச்சேவை புரிந்துவரும் செய்திகள் மிகுந்த மகிழ்ச்சியளித்தன.

பெரியகுளம், சா. நெடுஞ்செழியன்.

மாதாந்திரச் சேமிப்பு, நடுத்தரக் குடும்பங்களில் எத்தனை முக்கிய பங்கு வகிக்கிறது என்பதை உணர வேண்டுமானால் இன்றைக்குக் கடைகளில் பாத்திரச் சீட்டு, புடைவைச் சீட்டு, நகைச் சீட்டுகளில் சேர்ந்திருக்கும் மத்திய தர வகுப்பினரின் எண்ணிக்கையைப் பார்த்தால் போதும். பெண்ணின் கல்யாணத்தைப் பற்றிக் கவலைப்படும் தாய்மார்கள், பிள்ளையின் மேல்படிப்பு பற்றிச் சிந்திக்கும் தந்தைமார்கள், எப்படியாவது சொந்தத்தில் ஒரு வீடு அல்லது ஃப்ளாட் வாங்கிவிட வேண்டும் என்று ஆசைப்படும் தம்பதியர், எல்லாருக்கும் உதவுவது சீட்டு.

ஆனால் அதே நேரத்தில் பல நிதி நிறுவனங்களும் சீட்டுக் கம்பெனிகளும் திவாலாவதைப் பார்க்கும்போது அஸ்தியில் புளியைக் கரைக்கிறது. 'நம்பகமானவர் யார்? யாரிடம் சீட்டு சேரலாம்? யாரிடம் கூடாது?' என்று தெரியாமல் பலர் ஏமாந்து போகிறார்கள்.

எனவே இந்த விஷயத்தைப் பற்றித் தகவல்கள் அறிய, ஸ்ரீராம் நிதி நிறுவனங்களின் தலைவர் ஏ.வி.எஸ். ராஜாவை சந்தித்தோம். இயக்குனர் தியாகராஜனும் செயல்பாடு இயக்குனர் ஆர். கண்ணனும் உடனிருந்தார்கள்.

மக்களின் சேமிப்பு மனப்பான்மையைத் திறம்படப் பயன்படுத்திக் கொண்டால் எழுபதாயிரத்துக்கும் மேற்பட்ட அங்கத்தினர் பங்கு கொள்ளும் ஒரு மாபெரும் சீட்டுக் கம்பெனியை வெற்றிகரமாக நடத்த முடியும் என்று நிதர்சனமாகக் காண்பித்திருக்கிறார்கள் ஸ்ரீராம் சிட்ஸ் அண்ட் இன்வெஸ்ட்மெண்ட்ஸ் நிறுவனத்தினர்.

• தியாகராஜன்





• ஆர். கண்ணன்

சேர்மன் ஏ.வி.எஸ். ராஜா சொன்னார்: "சீட்டுக் கம்பெனி துவங்கிய 74, 75—ல் வருடத்துக்கு நாற்பது — ஐம்பது லட்சம் ரூபாய் வரை அங்கத்தினர்களுக்குக் கொடுத்துக் கொண்டிருந்தோம். இப்போது விநியோகமாகிற பணம் கிட்டத்தட்ட 40 கோடி ரூபாய்! முதலில் அரைக் கோடியிலிருந்து மூன்று கோடியாக அதிகரித்து, பிறகு எண்பதுகளில் ஒரேயடியாக ராக்கெட் மாதிரி உயர்ந்தது. காரணம் வேறு ஒன்றுமில்லை. மக்களுக்கு எங்கள் மீது இருந்த நம்பிக்கைதான். அன்று முன்னணியில் இருந்த பல சீட்டுக் கம்பெனிகளை 'பி.டி. உஷா வேகத்



• ஏ. வி. எஸ். ராஜா •

தில்' ஒரேயடியாகத் தாண்டி இன்று இந்தியாவிலேயே முதலிடத்தில் நிற்பதற்கும் அது தான் காரணம்!''

''இந்த ஆலமரத்திற்கு வித்திட்டவர் யார்?''

''நான் ஐதராபாத்தில் ரயில்வே உத்தியோகத்தில் இருந்தபோது, இசையிலும் இதர நுண்கலைகளிலும் ஈடுபாடு இருந்ததால், 'கலா சாகரம்' என்ற சபாவில் உற்சாகமாகப் பங்கெடுத்துக் கொண்டிருந்தேன். அங்கேதான் தியாகராஜன் எனக்கு அறிமுகமானார். நெருங்கிய நண்பர்களானோம். எழுபத்து மூன்றில் ரயில்வேயிலிருந்து ராஜிநாமா செய்துவிட்டு, பொகாரோ ஸ்டீல் நிறுவனத்தில் அதிகாரியாக வேலையில் சேரவிருந்தேன். 'எதற்குப் பொகாரோவுக்கு எல்லாம் போகணும்? நாமே ஒரு சொந்த கம்பெனியைத் துவக்கினால் என்ன?' என்று கேட்டார் தியாகராஜன். ஏ. எம். முருகப்பச் செட்டியாரின் மருமான் எம். ஆர். அருணாசலம், மற்றும் ஏழு பேர் சேர்ந்து ஸ்ரீராம் நிறுவனத்தை ஆரம்பித்தோம்.

ஸ்ரீ ராம்! ஜெயராம்! ஜெ ஜெராம்!

''மக்களிடையே உங்கள் மீது நம்பிக்கையை எப்படி வேரூன்றினீர்கள்?''

''பதினைந்து வருஷத்தில் நூறு கோடி ரூபாய்க்கு மேல் சீட்டுக்களின் மூலமாக விநியோகித்திருக்கிறோம் பாருங்கள், அதுதான் முக்கிய காரணம். விநியோகம் மட்டும் அல்ல; ஆரம்பத்தில் சீட்டு ஏலம் எடுத்தபின் அங்கத்தினருக்குக் கொடுக்கும் மொத்தத் தொகையை மாதா மாதம் வசூல் செய்து நிர்வாகத்தைச் செம்மையாக நடத்துகிறோம், கவனமாக இருக்கிறோம் என்ற நல்ல பெயர் கிடைத்தது. சீட்டுக் கம்பெனியின் வெற்றிக்கே முக்கிய காரணம் விநியோகமல்ல, மாதா மாதம் வசூல் செய்வதுதான். அதில் சுணக்கம் ஏற்பட்டால் போயிற்று, ஆபத்துத்தான்! விழிப்புணர்ச்சியுடன் இருக்க வேண்டும்!''

''இத்தனை அங்கத்தினர்களிடமிருந்து சீட்டுப் பணம் வசூலிப்பது ரொம்ப சிரமமாயிற்றே?''

''அங்கேதான் நவீன நிர்வாக முறைகள் உதவுகின்றன. அதிகாரத்தைப் பரவலாக்கினோம். பல கிளைகள் உருவாக்கி அதிகாரத்தைப் பகிர்ந்தளித்தோம். எடுத்ததற்கெல்லாம் தலைமை அலுவலகத்தை நாடிப் போய் உத்தரவுக்கும், கையெழுத்துக்கும் காத்திராமல் கிளைகள் அளவில் பணிகளை அவர்களே நிறைவேற்ற அனுமதித்தோம்.

''கிளைகளுக்குச் சரியான நிர்வாகிகளைத் தேர்ந்தெடுத்து நியமிக்கிறோம். 'இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன் கண் விடல்' என்ற குறளைத் தான் இதில் பின்பற்றுகிறோம். (குறளில் இல்லாத நவீன நிர்வாக முறைகளா? என்று அதிசயிக்கிறார் ராஜா.) அந்த நிர்வாகிகளுக்குச் சுதந்திரம் தருவதோடு ஊக்க போனஸும் கொடுக்கிறோம். அதனால் நல்ல பலன்கள் கிடைக்கின்றன,'' என்றார் கண்ணன்.

''அதிகாரங்களைப் பரவலாக்குவது நல்லது தான். ஆனால் அதிகாரங்கள் துஷ்பிரயோகமாகாமல் இருக்க வேண்டுமே!''

''சரியாகச் சொன்னீர்கள்! அதற்காகத் தான் இயக்குனர்களாகிய நாங்கள் ஒவ்வொரு நாளும் ஒரு குறிப்பிட்ட கிளை அல்லது நிதி நிறுவனத்தின் செயல்பாட்டினை அலசி ஆராய்ந்து விவாதிக்கிறோம். எங்கேயாவது ஏதாவது கோளாறு நேரும் போல் தெரிந்தால் உடனே நடவடிக்கை எடுப்போம். 'வருமுன் காப்பது' என்ற அடிப்படையில்.''

இந்த இடத்திலும் ஒரு திருக்குறளை (வருமுன் காவாதான் வாழ்க்கை...) உதிர்த்தார் ஏ. வி. எஸ். ராஜா. கிளைகளுக்குப் பூரண சுதந்திரம் அளிக்கும் உயர்மட்ட இயக்குனர்கள், தங்களைப் பொறுத்தமட்டில் சர்வாதிகாரப் போக்கில் நடந்து கொள்வதில்லை. ஒவ்வொரு விஷயத்தையும் கூட்டுப் பொறுப்புடன் ஆராய்ந்து பார்த்து முடிவெடுக்கிறார்கள்.

ஸ்ரீராம் குரூப்பில் இன்று பல நிறுவனங்கள் உள்ளன. ஒவ்வொன்றுக்கும் பல கிளைகளும் உள்ளன. ஒவ்வொன்றையும் தொடங்கு முன்னர் அதன் எதிர்காலத்தை முன்கூட்டியே கணித்துப் பார்த்துப் பிறகுதான் அடியெடுத்து வைக்கிறார்கள். ('எண்ணித் துணிக கருமம்' என்று மறுபடியும் ஒரு குறளை முன்வைக்கிறார் ராஜா.) ஆரம்ப ஆண்டுகளில் சிறிதளவு லாபம் அல்லது குறைந்தபட்ச நஷ்டம் என்று ஏற்படக் கூடுமாதலால் அந்தக் காலகட்டத்தைத் தவிர்த்துப் பின்னர் பங்குதாரர்களை முதலீடு செய்ய

அழைக்கும் போது நிறுவனம் ஓரளவு வளர்ச்சி பெற்றிருக்கும் என்பதால் மக்கள் நம்பிக்கையோடு முதலீடு செய்து பங்கு களைப் பெற்றுக் கொள்கிறார்கள். முதலாண் டிலேயே டிவிடெண்டு கிடைப்பது சாத்திய மாகிறது.

''ஒவ்வொரு நிறுவனம் அல்லது கிளையும் ஒரு தனி கம்பெனி மாதிரிதான். அது அது தனித்தனியே சொந்தக் காலில் நிற்க வேண் டும். அதற்கேற்பச் செயல்பட வேண்டும். லாபத்தை மையக் கம்பெனிக்குப் பண மாகக் கொண்டு வருவதுமில்லை. அந்தந்தக் கிளையின் வளர்ச்சிக்கே பயன்படுத்துகி றோம். புதிய கிளைகள் துவங்கப்படும்போது, பயிற்சி பெற்ற சீனியர் அதிகாரிகளை அங்கே அனுப்பிவிட்டுப் புதிய இளம் அதிகாரிகளை, எங்களுடைய நேரடி மேற்பார்வையில் வைத்துக் கொள்வோம். இவர்கள் எல்லா ருக்கும் எங்கள் நிறுவனங்களின் மேம்பாட் டுக்கான ஆலோசனைகளை வழங்கப் பூரண உரிமை அளித்திருக்கிறோம். அந்த உரிமை யைப் பயன்படுத்தாதவர்கள் பேரில்தான் எங்களுக்கு வருத்தம் இருக்கும். இப்படி அதி காரிகள் நிர்வாகத்தில் பங்கேற்பதால் கணக்கு களில் ரகசியங்கள் இருப்பதில்லை. எனவே குற்றங்கள் நிகழவும் வாய்ப்பில்லை.''

''உங்கள் குரூப் நிறுவனங்களிலேயே எதில் அதிக லாபம்?''

''சிட்டுக் கம்பெனியில்தான்'' என்று கூறும் ராஜா, நிதி நிர்வாகத்தில் மட்டும் அக்கறை காட்டினால் போதாது; 'டாக்ஸ் பிளானிங்' என்னும் வரிகள் நிர்வாகத்திலும் திறமை காட்டினால்தான் வெற்றி பெற முடி யும் என்கிறார். வரி நிர்வாகம் என்பது வரி ஏய்ப்பு அல்ல; சட்டத்துக்கு உட்பட்டு வரி யைக் குறைந்தபட்சமாக்கும் திறமை என்பதை யும் விளக்குகிறார்.

சீட்டுத் தொழில் தவிர, சரக்குப் போக்குவரத்துக்கான லாரிகள் வாங்கக் கடன் கொடுக்கும் டிரான்ஸ்போர்ட் பைனான்ஸ் நிறுவனம்; வீடுகள், ஃப்ளாட்டு கள் கட்டி விற்பனைக்குத் தரும் காபிடல் டிரஸ்ட் நிறுவனம்; தரமான மாதப் பத்திரிகை யாக 'அமுதசுரபி' இதழ் வெளியீடு; இசைக்



''எம்.எல்.ஏ. சார்! எப்படியாவது எனக்குக் காலேஜ்ல பி.எஸ்ஸி கெமிஸ்ட்ரி வாங்கிக் கொடுத் துடுங்க....''


''இது மாதிரி ரெண்டு கேட்டா எப்படிப்பா முடியும்? ஏதாவது ஒண்ணு கேளேன்!''


— ராஜா

''எதிர் வீட்டுக்காரருக்கு ஏகப்பட்ட வீண் செலவு ஆகுதுன்னு நீங்க ஏன் கவலைப்படறீங்க! அதை அவரல்லவா சமா ளிக்கிறார்?''

''ஏற்கெனவே அவருக்கு நான் கொடுக்க வேண்டிய கடனை வசூல் பண்ண வந்திடுவாரே!''

— மணியன் தர்மலிங்கம்.





''நீங்க எம். எல். ஏ. ஆன பிறகு உங்க தொகுதியில குறிப்பிட்டுச் சொல்லும் அளவுக்கு என்ன செய்து இருக்கீங்க?''

''என்னோட ரெண்டு பெண்களுக்கும் கல்யாணம் செய்து இருக்கிறேனே!''

— கடுவை கோபால்சாமி.

கலைச் சேவைக்குச் சபாக்களுடன் ஒத்து ழைப்பு என்று பரந்து விரிந்து வருகிறது ஸ்ரீராம் நிறுவனம்.

ஸ்ரீராம்இன்வெஸ்ட்மெண்ட்ஸ்நிறுவனத் தில் 15000 டெபாஸிட் தாரர்கள் பல கோடி களை நம்பிக்கையோடு கொடுத்து வைத்திருக் கிருர்கள்.

''ரிஸர்வ் வங்கி 14 சதத்துக்கு மேல் வட்டி தரக் கூடாது என்று உங்களைப் போன்றவர்க ளுக்கு வரம்பு விதித்திருக்கும் போது சிலர் 24 சதம் தருவதாகக் கூறுகிருர்களே?''

''அவர்கள் சட்டத்துக்கு விரோதமாகச் செயல்படுவதாகக் கூற முடியாது. பார்ட்னர் ஷிப் முறையில் அப்படி இயங்கலாம் என்று அனுமதி இருக்கிறது. ஆனல் 24 சதம் வரை டெபாஸிட் தாரர்களுக்கு வட்டி தரும் நிறு வனம், 30 — 35 சதம் வரை வட்டிக்குப் பணத்தை விட வேண்டும். சினிமாக்காரர் கள் 50 — 60 சதம் கூட வட்டி கொடுத்துக் கடன் பெறத் தயாராக இருக்கிருர்கள். ஆனல் இதிலெல்லாம் 'ரிஸ்க்' அதிகம் என்று சொல்லத் தேவையில்லை.''

''சட்டம் இருக்கட்டும், சீட்டுப் பணத்தை ஏலத்துக்கு விடுவது என்பது தர்ம நியாய மாகுமா? ஒருவனுக்கு இருக்கிற கஷ்டத்தை நமக்கு லாபமாக்கிக் கொள்வதாகாதா?''

''ஏலத்துக்கு எடுப்பவர் அத்தொகை யைக் கடன் வாங்க நேர்ந்தால் என்ன வட்டி தர வேண்டியிருக்கும் என்று கணக்கிட்டு அதற்கேற்பத்தான் எடுப்பார். வியாபாரி கள் முதலில் எடுக்க அனுமதித்தால் நடுத்தர வர்க்கத்தினருக்குச் சில மாதங்கள் சென்று குறைந்தவட்டிக்குக்கடன்பெற்றதுபோலவே அமையும்.''

''ஸ்ரீராம் என்ற பெயரைக் குறிப்பாகத் தேர்ந்தெடுக்க என்ன காரணம்?''

சொன்னுர் திரு ராஜா: ''கொடுத்த வாக்கை நிறைவேற்றும் காவிய நாயகனை ஸ்ரீராமபிரானின் பெயரைத்தான் கம்பெ னிக்கு வைத்திருக்கிறேன்!''

பேட்டி: சாருகேசி

புகைப்படங்கள்: யோகா

''வருவாய்க்கு என்ன பண்ணிட்டு இருக்கிறீங்க?''

''ஏதோ கடன் உடன் வாங்கிட்டு இருக் கேன்!''

— கடுவை கோபால்சாமி.





''விழாவுக்கு நேரமாச்சே. அமைச்சர் ஏன் புறப்படலே?''

''அமைச்சரின் காருக்கு முன்னும், பின் னும்செல்லவேண்டிய நாற்பது கார்களில் ஒன்று குறையுதாம்.''

— படுதலம் சுகுமாரன்.

நிருபர்: வளர்ச்சிப் பணியில் உங்க ளுக்கு அக்கறையே இல்லேன்னு சொல் ருங்களே? அதுக்கு உங்க பதில்?

அமைச்சர்: தொகுதியில் கட்டப்பட்டுக் கொண்டிருக்கும் என்னுடைய வீட்டைப் பார்த்தவர்கள் யாரும் அப்படிச் சொல்ல மாட்டார்கள்!

— கடுவை கோபால்சாமி.



ஸ்ரீதேவி அரசியல்வாதியாகப் போகிறாராமே?





* மர நிழலிலா வாழ்கிறோம்?

* ஆர்.கே. அருள்செல்வன், விக்கிரபாண்டியம்

? சமீபத்தில் தங்கள் கவனத்தை ஈர்த்த விஷயம்?

! மாமனார் இறந்ததற்கு ராஜீவ் போகாதது தான்.

* கே.ஏ. சலம், மாலகரம்

? தன்னை விடக் குறைந்த படிப்புள்ள ஓர் ஆணை மணக்கப் பெண் முன் வராததற்கு என்ன காரணம்?

! தன்னை விட உயர்ந்த படிப்புள்ள ஓர் பெண்ணை ஆண் மணக்க முன்வரும்போது பெண்ணும் தன்னை விடக் குறைந்த படிப்புள்ள ஆணை மணக்க முன் வருவாள்.

* எஸ். முருகவேல், திட்டச்சேரி

? ஸ்ரீதேவி அரசியல்வாதியாகப் போகிறாராமே?

! வைஜயந்தி மாலாவுக்குக் கலக்கமாகத் தான் இருக்கும்.

* பி. ராம நாராயணன், ஈரோடு *

? ராஜீவ் காந்தியின் புதிய வரிச் சலுகைகள் குறித்து?

! உற்பத்தியை அதிகரித்து நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்கு உதவும். எனவே, அரசின் வருவாய் குறையாது; கூடுதலாகும். இந்த வரிச் சலுகைகள், வி.பி. சிங் அமுல்படுத்திய கொள்கையின் தொடர்ச்சி: இதைவிட முக்கியம், ராஜீவ் சமர்ப்பித்த பட்ஜெட்டில் கொடுமையான இரு புதிய வரிகள் விதிக்கப்பட்டிருந்ததைப் பொருளாதார வல்லுனர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர். (கல்கி 22.3.87 தலையங்கம்). அவற்றுள் ஒன்றை ராஜீவ் நீக்கி விட்டிருக்கிறார்; மற்றொன்றைத் திருத்தி அமைத்திருக்கிறார். வரவேற்று, வாழ்த்துவோம்.

* ஞானசேகரன், மதுரை

? வாசகர்கள் எழுதும் கதை, கட்டுரை, துணுக்குகள் முதலானவை அரசைக் குறை கூறுவதாக இருந்தால் வாசகர்களைத் தண்டிக்கும் உரிமை அரசுக்கு உண்டா?

! எல்லாவற்றுக்கும் ஆசிரியர் தலைதான் உருளும். அடுத்து, அச்சிட்டு வெளியிடுகிறவர்களும் பொறுப்பேற்க வேண்டியவர்களாவார்கள். ஆனால் கவலைப்படாதீர்கள்; வேண்டுமென்றே ஒருவர் மீது களங்கம் கற்பிக்க எழுதப்படும் பொய்யான கருத்தும் ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களும்தான் தண்டனைக்குரியவை.

* பி. மகாலிங்கம், மதுரை

? தென்னை மரத்தில் தேள் கொட்டினால் கல்கி போன்ற பனைமரத்துக்கு வலிப்பானேன்?

! ஜனநாயகத்தில் குற்றம் புரிகிறவர்கள் மட்டும்தான் குற்றவாளிகள் என்பதல்ல. தவறுகளைத் திருத்தவும், குற்றங்களைக் களையவும், ஆக்கபூர்வமாகவும் சட்டபூர்வமாகவும் தன்னால் இயன்றதைச் செய்யாமல் இருப்பவனும் குற்றவாளியே! ஆகவே, நண்பரே, அநீதிகளைக் காணும்போது நமது இதயங்களில் வலி உண்டாகவில்லை என்றால் நாம் ஜனநாயகத்துக்கு லாயக்கில்லை என்று அர்த்தம்.

* கா.க.வே. ரோகிணி, கோவை

? "காந்தி பிறந்த மண்ணிலா இத்தனை ஊழல்கள்! பொய்ப் பித்தலாட்டங்கள்!" என்று மற்ற நாட்டவர் நம்மைப் பார்த்துக் கைகொட்டிச் சிரிக்கின்றனரே?

! "பார்த்தீர்களா, காந்தி பிறந்த நாடு இது என்பதை அயல்நாட்டினர் மறக்காமல் இருக்கப் பேருதவி புரிந்து வருகிறோம்!" என்று சம்பந்தப்பட்டவர்கள் சந்தோஷிக்கக் கூடும்!

* பெ. கருணாகரன், விருத்தாசலம்

? ஹைதராபாத்தில் எம்.எல்.ஏ. ஹாஸ்டலில் ரெய்டு நடத்தி, சூதாடிய சிலரைக் கைது செய்துள்ளார்களே? நம்மூர் போலீஸுக்கு அந்தத் துணிவு வருமா?

! எங்கே, துணிச்சலுடன் செயலாற்றும் அதிகாரிகளைத்தான் அரசியல்வாதிகள் அவமானப்படுத்தியும் அமுக்கி வைத்தும் அல்லாடச் செய்து விடுகிறார்களே! நம்மூரில் மட்டுமல்ல, பஞ்சாபைப் பாருங்கள். நேற்று வரை ரொபைரோ ஏகமாகப் பாராட்டுக்கு உள்ளாகி வந்தார். இப்போது ஆளும் கட்சியினர் அவர் மீது குற்றச்சாட்டுக்களைச் சுமத்த ஆரம்பித்துவிட்டார்கள்! நாளை அவர் சுழற்றி விடப்படலாம்! ஹைதராபாத்தில் இந்த ரெய்டை நடத்தியவர் கதி என்ன ஆகப் போகிறதோ!



* சுழற்றி விடப்படுவார்?

* வசீச் சதுர்வேதிகள்....

* ஆ. வெங்கடேஷ், சென்னை

? இன்றைய இந்தியாவில் யாரைப் பார்த்துப் பொறுமைப்படுகிறீர்கள்?

! கண்ணெதிரே இத்தனை அக்கிரமங்கள், அநீதிகளைப் பார்த்துக் கொண்டும் ஆட்சியிலிருப்போரின் ஆற்றலின்மையைச் சகித்துக் கொண்டும் இருந்தபோதிலும் ஜனநாயகத்தில் இன்றும் நம்பிக்கை இழக்காமல், ஒளிமயமான எதிர்காலத்துக்காகப் பொறுமையுடன் காத்துக் கொண்டிருக்கும் குடிமகனைப் பார்த்து.

* வி. அருண், கீரமங்கலம்

? சென்னையில் கூவத்தை விடச் சிறப்பம்சம் வேறு ஏதேனும் உண்டா?

! உண்டே, கோட்டை!

* அர. மணிவண்ணன், சென்னை—16

? 'கலைஞர் கோபாலபுரத்தில் மாட மாளிகை கட்டிக் கொண்டார்' என்கிறாரே ஜெயலலிதா; அவருடைய தலைவர் ராமாவரத்தில் என்ன மண் குடிசையிலா வாழ்கிறார்?

! 'போயஸ் கார்டனில் ஜெயலலிதா மரத்தடி நிழலிலா வாழ்கிறார்' என்றும் கேட்கலாம். இவையெல்லாம் நமது அரசியல் சினிமாவில் காமெடி டிராக். சொல்லாய்டை ஒதுக்கிவிட்டு, மக்களின் பிரச்னைகளில் ஆட்சியில் உள்ள யாரும் சீரிய சிந்தனை செலுத்துவதாகக் காணோம்.

* குடியாத்தம், டி. தாழை பிரபு.

? அண்மையில் அரசு செய்த வீண் செலவு எது?

! வருடம் 365 நாளும் ஒவ்வொரு நாளின் 24 மணி நேரமும், ஒவ்வொரு மணியின் அறுபது நிமிடங்களும், ஒவ்வொரு நிமிடத்தின் அறுபது விநாடிகளிலும் அரசு வீண் செலவு செய்து கொண்டேதான் இருக்கிறது! இல்லாமலா வரலாறு காணாத 8000 கோடி பற்றாக்குறை பட்ஜெட்டின் விளைவான பண வீக்கத்தாலும் விலைவாசி உயர்வாலும் மக்கள் பரிதவிக்கிறார்கள்?

* டாக்டர் பி. சீனிவாசன், சேலம்

? கிறிஸ்துவ மதகுருமார்கள் பாமர மக்களிடமும் நோயாளிகளிடமும் அருகில்வந்து அன்பும் ஆதரவும் காட்டி ஆசீர்வதிக்கிறார்கள். ஆனால் இந்து மதத் தலைவர்கள் பாமர மக்களை நெருங்கி வருவதில்லையே, ஏன்?

! இராமானுஜர் வாழ்க்கையையும் நந்தன் சரித்திரத்தையும் நினைவில் கொள்ளாததால் இருக்கலாம். இந்நிலை படிப்படியாக மாறி வருகிறது; இன்னும் வேகம் பெற வேண்டும்.

* க.ந.ச. சேலம்

? 'ஆவதும் பெண்ணாலே, அழிவதும் பெண்ணாலே' என்ற கேள்விக்குப் பெண்களின் சார்பாகப் பதிலளித்திருக்கிறீர்கள். இது முற்றிலும் தவறு!

'முற்றிலும் தவறு' என்று கருத உங்க்குப் பூரண உரிமை உண்டு. ஆனால், 'அங்கையர் பொருட்டால் எய்தும் மாந்தர்க்கு மரண மென்றல்' என்ற கம்பன் பாடலை மேற்கோள் காட்டும் தாங்கள், அதற்கு முந்தைய பாடலில் (சிறிய ரென்று இகழ்ந்து நோவு செய்வன) இராமன் தன் குற்றத்தைத் தானே எடுத்துச் சொல்வதை மறக்கலாமா? ஆகவே, ஆவதும் அழிவதும் பெண்ணால் மட்டுமே என்பதை ஏற்க முடியாது; ஆணாலும்தான்!

ரூ 15 பரிசு பெறுபவர்:
பி. ராமநாராயணன்,
302, எச் டைப்,
ரயில்வே காலனி,
ஈரோடு—638 002.



ஸி. ஆர். பார்த்தசாரதி

அரசியலில் வம்பு; அரிமாவில் பண்பு!

'ராஜாஜியின் பேரனுக்குக் கவர்னர் பதவி' என்று பராபரியாகக் காதில் விழுந்த போது, 'அட, நமது அரசுக்கு இவ்வளவு பரந்த மனப்பான்மை எப்போது ஏற்பட்டது?' என்று அதிசயிக்கத்தோன்றியது. பிறகு தான் அது மாநில கவர்னர் பதவி அல்ல; லயன்ஸ் கிளப்பின் வட்டார கவர்னர் பதவி என்ற விவரம் தெரிய வந்தது. மனம் நிம்மதி அடைந்து, மகிழ்ச்சியும் பெருகியது. நிம்மதிக்குக் காரணம், நமது அரசு அதே பழைய அரசாங்கம்தான்; திடுதிப்பென்று அதன் செயல்பாட்டில் வியத்தகு மாற்றம் ஏதும் ஏற்பட்டு விடவில்லை என்பது. மகிழ்ச்சி பெருகக் காரணம், லயன்ஸ் கிளப் கவர்னர் பதவி என்பது ஆளுனர் பதவியை விட எந்த விதத்திலும் தாழ்ந்து போய்விடவில்லை என்பதுடன் பலவிதங்களில் அதைவிட இது உயர்ந்ததும் கூட என்ற எண்ணம். ஆளுனர் பதவி என்பது ஏதாவது ஒரு நெருக்கடி ஏற்பட்டாலொழிய பெரும்பாலும் அலங்காரப் பதவியே. ஆனால் அரிமா சங்கங்களோ, சமுதாய சேவைக்கும் சமுதாய நலன் பற்றிய சிந்தனைக்கும் தம்மை அர்ப்பணித்துக் கொண்டவை. அவற்றின் வட்டார கவர்னர் ஆவதென்பது பெருமைக்குரியதல்லவா? மேலும் ஆளுனர், பிரதமரின் விருப்பத்துக்கு ஏற்ப நியமிக்கப்படுகிறார். லயன்ஸ் கிளப் கவர்னரோ" தேர்ந்தெடுக்கப்படுகிறார். அதுவும் எத்தகையவர்கள் அவரைத் தேர்ந்தெடுக்கிறார்கள்? சமுதாயத்தில் பெரிய பதவிகளில் இருக்கிற, அல்லது முக்கிய தொழிலில் ஈடுபட்டுள்ள புள்ளிகளால், படித்த நல்லறிஞர்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார். அதுமட்டுமின்றி, அவரை எதிர்த்து வோட்டளிப்பவர் யார் என்று பார்த்தால் அவர்களும் சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்தில் இருப்பவர்களே! எனவே, குட்டுப்பட்டாலும் மோதிரக் கையால் குட்டுப்படுகிற காரியம்தான் இது!

ஸி. ஆர். பி. ஒரு கட்டடக் கலை இன்ஜினியர். அவரை வாழ்த்த வந்தவர்கள், அவரது நிர்வாக ஆற்றலையும் அரிமா சங்கப் பணியில் அவரது ஆழ்ந்த ஈடுபாட்டையும் வெகுவாகப் புகழ்ந்தார்கள். ஓர் அன்பர் அவருக்கு டாக்டர் பட்டமே தந்துவிட்டு, "பார்த்தீர்களா, டாக்டர் பட்டம் பெறுவது என்பது எவ்வளவு சுலபம்!" என்று கேட்டு சிரிப்பையும் வேதனையையும் ஒருங்கே எழுப்பினார். ஒரு பெண் சிங்கம் (Lioness) பேச முன்வந்து, "ஸி. ஆர். பி. மிகுந்த மரியாதை தெரிந்தவர். எந்தப் பெண்மணியைப் பார்த்தாலும் உடனே எழுந்து அவருக்குத் தமது ஆசனத்தை விட்டுக் கொடுப்பார். இனியேனும் அந்தப் பண்பாட்டை அவர் மறந்து விடட்டும்! கவர்னர் பதவி நாற்காலியை கவனப்பிசகாக ஒரு பெண்ணிடம் பறி கொடுத்து விடவேண்டாம்!" என்று கூறி கொல்லென்று அவையோரைச் சிரிக்க வைத்தார்.

ஸி. ஆர். பார்த்தசாரதி, தமது பதவிக் காலத்துக்கு உரிய பொன்மொழியாகத் தேர்ந்தெடுத்திருப்பது, "என்றென்றும் நட்புறவு" என்ற சொற்றொடர். இதற்குச் செயல்வடிவம் தருவதேபோல் பார்த்தசாரதியைப் பாராட்டத் திரண்டிருந்த கூட்டத்தில் அவருக்குஎதிராகவாக்களித்தவர்கள் ஒருவர் பாக்கியில்லாமல் வந்து குழுமியிருந்தார்கள்! அவர்களில் ஸி. ஆர். பி.யை எதிர்த்துப் போட்டியிட்ட என். ஸி. கிருஷ்ணன் முதல் வரிசையில் அமர்ந்திருந்தார்! ஸி. ஆர். பி., அவருக்கு ஒரு ரோஜா மலரை அளித்து முதல் மரியாதை செய்தார்! ஸி. ஆர். பி. தமது பதவிக்காலத்தில் நிறைவேற்ற எண்ணியுள்ள திட்டத்துக்குச் செயல்வடிவம் தர, சில செயற்குழுக்களை அமைத்திருக்கிறார். அவற்றுள் ஆலோசனைக் குழுவில் கிருஷ்ணனுக்கு முக்கிய இடம் அளித்திருக்கிறார்! அன்று பார்த்தசாரதியைப் பாராட்டிப் பேசியவர்களுள் கிருஷ்ணனும் ஒருவர்! அவர் சொன்னார்: "ஸி. ஆர். பி.யின் குணநலன்கள் பற்றி எனக்கு முன்பே தெரியாமல் போய்விட்டது. தெரிந்திருந்தால் ஒருவேளை நான் அவரை எதிர்த்துப் போட்டியிட்டிருக்கவே மாட்டேன்! தேர்தல் நடந்து முடிவு அறிவிக்கப்பட்ட அன்று மாலை ஸி. ஆர். பி., தமது மனைவியுடனும் மகன்களுடனும் என் இல்லத்துக்கு விஜயம் செய்து, என் ஆசிகளைக் கோரிப் பெற்றுச் சென்றார்! நான் நெகிழ்ந்து போனேன்!"

கிருஷ்ணன் மனம் உருகியது ஒருபுறமிருக்க, அவர் பேசக் கேட்டபோது நமக்கே மெய்சிலிர்த்தது. 'நமது அரசியலும் இவ்வாறே தூய்மையானதாகவும் பண்பாடு மிக்கதாகவும் மாறுமேயானால் எவ்வளவு நன்றாயிருக்கும்?' என்று தோன்றத்தான் செய்தது.

— கி. ராஜேந்திரன்



"சார்... ரேஷன் கார்டு...!"

"ஆமாம்... ஒரு ரேஷன் கார்டு வாங்கத் துப்பு இல்லே, நீங்களும்... நடக்கறீங்க, ஆறு மாசமா வீட்டுக்கும் ரேஷன் ஆபீஸுக்கும்... நான் அந்த வீடு... இந்த வீடுன்னு... கையைக் காலைப் புடிச்சுக் கார்டு வாங்கி, மண்ணெண்ணெய் வாங்கிச் சமையல் பண்ணிக்கிட்டிருக்கேன்... இதுல நீங்க அதுல உப்புல்ல, இதுல உப்பில்லேன்னுட்டு."

அவன் இன்று — ரேஷன் ஆபீஸுக்கு வந்து இ—4 எழுத்தர் முன் நின்ற போதும், இவனை அவர் ரொம்பநேரம்கண்டுகொண்டதாகவே காட்டிக் கொள்ளாத போதும் — காலையில் வீட்டில் நடந்த நிகழ்ச்சி அவன் மனத்தில் நிழலாடியது. சாப்பிடும் போது எதிலேயோ உப்பில்லேயென்று இவன் சொல்லப் போய்; அவன் மனைவி கன்னத்தில் இடிக்காத குறையாய் — உப்புக்கு அவன் துப்பைச்சுட்டிக்காட்டிப்பேசதுப்பு இல்லாதவனுக்கு உப்பு எதற்கென்று எண்ணி உப்பில்லாமலேயே சாப்பிட்டு முடித்திருந்தான்.

கண்டு கொள்ளாத எழுத்தரைக் காண வைக்க, 'சார்' என்று விளித்த போது, எழுத்தர் நிமிர்ந்து,பின் தலையைக் கவிழ்ந்து கொண்டார்.

இந்த ஆறுமாத நடையில் இவன் குரலும் அவருக்குப் பரிச்சயம் ஆகியிருக்க வேண்டும்.

மறுபடியும் இவன் 'சார்' என அழைத்த போது — "என்னய்யா" — என மிதப்போடு குரல் வெளிவந்தது.

"சார்... நான் ஆறு மாசமா அலையறேன். பார்த்து எப்படியாவது தயவு பண்ணுங்க" என்று அவர் தயவுக்கு இவன் வரம் கேட்டான்.

பாரிஜாதன்



''டைப்பிஸ்ட் வேலைக்கு மனு கொடுத்திருக்கீங்களே, உங்க டைப்பிங் வேகம் என்ன?''

''நிமிஷத்துக்குப் பதினெட்டு தப்பு!''

— குத்தாலம் அபிதா

''அதுக்கு நான் என்னய்யா பண்ண முடியும்... தேவைன்னு வந்துதான் ஆகணும்... அலைஞ்சுதான் ஆகணும்'' — வெகு குளிர்ச்சியாகக் கூறினார் எழுத்தர்.

''அப்ளிகேஷன் கொடுக்கிறப்ப ரேஷன் கார்டு ஸ்டாக் இல்லை... பிரிண்ட் ஆகி வரணும், மூணு மாசம் கழிச்சு வாங்கன்னீங்க... இப்ப ஆறு மாசம் ஆச்சு சார்... அப்ப இருந்து நடந்துக்கிட்டிருக்கேன் சார்...''

இப்பொழுது குளிர்ச்சி சூடாக மாறி எழுத்தருக்குக் கோபம் வந்தது.

''ஆமாம்... சொன்னேன்..., யாருய்யா இல்லைன்னு சொன்னது... நீங்க ஒருத்தர் தானா? எங்களுக்கு வேறே வேலை இல்லையா? உங்க பேப்பர் ஹெட்கிளார்க்கிட்டேயிருக்கு.. போங்க அங்கே போய்ப் பார்த்துக்கங்க..''

சின்னஞ்சிறிய சிறுமிகளிடையே தாவணி போட்ட பெண்ணைப் போல் — அங்கிருந்த விரிப்பில்லா மேஜைகளில் விரிப்பு வைத்துத் தனித்துக் காட்டிய — தலைமை எழுத்தர் என்ற ஹெட்கிளார்க் மேஜை முன் நின்றான் அவன்.

அவரைச் சுற்றி ரேஷன் கடை ஆட்கள் — உடல் கனத்தோடும் கையில் இருக்கும் பையில் கனத்தோடும், விரல்களில் மோதிரங்களின் கனத்தோடும் நின்று கொண்டிருந்தார்கள்.

இவன் சிறிதுநேரம் சும்மா நின்றான்.

''சார் என் பெயர் இராமசாமி... ரேஷன் கார்டு விஷயமா வந்திருக்கேன்'' என்றான் மெள்ள.

இப்பொழுதுதான் ஹெட்கிளார்க் அவனை ஏறிட்டுப் பார்த்தார்.

பார்வையில் உறுமல் இருந்தது — ஆமாம், பார்வையிலேயே உறுமல்!

''யெஸ்... என்ன சொன்னீங்க?''

''என் பெயர் இராமசாமி சார்... ரேஷன் கார்டு...''

''எங்கே வேலை பார்க்கிறீங்க?'' ஒரு பிரைவேட் கம்பெனியின் பெயரைக் கூறினான்.

''எங்கே குடியிருக்கீங்க?''

''ஒண்டிப்புதூர் — ஐந்தாம் நம்பர் வீதி.''

ஹெட்கிளார்க் விசாரித்தபடியே அவனது பேப்பரை மேஜை மீதுள்ள பைல்களில் துழாவிக் கையில் வைத்துக் கொண்டார்.

''அப்ளிகேஷன் கொடுத்து ஆறு மாசம் ஆச்சு சார்!''

''அப்ப... நாங்கதான் சரியா வேலை பார்க்காமல் டிலே பண்றோம்னு சொல்றீங்க. அப்படித்தானே?''

''சார்... சார்... அந்த அர்த்தத்திலே சொல்லலை சார்...'' — கிடைக்கிற கார்டு எங்கே கிடைக்காமல் போய் விடுமோ எனப் பதறினான்.

''இதுக்கு முன்னாலே எங்கேயிருந்தீங்க?''

''மதுரையில் சார்.''

''அங்கே உங்களுக்குக் கார்டு இருந்திருக்குமே... என்னாச்சு?''

''அந்தக் கார்டை 'சரண்டர்' பண்ணி சர்டிபிகேட் வாங்கிக் கொடுத்திருக்கேன். அப்ளிகேஷன் கொடுக்கிறப்பவே அதையும் சேர்த்துக் கொடுத்திருக்கேன் சார்.''

''இல்லையே... அப்ளிகேஷனோடே இல்லை.''

''சார்... கொடுத்திருக்கேன்'' — அவன் பதில் பதற்றமாகவும், அழுத்தமாகவும் வந்தது.

தலைமை எழுத்தர் — தன்னை மாவட்ட வழங்கல் அதிகாரியாகவே அதாவது டிஸ்டிரிக்ட் சப்ளை ஆ பீ ச ரா க வே பாவித்துக் கொண்டார் இப்பொழுது. அதிகாரமும் பந்தாவும் வந்து விட்டன. அவனை முறைத்தார். பின் அதட்டலான குரலில் —

''மிஸ்டர்... இதில் இல்லை.... அதனால் நீங்க புதுசா ரேஷன் கார்டு கேட்கிற மாதிரி தான் அப்ளிகேஷன் எழுதிக் கொடுக்கணும். ஆனால்... அதுலேயும் சிக்கல்... ஏன்னா... புதுக்கார்டு இப்ப 'இஷ்யூ' பண்ணக் கூடாதுன்னு சீஃப் செக்ரட்டரி ஜி. ஓ. போட்டிருக்கார்... டென் டேஸ் ஆச்சு வந்து... இல்லைன்னா நீங்க மதுரை போய் ஒரு டூப்ளிகேட் சரண்டர் சர்டிபிகேட் வாங்கிட்டு வந்துருங்க.''

''சார்... நான் அப்ளிகேஷன் கொடுத்தே ஆறு மாசமாச்சு. சரண்டர் சர்டிபிகேட் இணைச்சுத்தான் கொடுத்தேன்... நீங்க இல்லைங்கறீங்க. என்ன சார் அர்த்தம்? இல்லை... மதுரை போய் சரண்டர் சர்டிபிகேட் வாங்கியாறதுன்னா நடக்கிற காரியமா...? சொல்லுங்க சார்.''

அவனுக்குக் கோபம் வந்தது. வார்த்தைகள் உஷ்ணத்தில் தோய்ந்து வந்தன.

''மிஸ்டர், நான் இவ்வளவுதான் சொல்ல முடியும். தேவைன்னா நீங்க போய் ஆபீசரைப் பார்த்துக்கங்க.''

அஸிஸ்டெண்ட் — ரேஷனிங் ஆபீசர் —

ஏதோ எழுதிக் கொண்டிருந்தார். இவன் வந்ததாகவே காட்டிக் கொள்ளவில்லை.

இவன் அருகில்சென்றுமேஜையை உரசிய படி, ஒரு கையில் மேஜையின் விளிம்பைப் பற்றிய படியும் ஒரு கையை மேஜையின் ஓரத்தில் ஊன்றிய படியும் நின்ருன்.

"சார்! என் பெயர் இராமசாமி. ரேஷன் கார்டுக்காக வந்திருக்கேன்" என்று கூறிய போது அவனைக் கீழிலிருந்து மேல்வரை ஒரு பார்வை பார்த்தார். அந்தப் பார்வையின் வெப்பத்தில் அவன் எரிந்திருக்க வேண்டும்!

இவனுக்கு ஒன்றும் புரியவில்லை. நான் ரேஷன் கார்டுதானே கேட்டேன். அதற்கு ஏன் இவர் இந்த முறை முறைக்கிருர் என்று நினைத்தவனுய் —

"சார்! என் பெயர் இராமசாமி. ரேஷன் கார்டுக்காக வந்திருக்கேன்" — என மீண்டும் கூறினுன்.

அவர் மறுபடியும் முறைத்து — "மிஸ்டர் முதல்லே மேனர்ஸ் தெரிஞ்சுக்கோ... அப்புறம் கார்டு கேட்கலாம். முதல்லே மேஜையிலிருந்து கையை எடுத்துட்டுப் பேசய்யா... நீ யார்கிட்டே பேசறேன்னு தெரியுதா...?" என ஒரு கடிகடித்து அவரது உத்தியோகத்தை அவனுக்கு நினைவூட்டினர்.

அவன் விருட்டென்று கையை எடுத்து, மார்புக்குக் குறுக்காகக் கட்டிக் கொண்டு, பின் பணிவாகப் பேசினுன்.

இப்பொழுது அவருக்கு ரொம்பவும் திருப்தியாக இருந்திருக்க வேண்டும்.

"சொல்லுங்க... என்ன வேணும்?" — என்ருர்.

"சார்..., என் பெயர் இராமசாமி. ரேஷன் கார்டுக்கு அப்ளிகேஷன் போட்டு ஆறு மாசம் ஆச்சு. அப்ளிகேஷன் கொடுக்கிறப்பவே மதுரையிலிருந்து சரண்டர் சர்டிபிகேட்டும் வாங்கியாந்து அப்ளிகேஷனேட 'அட்டாச்சு' பண்ணிக் கொடுத்திருக்கேன்... ஆனல் ஹெட் கிளார்க்... இப்ப சரண்டர் சர்டிபிகேட் கொடுக்கலேங்கருர் சார்... ஆறு மாசமா... நடந்துக்கிட்டிருக்கேன்... இன்னும் கிடைக்கலே... அதனல்..."

"என்னய்யா நீங்க... ஒவ்வொருத்தன் வருஷக்கணக்கா அலேயருன்... மாசத்தைப் பெரிசாச் சொல்றீங்க."

"கார்டு இல்லாம ரொம்பச் சிரமப்படுறேன் சார்... அதுவும் மண்ணெண்ணெய் வாங்கப் படுற அவதியிருக்கே... அது ரொம்பப் பெரிய அவதி சார்..."

"மண்ணெண்ணெய் இல்லாட்டி என்ன? விறகு வாங்கிக்கறது" — குரலில் லேசான கிண்டல் இருந்தது.

"நான் இருக்கிறது வாடகை வீடுங்க. வீட்டுக்காரர் வீடு கொடுக்கிறப்பவே விறகு வைச்சு எரிக்கக் கூடாது, வீடு கெட்டுப் போகும் என்று சொல்லித்தான்... வீடே எனக்கு விட்டார். அடுப்பே இல்லே சார்... சாம்பிராணி புகை போட்டாலே சண்டைக்கு வர்ற ஆளு சார் அவர்!"

"அப்பஎன்ரு எல். பி. ஜி. கேஸ் வாங்கிக்குங்க... இப்பத்தான் தாராளமாக் கிடைக்குதே."



"எந்த ஆஸ்பத்திரியிலும் இல்லாத வசதி உங்க நர்ஸிங் ஹோம்ல இருக்காமே, அப்படி என்ன ஸ்பெஷல்?"

"உயில் எழுத வக்கீல் வசதி உண்டு!"

— குத்தாலம் அமிதா

"அதுக்கு இப்ப இரண்டாயிரம் வேணும். தங்கச்சிக்குக் கல்யாணம் வேறே... இப்ப எனக்கு அது பெரிய்ய தொகை சார்..."

"அப்ப வீட்டைக் காலி பண்ணி வேறே வீடு பார்த்துக்க வேண்டியதுதான்" என்று ஏகத்தாளமாகக் கூறினர்.

"இவ்வளவு குறைஞ்ச அட்வான்ஸ்ல வேறே வீடு... எங்கேயும் பார்க்க முடியாதுங்க... இந்த வீட்டு வாடகையும் கொஞ்சம் குறைச்சல் சார்."

"என்னய்யா... எது சொன்னலும் அதுக்கொரு காரணம் சொல்லிக்கிட்டிருக்கிறே? என்னய்யா ஆளு நீ?" — எனக் கோபத்தில் கத்திவிட்டு அவனைப் பார்க்க விரும்பாமல் குனிந்து எழுத ஆரம்பித்தார்.

அது மண்புழுதான். ஆனலும் எவ்வளவு நேரம் தான் மிதி தாங்கிக் கொண்டிருக்கும். தலேதூக்கிச் சீறியது ரோஷத்துடன்.

"சார்" — அவன் குரல் நிறுத்தி நிதானமாக வெளிவந்தது.

"பிரெஞ்சு மன்னன் லூயியும் அவன் மனைவியும் மேல் மாடத்தில் இருக்கிறப்ப மக்களெல்லாம் பசிக்கு ரொட்டிக் கிடைக்கவில்லேயென்று கீழே நின்று கோபத்தோடு சத்தம் போட்டாங்களாம். அதுக்கு அவன் மனைவி ரொட்டிக்குப் பதில் கேக் சாப்பிடச் சொன்னளாம். அதற்குப் பிறகுதான் பிரெஞ்சுப் புரட்சியே ஆரம்பமானதாம் சார்... அது மாதிரிதான் இருக்கு... நீங்க இப்ப என்கிட்டே சொல்றது ஒவ்வொண்ணும்."

அஸிஸ்டெண்ட் ரேஷனிங் ஆபீஸர் — மறுபடியும் அவனை முறைத்தார். அந்த முறைப்பில் தானேதான் கலெக்டர் என்கிற அதிகாரமிருந்தது.

நம்மால் ஆளப்படும், இந்த ஆட்டு மந்தை,



''இந்தக் குழாயடியில் மட்டும் சண்டை கொஞ்சம் ஜாஸ்தியா இருக்கும்னு எப்படிச் சொல்றே?''

''பாரேன். இதுக்குத் தனியா போலீஸ் அவுட்போஸ்ட் வெச்சிருக்கறதை!''

— கீழை அ. கதிர்வேல்

நம்மைக் கேள்வி கேட்பதா? இது என்ன அயோக்கியத்தனம்? ஒரு ரேஷன் கார்டுக்கு என்னிடம் வந்து கைகட்டி வாய் பொத்தி நிற்கும் இவன் என்னிடம் வரலாறு சொல்வதா? அதுவும் உலக வரலாறு — என மனம் புழுங்கி —

''என்னய்யா... அதிகப் பிரசங்கித்தனமா பேசறே! புரட்சி அது இதுங்கறே... என்ன நினைச்சுக்கிட்டிருக்கிறே. போலீஸைக் கூப்பிடணுமா? நீதான் சரித்திரம் படிச்சிருக்கிறியா? என்னை முட்டாள்னு சொல்லாமல் சொல்றியா? புரட்சி வருமோ... புரட்சி...? சரி... வெளியே போ... ரேஷன் கார்டு தயாரானால் தபால் போடுறோம்... அப்ப வந்தால் போதும்... போய்யா... போ வெளியே'' இந்தக் கோபத்திற்குக் காரணம் தாழ்வு மனப்பான்மையா? அல்லது உயர்வு மனப்பான்மையா?

— பெரிதாகச் சத்தம் போட்டார்.

அவர் போட்ட சத்தத்தால் வெளியே நின்றிருந்த பியூன் எட்டிப் பார்த்தான்.

''சின்னப்பா இந்த ஆளை வெளியே அனுப்பு.''

''சார்'' — என்று ஏதோ சொல்ல வந்தவனை வெளியே இழுத்து வந்தான் பியூன்.

காலையில் மனைவி சொன்னது மறுபடியும் நினைவு வந்தது. உண்மையிலேயே நமக்குத் துப்பில்லையோ? பியூனைப் பரிதாபமாகப் பார்த்தான், அவன்.

பியூன் அவன் கைகளை ஆதரவாகப் பற்றி, ஓரமாகக் கூட்டிச் சென்று, ''சார்... இந்தப் பசங்க இன்னும் எத்தனை வருஷமானாலும்... ஒண்ணும் செய்ய மாட்டானுங்க. நீங்க போய் டி. எஸ். ஓ. வைப் பாருங்க. ரொம்ப நல்லவரு. சின்ன வயசுதான். அவரு கூப்பிட்டுச் சொன்னாருன்னா உடனே செய்வானுங்க.''

''டி. எஸ். ஓ. வா?''

''ஆமாம் சார்... டிஸ்டிரிக்ட் சப்ளை ஆபீஸர்... மாவட்ட வழங்கல் அதிகாரி... பக்கத்தில்தான். இப்படி... நேரே போய் ரைட்ல திரும்புங்க. மாடிப்படி வரும். மாடியில் இருக்கார்... பியூன் இருப்பான். சின்னப்பன் அனுப்பினேன்னு சொல்லுங்க உள்ளே விடுவான்.''

''தேங்க்ஸ் சார்'' — அவன் கைகளைக் கண்களில் ஒற்றிக் கொண்டான்.

அவர் சொன்னபடி சென்று திரும்பிய போது — இளவரசன் பி. எஸ். சி. பி. எல். மாவட்ட வழங்கல் அதிகாரி — என்று போர்டு மாட்டிய அறை எதிரில் நின்றான்.

சின்னப்பன் பெயரைச் சொல்லி, பத்து நிமிடக் காத்திருத்தலுக்குப் பின் உள்ளே அனுமதிக்கப்பட்டான்.

''குட்மார்னிங் சார்'' என்றான் ரொம்பவும் பணிவுடன்.

''குட்மார்னிங்... உட்காருங்க. என்ன வேணும்...?''

இவன் உட்காரத் தயங்கினான்.

''பரவாயில்லை உட்காருங்க'' என்றார் மறுபடியும்.

அவர் யார் மாதிரியும் அதிகாரம் செய்யாமல் அவர் அவராகவே பேசியது இவனுக்கு மகிழ்ச்சியாகவும் ஆறுதலாகவும் இருந்தது.

இனிமேலும் உட்காரவில்லையென்றால், ரேஷன் கார்டு இல்லையென்று சொல்லிவிடுவாரோ எனப் பயந்து, கடைசி நாற்காலியில் பட்டும் படாமலும் அமர்ந்தான்.

உட்கார வைத்துப் பேசும் இந்த அனுபவம் புதுமையாக இருந்தது அவனுக்கு. தலையில் தேவர்கள் பூச்சொரிந்தது போலிருந்தது.

இன்று உறுதியாக ரேஷன் கார்டு வாங்கி விடலாம் என்ற நம்பிக்கை வந்தது.

மனைவி கையில் கொடுத்து நமது துப்பைக் காட்ட வேண்டும் என்ற ரோஷம் வந்தது.

இந்த வழியைக் காட்டிய பியூன் சின்னப்பனுக்கு மறுபடியும் சென்று நன்றி கூற வேண்டும் என்ற நினைப்பும் வந்தது.

இவர்கள் மத்தியில் இப்படியோர் அதிகாரியா! இப்படியே நெடுஞ்சாண் கிடையாக இவர் காலில் விழவேண்டும் என மனம் விரும்பியது.

உட்கார வைத்துப் பேசுகிறாரே!

''யெஸ் சொல்லுங்க என்ன வேணும்'' என்று புன்சிரிப்புடன் மறுபடியும் டி. எஸ். ஓ. கேட்டார்.

ஆறு மாதத்திற்கு முந்தி அப்ளிகேஷன் போட்டது. ஹொட்கிளார்க் சரண்டர் சர்டிபிகேட் இல்லையென்றுசொன்னது. ரேஷனிங் ஆபீசரைப் போய்ப் பார்த்து, விரட்டப்பட்டு வந்தது. மண்ணெண்ணெய்க்குப் படுற கஷ்டம், பின் குடியிருக்கும் வீட்டுக்காரரிலிருந்து ரேஷன்


எல்லோரும்...
..எல்லோரும்...
..எல்லோரும்...
எல்லோருமே
விரும்புவது
நியூட்ரின்
ட்விங்க்
Twink
SOFT DRINK CONCENTRATE
Orange
nutrine
• ஆரஞ்சு
• லெமன்
• மேங்கோ
• பைனாப்பிள்
• கிரேப்
ட்விங்க்
ஸாஃப்ட் டிரிங்க் கான்ஸன்ட்ரேட்
சுவைகளும் புதுமை, சுவைத்திட இனிமை
ACIL/090/87-Tam

கார்டுக்காக மனைவியின் உப்பும் துப்பும் வுரை அழமாட்டாத குறையாய்ச் சொல்லி முடித்து.

"சார்... என் தங்கச்சியின் திருமணத்துக்குப் பி. எஃப்ல கடன் கேட்டிருக்கேன். அதுக்கொரு எவிடென்ஸா பி. எஃப் இன்ஸ்பெக்டர் ரேஷன் கார்டை 'செக்' பண்ணிட்டுத்தான்... சிபாரிசு பண்ணி அனுப்புவேன்னு சொல்றாரு சார்" என்று அனைத்தையும் கூறி முடித்து, பாலுக்கு அழும் குழந்தை போல ரேஷன் கார்டுக்கு அவரிடம் யாசித்தான்.

"நீங்க சரண்டர் சர்டிபிகேட் உறுதியா அட்டாச் பண்ணீங்களா?"

"சத்தியமா சார்..." — எழுந்து நின்று கும்பிட்டான்.

டி. எஸ். ஓ. அவனை அமர்ந்து பேசுமாறு சைகை செய்தபடி —

"சரி, பார்க்கிறேன்... சீஃப் செகரட்டரி புதுக்கார்டு இஷ்யூ பண்ணக் கூடாதுன்னு ஜி. ஓ. போட்டிருக்கார். இல்லாட்டி ஏதாவது ஸ்பெஷல் கேஸுன்னு போட்டுக் கொடுக்க ஏற்பாடு பண்றேன்" எனக் கூறி அவர் காலிங் பெல்லை அழுத்தப் போன போது —

தொலைபேசி கிணுகிணுத்தது.

"ஹலோ... டி. எஸ். ஓ. இளவரசன் ஹியர்... பிளீஸ் சத்தமாப் பேசுங்க... யாருங்க... மினிஸ்டர் பி. ஏ. வா? குட்மார்னிங் சார்... எஸ்... சொல்லுங்க... நேத்து பிடிச்சது சார்... ஐந்து லாரி லோடு... கூட ரெண்டு புட்செல் இன்ஸ்பெக்டர்ஸ்... மதுக்கரைப் பக்கத்திலே சார்... எல்லாமே ரைஸ் தான்... கேரளாவுக்குப் போய்க்கிட்டிருந்தது. டிரைவர்ஸ் போலீஸ் கஸ்டடியிலிருக்காங்க... என்ன லாரியெல்லாம் ரிலீஸ் பண்றதா...? நோ... எவ்வளவு சிரமப்பட்டுப் பிடிச்சிருக்கோம்... நியூஸ் பிரஸ்ஸுக்குக் கொடுத்து மார்னிங் பேப்பர்ஸ்ல பப்ளிஷ் ஆகியிருக்கு சார்... மினிஸ்டரோட... ரிலேட்டிவ்ஸா..? முடியாது சார்... நான் விட முடியாது... மினிஸ்டர்கிட்டே போறீங்களா...? போகட்டுமே. ஆல்ரைட் நீங்க கலெக்டர் கிட்டேயே பேசிக்குங்க... நான் செய்ய மாட்டேன்."

போன் கட்டாகியிருக்க வேண்டும். ரிஸீவரைக் கையில் பிடித்த வண்ணம் போனையே வெறிக்கப் பார்த்தார்.

முகமும் கண்களும் கோபத்தால் சிவந்திருந்தன. — ரிஸீவரை வைத்து விட்டு மௌனமாக வெறித்தார் டி. எஸ். ஓ.

இவன் பக்கம் திரும்பி ஏதோ சொல்ல நினைத்தவர் அதை விடுத்து,

"ஆல் ரைட்... நீங்க நாளைக்கு வாங்க. நாளைக்கி... ம்... வாங்க... நாளைக்கு இந்த சீட்ல நான் இருந்தேன்னா... என்னை வந்து பாருங்க. இப்ப அவசரமா... நான் வெளியே போகணும்" என எழுந்து கொண்டார்.

அவர் நல்ல உயரம்.

அவன் நாளைக்கும் வருவான்!

மாணவர்கள் வளர்க்கும் கல்விக் கூடம்


'கிராமப்புற மாணவர்களுக்கே எங்கள் தொழிற்கல்வி நிலையத்தில் முன்னுரிமை' என்றொரு புரட்சிக்குரல் ஒலிக்கிறது காவிரிக் கரையில். எல். கே. ஜி. அட்மிஷன் இண்டர் வியூவில் கூடப் பெற்றோர் படித்தவர்கள் தானா என்று கேட்பதைப் போல், இங்கேயும் பெற்றோரின் படிப்பைப் பற்றிக் கேட்கத் தான் செய்கிறார்கள். ஆனால் இடம் தருவதோ படிப்பறிவற்றவர்களின் பிள்ளைகளுக்குத் தான்! வியப்பாக இருக்கிறதல்லவா?


திருச்சி மாவட்டம், மகாதானபுரம் என்ற கிராமத்தில் ஆசாரமான அக்கிரஹாரத்துக் குடித்தனங்களுக்கு மத்தியில் கலாசாரக் கூடம் ஒன்று அமைதியாக மலர்ந்து மணம் பரப்பிக்கொண்டிருக்கிறது. எம். டி. வெங்கட் ராமய்யர் அறக்கட்டளை நடத்தும் எம். வி. முத்துக்கிருஷ்ண ஐயர் தொழிற்பயிற்சி நிலையம்தான் அது.

தாளாளர் ராதாகிருஷ்ணனைச் சந்தித்தோம். "தற்காலத்தில் வெறும் கல்வி மட்டுமே மாணவர்களுக்குத் தரப்படுகிறது. ஒரு வேலை கிடைக்கவும், வயிற்றை நிரப்பவும் மட்டும்தான் கல்வி என்ற நிலை உருவாகியிருக்கிறது. அப்படியில்லாமல் ஒழுக்கம், கட்டுப்பாட்டுடன் கூடிய பண்பாட்டுக் கல்வியைப் போதித்தால்தான் கல்வியளிப்பதன் நோக்கம் நிறைவேறும்" என்கிறார் இந்த முப்பத்தேழு வயது ஆசாரமான இளைஞர். இவரிடம், புதியதோர் இளைய சமுதாயத்தை உருவாக்கும் வேகம் பண்டிக் கிடப்பதை உணர முடிந்தது.

பண்பாடு என்பது எல்லா மதங்களுக்கும் பொதுவானது என்கிறார் இவர். "மாணாக்கன் இந்துவாகவோ, கிறிஸ்துவனாகவோ,

* விழா ஒன்றில் உரையாற்றுபவர் தாளாளர் ராதாகிருஷ்ணன்.





* ஒரு வகுப்பறை.



"எங்க தொகுதி எம்.எல்.ஏ.வுக்குத் தமிழ்ப் பற்று அதிகம்... அதனாலே, லஞ்சம் வாங்க மாட்டார்..."

"பரவாயில்லையே...!"

"இலஞ்சம்னுதான் கேட்டு வாங்குவார்!"

— ராஜு

முஸ்லிமாகவோ இருக்கலாம்; அவரவர் மதக்கோட்பாடுகளைப் பின்பற்றலாம். ஆனால் மாணாக்கனுடைய பண்பாடு இந்தியப் பண்பாடுதான். இந்த மதத்தில் ஓர் ஒழுக்கம், அந்த மதத்தில் ஓர் ஒழுக்கம் என்றில்லை. ஒழுக்கமாக இருப்பது, உண்மை பேசுவது, நேர் வழியில் நடப்பது இதெல்லாம்தான் பண்பாடு. இதனைத்தான் இங்கு வலியுறுத்துகிறோம்'' என்றார்.

"அதுசரி, பண்பாட்டுப் பயிற்சிக்கும், ஐ. டி. ஐ. கல்விக்கும் என்ன சம்பந்தம்?'' என்று கேட்டோம்.

பதில் அவருக்கே உரித்தான ஆன்மிகச் சுவையுடன் வந்தது: ''ஒரு மனிதனின் வயிறு நிறைந்திருந்தால்தான் அவன் செவி நல்லதைக் கேட்கும். நல் வழியில் நடக்க மனமும் இசையும். நாங்கள் நினைத்திருந்தால் இங்கே ஒரு ஹையர் செகண்டரி ஸ்கூலோ அல்லது கல்லூரியோ தொடங்கியிருக்கலாம். ஆனால் எதிர்காலத்தில் மாணாக்கனின் வாழ்க்கைக்குப் பொருளாதார ரீதியில் 'உத்திரவாதம் கிடைக்க வேண்டும் என்பதற்காகத்தான் ஐ. டி. ஐ. தொடங்கினோம். படிக்கும் காலத்தில் இவர்கள் எதிர்காலம் பற்றிய பயமோ, கவலையோ இல்லாமல் பண்பாட்டையும் சிறப்பாகப் பழகுகிறார்கள்,'' என்றார்.

இந்நிலைய மாணவர்கள் அன்றாடம் பிரார்த்தனை நடத்துகிறார்கள். பிரார்த்தனையில் மதவேறுபாடின்றி எல்லா மதத்தைச் சேர்ந்த பாடல்களும் இசைக்கப்படுகின்றன. ''ஆகாயத்திலிருந்து விழும் நீர் பல ஆறுகளாகப் பிரிந்து சென்றாலும் ஒரு கடலில்தான் சங்கமிக்கிறது. அதுபோல் நம் எல்லோருடைய பிரார்த்தனைகளும் இறைவனைச் சென்றுதான் அடைகின்றன'' என்ற அழகான விளக்கமும் கிடைத்தது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன் ஒரு ஜமுக்காளத்தில் உட்கார்ந்து ஆரம்பிக்கப்பட்ட இந்நிலையம் இன்று சிவில் டிராப்ட்ஸ்மென், ஃபிட்டர், ஆட்டோமொபைல் என்ற செக்ஷன்களில் 162 மாணவர்களுடன் வளர்ந்து நிற்கிறது. மாணவர்களே மிகுந்த ஆர்வத்துடன் கல்லைத் தூக்கி, மண் சுமந்து, மேஜை, நாற்காலி, ஸ்டாண்ட் செய்து இந்நிலையத்தை அங்குலம், அங்குலமாக வளர்த்திருக்கிறார்கள். இன்னும் சொல்லப் போனால் இன்ஸ்டிட்யூட் கல்வியை வளர்க்கிறது. மாணவர்கள் இன்ஸ்டிட்யூட்டை வளர்க்கிறார்கள்!

நிலையத்தைச் சுற்றி வந்தோம். மிலிடரி ஒழுங்குக்கு ஒப்பான கட்டுப்பாட்டையும், அமைதியையும் அங்கே காண முடிந்தது. ''இந்தப் பண்பாடு போதனையால் ஒழுக்கம் வேண்டுமானால் வரலாம். ஆனால் மாணவர்களுக்குத் தைரியமும், ஊக்கமும் வருமா?'' என்று வினவினோம்... இல்லை... லேசாகச் சீண்டினோம். எரிச்சலான பதிலுக்குக் காத்திருந்தோம். ஏமாற்றம்தான். ''நிச்சயம் வரும் சார்! ஆற்றல் உருவாவதற்கு ஒழுங்கு தேவை. உதாரணமாக ஓர் ஆற்றின் இருகரைகளையும் வெட்டிப் போட்டு விட்டால் யாருக்குப் பிரயோஜனம்? ஆனால் அதையே இரண்டு கரைகளுக்கு உட்படுத்தினால் ஆற்றலுடன் பாய்ந்து, ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களுக்கு விளைச்சலைக் கொடுக்குமல்லவா?''

விடுதி வசதி இன்னும் ஏற்படுத்தப்படவில்லை. ஆனால் வெளியூரிலிருந்து வரும் ஏழை மாணவர்களின் உணவுப் பிரச்னையைச் சுலபமாகத் தீர்த்து வைத்திருக்கிறார்கள். அக்கிரஹாரத்திலுள்ள சில வீடுகளில், வீட்டிற்கு இரண்டு மாணாக்கர்கள் வீதம் சாப்பாடு தர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது! மாணவர்களும் தங்களால் இயன்ற தொகையைத் தந்து சாப்பிடுகிறார்கள். இதனால் சில ஏழைக் குடும்பங்களும் பயன் பெறுகின்றன.


டிரஸ்டின் தலைவர் திரு. ராஜாராம். எந்த அரசியல் கட்சியிலும் தன்னை இணைத்துக் கொள்ளாமல் இப்பகுதியில் பெரும் புள்ளியாகத் திகழும் இவர், இன்ஸ்டிட்யூட்டின் வளர்ச்சிக்குத் தம் சொந்தச் செல்வாக்கைப் பெரிதும் உபயோகித்து வருகிறார்.

விளை நிலங்களும், சில வீடுகளும் மட்டுமே உள்ள மகாதானபுரம் கிராமம், சிறந்த குடிமக்களை உருவாக்கும் 'மகத்தானபுரமாக' மாறிக் கொண்டு வருகிறது.

— பாபுஜி – பழனிவேல்.

பரதன் அச்சகத்தில் அச்சிட்டவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிட்டவர் வி. வைத்தியநாதன். ஆசிரியர்: இ. ராஜேந்திரன்.
நிர்வாகக் காரியாலயம்: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை—600 032. போன்: 431543 434157.
ஆசிரியர் குழு அலுவலகம்: 28, ஐந்தாவது தெரு, ஏரி வட்டம், நுங்கம்பாக்கம், சென்னை—600 034. போன்: 473389.
ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ 78/—; வெளி நாடு கப்பல் தபால் ரூ 250/—; விமானத் தபால் ரூ 650/—. (ஆறு மாதச் சந்தா ஏற்கப்படும்.)

“தாங்க முடியாத வலின்னு சொன்னியே—
இப்ப என்ன ஆச்சு?”





மேம்படுத்தப்பட்ட அமிர்தாஞ்சன் மிருதுவானது; எனவே தடவுவதற்கு எளிதானது. மேலும் மென்மையானது; எனவே தேய்ப்பதற்குச் சுலபமானது.

மேம்படுத்தப்பட்ட அமிர்தாஞ்சன் தலைவலி, உடல்வலி, தசைவலி, சுளுக்கு... எதையும் விரைவில் போக்குகிறது — முன்பு எப்போதையும் விட விரைவாக!

மேம்படுத்தப்பட்ட

அமிர்தாஞ்சன்

மீண்டும் புன்னகை மலரச் செய்கிறது — விரைவாக!

OBM 149 TM


மீண்டும் பார்க்கத் தூண்டும் ஜொலிப்பு...
மின்னலடிக்குது ஸூப்பர் ரின் வெளுப்பு.
SUPER
RIN
STRIKES WHITER
மின்னலடிக்கும் ஸூப்பர் ரின்– அதி வெண்மை.
இதர டிட்டர்ஜெண்ட் வில்லை, பார் எதனையும் மிஞ்சும் வெண்மை.
இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு